

# தத்தாத்திரேயர் சரித்திரம்


எழுதியவர்

**சாந்திப்பிரியா**

( nrj1945@gmail.com )


## *பிரும்மாவின் படைப்பு*

ஜென்ம ஜென்மாந்திரங்களுக்கு முந்தைய காலம் அது. பிரபஞ்சத்தின் துவக்கமே இல்லாத காலம். புராணங்களின்படி உருவமற்று இருந்த *பரமாத்மன்* என்ற எதோ ஒரு சக்தி மட்டுமே இயங்கிக் கொண்டு இருந்த காலம் அது. பரமாத்மன் என்ற சக்தியே பராசக்தி எனப்படுபவள் என்றே சௌந்தர்யலஹரி, சக்தி புராணங்கள் போன்ற நூல்களில் இருந்து அறிகின்றோம். மூன்று தெய்வங்களான பிரும்மா, விஷ்ணு , சிவன் மூவரையும் உள்ளடக்கி நின்றவள் அந்த பராசக்தி.

ஒரு முறை பரமாத்மன் என்ற அந்த உருவமற்ற சக்தி பதினான்கு உலகையும் படைக்க எண்ணி அதற்குத் தேவையானவர்களான பிரும்மா, விஷ்ணு, மகேஷ்வரர்களைப் முதலில் படைத்தாள். பிரபஞ்சத்தின் முதல் பகுதி துவங்கியது. படைக்கப்பட்ட அந்த மூவரில் படைக்கும் ஆற்றலைப் பெற்ற பிரும்மாவோ, சற்றும் தாமதிக்காமல் தான் தோற்றுவிக்கப்பட்ட உடனேயே பன்னிரண்டு உலகங்களையும், அற்புதமான எண்ணற்ற ஜீவராசிகளையும் படைக்கத் துவங்கினார். மனித குலம் உயிர் பெறத் துவங்கியது.

சிருஷ்டியை துவங்கிய பிரும்மாவோ அதன் ஆரம்பமாக ஏழு தேவ ரிஷி முனிவர்களான அங்கீரச, அத்ரி, வஷிஷ்டர், புலசா, புலத்தியா, மார்கசி, மற்றும் க்ராது என்பவர்களை படைத்தார். அப்படி படைக்கப்பட்ட பிரும்மாவின் மானசீக புத்திரர்களில் அத்ரி முனிவர் இரண்டாமவர் ஆவார். அதைத் தொடர்ந்து பிரும்மாவின் உடலின் இருந்த அனைத்து பகுதிகளில் இருந்தும் பல்வேறு குணங்களைக் கொண்ட படைப்புக்கள் மெல்ல மெல்ல வெளிவரத் தோன்றியவண்ணமே இருக்க, முனிவர்களிலும் மேலான முனிவரான கர்த்தபிரஜாபதியும் பிரும்மாவின் ஒரு பக்கத்தில் இருந்து அவதரித்தார்.

இப்படியாக உலகம் தோன்றி சில காலம் உழன்றது. படைக்கப்பட்ட பலவுலகப் பிறவிகள் தங்கள் இஷ்டப்படி கட்டுக் கோப்பின்றி வாழத் துவங்கினர். தான்னால் கஷ்டப்பட்டு படைக்கப்பட்ட பிறவிகள் கட்டுக் கோப்பின்றி வாழத் துவங்கினதினால் பல காலத்திற்குப் பிறகு உலக வாழ்கையினால் ஏற்பட இருந்த பின் விளைவுகளைப் பற்றி மனக் கண்ணால் கண்ட பிரும்மா கவலையுற்றார். வாழ்கையில் ஒழுக்கம் இன்றி உன்னதமான ஆன்மீக வாழ்கையை உருக்குலைத்த வண்ணம் தான் தோன்றித்தனமாக பூவுலகப் பிறவிகள் வாழ்வதைக் கட்டுப்படுத்தி அவர்களை நல்ல நிலைக்கு

வழி நடத்திச் செல்லும் ஒரு மார்கத்தைத் துவக்க எவரையாவது படைக்க வேண்டும் என்ற அவசியம் எழுந்து விட்டதை உணர்ந்தார். மனதில் நீண்ட நேரம் பல்வேறு நிலைமைகளையும் தீர ஆலோசித்தார். பிரகதியைப் படைத்த பொழுது அவர்களுடன் வெளி வந்திருந்த நியதிகளும் வேத மறைகளும் ஒரு உண்மையை வெளிப்படுத்தி இருந்தன. பூவுலகப் பிறவிகள் தான் தோன்றித்தனமாக வாழ்வதைக் கட்டுப்படுத்தி நல்ல நிலைக்கு அவர்களை வழி நடத்திச் செல்லும் மார்கத்தைக் காட்ட வேண்டும் எனில் ஆரம்பத்தில் அவர் படைத்திருந்த ஏழு தேவ ரிஷி முனிவர்களில் ஒருவரான அத்ரி முனிவருக்குப் பிறக்கும் பிள்ளையினால் மட்டுமே அதை செய்ய முடியும் என்பதே அந்த உண்மை. என்ன செய்யலாம் என நிதானமாக பல்வேறு பிரச்சனைகளையும் ஆராய்ந்து யோசித்துப் பார்த்த பொழுது அவருக்குக் புரிந்தது அந்த உண்மை.

## *அத்ரி முனிவர் திருமணம்*

அத்ரி முனிவர் திருமணமாகாதவர். நியதிகளின் விதிப்படி அத்ரி முனிவர் மற்றும் அவருடைய மனைவிக்கு ஒரு உத்தமமான பிள்ளை பிறக்க வேண்டும். அப்படி பிறக்கும் மகன் மூலமே உருக்குலைத்த வண்ணம் தொடர்ந்து கொண்டிருக்கும் ஆன்மீக வாழ்கையை சீர்படுத்த முடியும். அதை அவர் மூலம் பிறக்கும் பிள்ளையினால் மட்டுமே செய்ய முடியும் என்று இருந்ததினால் திருமணமே ஆகாத அத்ரி முனிவர் மூலம் அந்த செயலை எப்படி செய்வது என்பது ஒரு பிரச்சனையாக இருந்தது. அதற்கு முன்னோடியாக திருமணமாகாத அத்ரி முனிவரிடம் சென்று திருமணம் செய்து கொள்ள அவரை சம்மதிக்க வைக்க வேண்டும். அதற்கான காரணங்களை அவரிடம் விளக்கமாகக் கூற வேண்டும். இல்லை எனில் அவர் திருமணம் செய்து கொள்ள மறுத்து விடுவார். ஆகவே அவருக்கு எப்படித் திருமணத்தை நடத்தி வைப்பது , யாரை மனைவியாக அமைப்பது, இதற்கு என்ன செய்யலாம் என யோசனை செய்த பொழுது நல்ல வழி தெரிந்தது.

முனிவர்களைப் படைத்த பொழுது பிரும்மாவினால் படைக்கப்பட்டு இருந்த ஒரு மாமுனிவர் கர்த்தபிரஜாபதி என்பவர் ஆவார். கர்த்தபிரஜாபதி பிறந்த பல காலத்திற்கு பின்னர் பிரும்மாவின் பேத்தியையே திருமணம் புரிந்து கொண்டு அவள் மூலம் ஒன்பது பெண்களைப் பெற்று எடுத்து இருந்தார். கர்த்தபிரஜாபதிக்குப் பிறந்திருந்த அந்த ஒன்பது பெண்களில் அதி உத்தமமானவளும் நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்து இருந்தவள் அனுசூயா என்ற ஒரு பெண். அவளை எப்படியாவது சம்மதிக்க வைத்து அத்ரி முனிவருக்கு அவளையே திருமணம் செய்து கொடுத்து விட்டால் அவர்கள் மூலம் ஒரு பிள்ளையை பிறக்க வைத்து அந்தப் பிள்ளை மூலம் உருக்குலைத்த வண்ணம் மனிதர்கள் தொடர்ந்து கொண்டிருந்த வாழ்கையை கட்டுப்படுத்தி , அவர்களை நல் வழியில் கொண்டு செனறு உலகில் ஆன்மீக வாழ்கையை சிறப்பாக அமைய வைக்கலாம் என்று நம்பி அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளலானார்.

அதற்கேற்றபடி அரங்கேறி நடந்த பல்வேறு நிகழ்சிகளினால் அத்ரி முனிவர் கர்த்தபிரஜாபதிக்குப் பிறந்திருந்த அனுசூயாவை மணந்து கொண்டார். ஆனால் விதிப் பயனாக அதிலும் பிரும்மா நினைத்தபடி நிகழ்சிகள் நடந்தேறவில்லை. திருமணம் ஆகி பல்லாயிரம் ஆண்டுகள் ஆனாலும் அந்தத் தம்பதியினருக்கு எந்த ஒரு மழலை செல்வமும் கிடைக்கவில்லை. மனதில் வருத்தத்துடன் வாழ்ந்து கொண்டு இருந்தனர். இன்னமும் தனக்கு ஒரு மழலை செல்வம் கிடைக்கவில்லையே என்று வருத்தமுற்ற அத்ரி முனிவர் தனக்கு ஒரு மழலைச் செல்வம் வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஒற்றைக் காலில் நின்றபடி பல வருடங்கள் கடுமையான தவத்தில் இருக்கலானார்.

ஒற்றைக் காலில் நின்றபடி பல வருடங்கள் கடுமையான தவத்தில் இருந்த அவருடைய வைராக்கியத்தைக் கண்டு தேவர்கள் திகைத்து நின்றனர்.

அதுவே தக்க தருணம் என பிரும்மா நினைத்தார் . மூன்று தனித் தெய்வங்களாக - பிரும்மா, விஷ்ணு, சிவன்- என்று தனித் தன்மைகளுடன் தாங்கள் படைக்கப் பட்டிருந்தாலும், தன் எண்ணம் ஈடேற வேண்டும் என்றால், கடுமையான தவத்தில் ஆழ்ந்து இருக்கும் அத்ரி முனிவரின் தவத்தை மெச்சும் வகையில் அவர் முன் மும்மூர்த்திகளாகச் சென்று காட்சி தர வேண்டும். அப்பொழுது தனக்கு ஒரு மழலைச் செல்வம் வேண்டும் என்று வேண்டியபடித் தவமிருக்கும் அத்ரி முனிவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அவர் விரும்பும் வளமான மழலைச் செல்வத்தை அளிக்க வேண்டும். அப்படிச் செய்வதின் மூலமே பிரச்சனைக்கு ஒரு வழி பிறக்கும் .

பிரும்மா நினைத்தபடியே அடுத்தடுத்து நிகழ்சிகள் நடைபெறலாயின. அத்ரி முனிவரின் தவத்தினை மெச்சி அவருக்கு மும்மூர்த்திகளும் காட்சி தந்தனர். விரைவிலேயே அவருக்கு தாங்கள் அம்சமாகவே ஒரு பிள்ளை தோன்றுவார் என்று ஆசி கூறிச் விட்டுச் சென்றனர் என்றாலும் உண்மையில் மும்மூர்த்திகளில் பகவான் விஷ்ணுவே பின்னர் அந்தப் பிள்ளைாகப் பிறக்க இருந்தார். அதற்கு ஒரு பின்னணிக் காரணம் இருந்தது. மும்மூர்த்திகளும் தாங்கள் அம்சமாகவே ஒரு பிள்ளை அவர்களுக்குப் பிறப்பார் என்று ஆசி கூறிச் விட்டுச் சென்றதினால் அத்ரி முனிவர்-அனுசுயா தம்பதியினர் அடைந்த மகிழ்சிக்கு எல்லையே இல்லை. அந்த அத்ரி முனிவரும் அனுசூயாவும் எப்படிப்பட்ட தம்பதியினர் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம். கற்பின் சின்னம் அனுசூயா. தவ வலிமையின் சின்னம் அத்ரி முனிவர். நன்கு சீவி முடித்த தலை, கழுத்தில் ருத்திராட்ச மாலைகள், ஒரு கையில் கமண்டலம், இன்னொரு கையில் ஒரு தண்டம் (கழி) இதுவே அத்ரி முனிவர் வைத்து இருந்தவை.

## *அத்ரி முனிவரின் பெருமைகள்*

அத்ரி முனிவரின் பெருமை எப்படிப்பட்டது தெரியுமா? ஒருமுறை

வசிஷ்டருக்கும், விஸ்வாமித்திர முனிவருக்கும் தீராத அளவுக்குப் பகை உண்டாயிற்று. அந்த சமயத்தில் வஷிஷ்ட முனிவர் இருந்த நாட்டை ஆண்டு வந்த கல்மசபாதா என்ற மன்னன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடச் சென்ற பொழுது அங்கு வஷிஷ்டரின் மகனைக் கண்டான். மன்னன் கல்மசபாதாவிற்கு வஷிஷ்டரின் மகன் யார் என்று தெரியாததினால், காட்டில் வேட்டையாடச் சென்ற பொழுது அங்கு இருந்த வஷிஷ்டரின் மகனைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டான். அதனால் தன்னை மரியாதைக் குறைவாக நடத்தி விட்டான் என்று வஷிஷ்டரின் மகனகளில் ஒருவரான சக்தி என்பவர் தவறாக எண்ணிக் கொண்டு கல்மாசபாதாவை ஒரு இராக்ஷசன் ஆகும்படி சாபமிட்டு விட்டார். அந்த சாபத்தினால் இராக்ஷசனாக மாறினான் கல்மபாதா. இராக்ஷசனாக மாறிய கல்மசபாதாவோ தெரியாமல் செய்த தன் தவறுக்கு இப்படி ஒரு தண்டனையை வஷிஷ்டரின் மகன் சக்தி தந்து விட்டாரே என மனம் புழுங்கி அதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணினான். வஷிஷ்டரின் பரம எதிரி போல செயல்பட்டுக் கொண்டு இருந்த விஸ்வாமித்திர முனிவரிடம் சென்று தனக்கு உதவுமாறு வேண்டி நின்றான். வஷிஷ்டருக்கு அப்படி ஒரு நிலைமை வராதா என்று எதிர் பார்த்துக் காத்திருந்த விஸ்வாமித்திர முனிவரும் உடனடியாக தன் முழு ஆதரவையும் கல்மபாதாவுக்குத் தர, அதைப் பெற்றுக் கொண்டவன் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் வஷிஷ்டரின் அனைத்து மகன்களையும் பிடித்து கொன்று விழுங்கினான். மகன்கள் அனைவரையும் இழந்து நின்ற வஷிஷ்டர், மனம் துடித்துப் போய் வருத்தத்தில் ஆழ்ந்து, செய்வதறியாது அதற்கு ஒரு வழி தேடிய வண்ணம் தவத்தில் அமர்ந்து விட்டார்.

அந்த சமயத்தில்தான் வஷிஷ்டரின் மகன் சக்தியின் மனைவி கர்பமுற்று இருந்தாள். கணவனைப் பறி கொடுத்த வருத்தத்தில் இருந்த அவளுக்கு சில மாதங்களுக்குப் பின்னர் ஒரு மகன் பிறந்தான். பிறந்த மகன் வளர்ந்து

பெரியவன் ஆனான். மெல்ல மெல்ல நடந்த முடிந்திருந்த அனைத்து நிகழ்சிகளையும் பற்றி அறிந்து கொண்டான். மனதில் கோபம் துளிர் விட்டது, அது கோபக் கனலாய் மாறியது. தன்னுடைய குடும்பத்திற்கு கல்மாசபாதா என்ற இராக்ஷசனால் ஏற்பட்ட கொடுமைக்கு பழி தீர்க்க முடிவு செய்து அனைத்து இராக்ஷசர்களையும் பூண்டோடு அழிக்க எண்ணி பெரிய யாகம் செய்யத் துவங்கினான். அந்த யாகம் வளரத் துவங்கி வெற்றி பெற்றால், வஷிஷ்டர் மற்றும் விஸ்வாமித்திர முனிவர்களுக்கு இடையிலான பகை இன்னமும் அதிகரிக்கும். அது உலகிற்கு நல்லது அல்ல என்பதை உணர்ந்து கொண்ட அத்ரி முனிவர், யாகம் நடந்து கொண்டிருந்த இடத்திற்குப் போய் அந்த யாகத்தின் பலனால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளைப் பற்றி வஷிஷ்டரின் பேரனிடம் விரிவாக எடுத்துக் கூறி அவன் மனதைத் தேற்றிய பின்னர் அவர் நடத்திக் கொண்டு இருந்த யாகத்தை தடுத்து நிறுத்தினார். அதன் விளைவாக வஷிஷ்டர் மற்றும் விஸ்வாமித்திர முனிவர்களுக்கு இடையே வளர இருந்த பகை குறையலாயிற்று.

அத்ரி முனிவரின் சக்திக்கு மற்றும் ஒரு சம்பவம். ஒருமுறை அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் கடுமையான போர் மூண்டதில் இரு பக்கத்தில் இருந்தும் பறந்து வந்த அம்புகளும், ஆயுதங்களும் தொடர்ந்து மழை பெய்வது போல வானில் பறந்து விழுந்த வண்ணம் இருக்க, அம்பு மழைகள் சூரிய-சந்திர ஒளிகளையே முழுவதுமாக மறைத்துக் கொண்டு நின்றன. அதனால் தேவர்கள் அந்த இருட்டில் யுத்தம் செய்ய முடியாமல் தடுமாறத் துவங்கினர். பயந்து போன தேவர்கள் அத்ரி முனிவரின் துணையை நாடி ஓட, இருட்டில் தடுமாறத் துவங்கிய தேவர்களைக் காப்பாற்ற தன் தவ வலிமையினை உபயோகித்து அத்ரி முனிவர் தானே சூரிய-சந்திரனாக உதித்து ஒளி கொடுத்து யுத்தத்தில் தேவர்களுக்கு உதவி அவர்களைக் காத்தார்.

## அனுசூயாவின் கதை

அத்ரி முனிவர் அப்படிப்பட்ட குணம் உடையவர் என்றால் அவருடைய மனைவி அனுசூயா மட்டும் சளைத்தவராகவா இருப்பார்? மார்கண்டேய புராணத்தில் கூறப்பட்டுள்ள இந்தக் கதையை படித்தால் அவளுடைய பெருமைப் புரியும்.

பல காலத்துக்கு முன், கௌசிகா என்றொரு பிராமணண் வாழ்ந்து வந்தான். பூர்வ ஜென்மத்தில் ஏற்பட்டிருந்த கர்ம வினைப் பாவத்தினால் அவன் தன்னுடைய அனைத்து செல்வங்களையும் ஒரு விலை மாதுவிடம் இழந்து விட்டான். பல காலமாக அவளுடன் அவன் தொடர்ந்து கொண்டிருந்ததினால் அதிக காம வேட்கை அவன் உடலில் தீராத நோயை தந்திருந்தது. அவனுக்கு ஷீலாவதி என்ற அதி உத்தமமான நற்குணங்கள் நிறைந்த மனைவி அமைந்து இருந்தாள். ஷீலாவதி கணவனின் சுகமே தன்னுடைய வாழ்கை என்று எண்ணியபடியே பதி விரதையாக வாழ்ந்து வந்தார். கணவன் எப்படி இருந்தாலும் பதி விரதைகளுக்கு கணவனே கண்கண்ட தெய்வம் என்பது அவளது எண்ணம். அவன் உயிருடன் உள்ளவரைதான் தனக்கும் பெருமை என்று தாலி பாக்கியத்தை நினைத்தே வாழ்ந்தவள். அனுசூயாவிற்கு நிகராகவே கணவனுக்கு பணி விடை செய்து வந்த கற்புக்கரசி அந்த ஷீலாவதி. நோயுற்று வீட்டில் முடங்கிக் கிடந்த கணவனோ ஒரு நாள் அவன் வீட்டு வழியே சென்ற அந்த விலை மாதுவை எதேற்சையாகப் பார்த்து விட்டான். அவள் மீதான ஆசை அவன் மனதை அரிக்கத் துவங்கியது. அவளிடம் மீண்டும் சென்று சல்லாபிக்க ஆசைப்பட்டான். மனதைக் கட்டுப் படுத்த இயலாமல் மனைவியிடம் தன் ஆசையைக் கூறி அவளிடம் ஒரு முறை தன்னை அழைத்துச் செல்லுமாறு கெஞ்சிக் கேட்டான். கணவன் மகிழ்சியே தனக்கு தேவை என்று எண்ணிய ஷீலாவதியும் வேறு வழித் தோன்றாமல் இருட்டு ஆனதும் கணவனைத் தன் தோளில் துாக்கிக் கொண்டு அந்த தாசி வீட்டிற்கு செல்லத் துவங்கினாள்.

போகும் வழியில் அவன் கால்கள் ஈட்டி போன்ற ஆயுதத்தால் குத்தப்பட்டு மரணத்துடன் போராடிக் கொண்டு வழியில் கிடந்த மாண்டவ்ய முனிவர் என்பவர் மீது பட்டு விட்டது. மாண்டவ்ய முனிவர் அங்கு எப்படி வந்தார்?

மாண்டவ்ய முனிவர் விழுந்து கிடந்த அந்த இடத்தில்தான் சில நாட்கள் முன்னர் அவர் மௌன விரதம் பூண்டு தவத்தில் ஆழ்ந்து இருந்தார். அப்பொழுது அரச சேவகர்கள் சில திருடர்களைத் துரத்திக் கொண்டு அந்த வழியாக ஓடி வந்து கொண்டிருந்தனர். மாண்டவ்ய முனிவர் தவத்தில் இருந்த இடத்தின் அருகில் இருந்த புதரில் புகுந்து திருடர்கள் தப்பி ஓடி விட்டனர். அவர்கள் எப்படித் தப்பிச் சென்றனர் என்றும் அவர்கள் தப்பிச் சென்ற வழியையும் தெரியாமல் விழித்த அரச சேவகர்கள் அந்த இடத்தில் மௌன விரதம் பூண்டு தவத்தில் இருந்த முனிவரிடம் சென்று அந்தத் திருடர்கள் எந்தப் பக்கம் ஓடினார்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டனர். அவர் மௌன விரதம் பூண்டு தவத்தில் இருந்ததினால் பதில் எதுவும் கூற முடியாமல் மௌனமாக இருக்க, அவரும் திருடர்களுக்கு உதவியாக இருக்கிறார் என்று அரச சேவகர்கள் தவறாக நினைத்து விட்டனர்.

அவர் ஒன்றும் கூறாமல் மௌனமாக இருப்பதைக் கண்டு கோபப்பட்டு அவரை அடித்தும் உதைத்தும் அவமானப்படுத்திய பின், அரசன் ஆணையிட்டபடி அவர் உடலில் ஒரு ஈட்டியை குத்தி , ஒருவரும் உதவிக்கு வராமல் தவித்து இறந்து போகட்டும் என அந்த சாலையின் ஒருபுறம் அவரைத் தூக்கிப் போட்டு விட்டுச் சென்று விட்டனர். வலியினால் துடித்தபடி உருண்டு கொண்டு அவர் கிடந்த பொழுதுதான், கணவனைத் தன் தோளில் ஏற்றிக் கொண்டு தாசி வீடு சென்ற வண்ணம் அந்தப் பக்கம் வந்தாள் ஷீலாவதி. இருட்டில் வலியினால் துடித்தபடிக் கிடந்த அவரைக் கவனிக்காமல் ஒரு ஓரமாக அவள் சென்று கொண்டிருந்தவளின் தோளில் அமர்ந்து இருந்த

கௌசிகாவின் பாதங்கள் தவறுதலாக அவர் மீது பட்டுவிட்டது.

அதை அறியாமல் ஏற்கனவே வலியால் துடித்துக் கொண்டு இருந்த மாண்டவ்ய முனிவர், தன்னை வேண்டும் என்றே கௌசிகன் எட்டி உதைத்து விட்டான் என்று எண்ணியபடி, விடிந்தவுடன் அவன் மண்டை வெடித்து மரணம் அடையட்டும் என கோபத்தில் சாபமிட்டார். ஷீலாவதிக்குத் தெரியும் முனிவர்களின் சாபம் வீண் போகாது என்று. அதனால் விடிந்தால் நிச்சயமாக கொளசிகன் மண்டை வெடித்து மரணம் அடைந்து விடுவான் என பயந்து போன அந்தப் பதிவிரதை கௌசிகன் மரணத்தைத் தடுக்க வேண்டும், விடிந்தால்தானே அவனுக்கு மரணம் சம்பவிக்கும் என்று நினைத்து இனி சூரியனே உதிக்கக் கூடாது என மறு சாபமிட்டாள்.

அவளும் உத்தமி என்பதால் சாபம் தரும் அளவுக்கு சக்தி பெற்று இருந்தாள். இரவு கழிந்ததும் மறுநாள் காலை சூரியன் எழவில்லை. காரணம் பதிவிரதை கொடுத்த சாபத்தை சூரியனால் மீற முடியவில்லை. சூரியன் உதிக்காமல் இருக்கத் துவங்க உலகத்தில் இருந்த அத்தனை ஜீவ ராசிகளும் பாதிக்கப்பட்டனர். பத்து நாட்கள் கழிந்தன. சூரிய ஒளி இன்றி உயிரினங்கள் மெல்ல மெல்ல அழியத் துவங்கின. என்ன செய்வது என்று எவருக்கும் தெரியவில்லை. ஆகவே அனைத்து முனிவர்களும் ஒன்று சேர்ந்து ஆலோசித்த பின் ஒரு பதிவிரதத்தின் சாபத்தை ஒரு பதிவிரதையால் மட்டுமே முடிவுக்குக் கொண்டு வர இயலும் என்று உணர்ந்து அனுசூயாவிடம் சென்று ஷீலாவதியை சந்தித்து எப்படியாவது அவளுடைய சாபத்தை நீக்கிக் கொண்டு சூரியனை உதிக்க விடுமாறு அனுசூயா கேட்டுக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

அனைவரின் வேண்டுகோளுக்கும் இணங்க அனுசூயாவும் ஷிலாவதியிடம் சென்று அனைத்து நிலைமையையும் பக்குவமாக எடுத்துக் கூறி விட்டு அவள்

கொடுத்த சாபத்தை திரும்பப் பெறுமாறு அவளிடம் வேண்டிக் கொண்டாள். சூரியனும் உதித்தது. உலகம் அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டது. அதே சமயத்தில் விழுந்தவுடன் அவள் கணவன் மரணம் அடைந்து விடுவான் என்ற சாபத்தையும் நீக்கும் விதத்தில், ஷீலாவதியுடனேயே அனுசூயா இருந்து கொண்டு, விழுந்ததும் மண்டை வெடித்து இறந்துப் போன கௌசிகனைத் தன் கற்பின் வலிமையால் மீண்டும் உயிர் பிழைக்க வைத்தாள்.

இறந்தவன் மீண்டும் உயிர் பிழைத்து எழ தேவர்கள் அனுசூயா மீது மலர் மாரிப் பொழிந்தனர். அவள் முன் தோன்றிய தேவர்களும், முனிவர்களும், இதர தெய்வங்களும் அவளை ஆசிர்வதிக்க, அதன் பின் தோன்றிய மும்மூர்த்திகளும் அவள் முன் தோன்றி அவளுக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டனர். முதலில் அவர்கள் தோன்றிய பொழுது தன் கணவர் வேண்டிக் கொண்டபடியே தனக்கு மழலைச் செல்வம்தான் வேண்டும் என அவளும் கேட்டாள். மும்மூர்த்திகளும் ததாஸ்து என்று கூறி விட்டு அவளை ஆசிர்வதித்தனர். ஏன் எனில் பின் நாளில் அவளுக்குப் அவர்கள்தானே பிள்ளையாகப் பிறக்கப் போகின்றனர் .

### மும்மூர்திகளின் திருவிளையாடல்

இப்படிப்பட்ட பெருமையையும் குணாதிசயமும் கொண்ட அத்ரி முனிவரின் மனைவியின் மீது பொறாமை கொண்டனர் பிரும்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று தெய்வங்களின் மனைவிகளான சரஸ்வதி, லஷ்மி மற்றும் பார்வதி தேவியினர். அனுசூயா என்ன அப்படி உயர்ந்தவள் என்ற பொறாமை தலைத் தூக்க அனுசூயாவை மட்டம் தட்ட வேண்டும், அவளுடைய கற்பின் வலிமையை சோதிக்க வேண்டும் என தீர்மானித்தனர். இடையிடையே வந்து கொண்டிருந்த நாரதர் அவர்களின் எண்ணத்தில் இன்னமும் தூபம் போட்டபடி இருந்தார். அதனால் ஒருமுறை மும்மூர்த்திகளின் மனைவிகள் இரும்பு குண்டினால் ஆன கடலைகளை நாரதரிடம் கொடுத்து அதை

அனுசூயாவிடம் கொண்டு போய்த் தந்து வறுத்துக் கொண்டு வருமாறு கூறினர். அனுசூயாவா சளைத்தவள் ? தன் கற்பின் வலிமையால் அதை அவள் செய்து கொடுக்க அவள் மீது மும்மூர்த்திகளின் மனைவிகள் இன்னும் அதிக ஆத்திரம் அடைந்தனர்.

தங்களுடைய தோல்வியை சகித்துக் கொள்ள முடியாத மும்மூர்த்திகளின் மனைவிகள் மீண்டும் நாரதர் கொடுத்த யோசனைப்படி தங்களுடைய கணவர்களை அனுப்பி அனுசூயாவின் கற்பின் வலிமையை சோதிக்க நினைத்தனர். அதற்கான நேரத்திற்காக காத்திருந்தனர். காலமும் ஓடியது. மும்மூர்த்திகளின் மனைவிகள் மும்மூர்த்திகளை அவர்களின் ஜம்பம் அனுசூயா போன்ற பதிவிரதைகள் முன்பு எடுபடுமா என்று அடிக்கடி கேலி செய்தபடி சவால் விட்டபடியும் இருக்க, தங்களுடைய மனைவிகளின் எண்ணத்தை முறியடிக்க வேண்டும் என்று எண்ணிய மும்மூர்த்திகளும் அனுசூயாவின் கற்பை சோதிக்க எண்ணி அதற்கான தருணம் பார்த்து காத்திருந்தனர்.

ஒரு நாள் காலைப் பொழுது. அத்ரி முனிவர் எப்பொழுதும் போல தவம் செய்யத் துவங்கும் முன் நதியில் குளிக்கச் சென்றார். அதுவே தக்க தருணம் என எண்ணிய மும்மூர்த்திகளும், மூன்று துறவிகள் போன்ற உருவில் அனுசூயாவின் குடிலுக்குச் சென்று பசிக்கு உணவு கேட்டனர். வந்து இருப்பவர்களோ துறவிகள். அவர்கள் பசிக்கு ஆகாரம் கேட்டால் கொடுக்காமல் இருப்பது பாவம் அல்லவா.

மூன்று துறவிகள் போன்ற உருவில் இருந்த மும்மூர்திகளின் உள் எண்ணத்தை அறியாத அனுசூயாவும் அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து அமரச் சொன்னாள். உள்ளே சென்று சமைத்து முடித்த பின் இலையைப் போட்டு பரிமாற வந்தாள். உணவு பரிமாற வந்தவளைத்

தடுத்தனர் துறவிகள் உருவில் இருந்த மும்மூர்த்திகள். தாங்கள் உணவு அருந்த வேண்டும் எனில் அனுசூயா உடலில் எந்த ஆடையும் இன்றி பிறந்த மேனியுடன் வந்து உணவு பரிமாறினால்தான் சாப்பிட முடியும் என்று கூறி விட அதைக் கேட்ட அனுசூயா ஒரு கணம் திகைத்து நின்றாள்.

வந்துள்ள துறவிகள் ஏன் இப்படி பேசுகின்றனர் என மனம் குழம்பி ஒரு கணம் நின்றவள், துறவிகளுக்கு உணவு தராமல் அனுப்புவது பெரும் பாவம், அதே நேரத்தில் கணவனைத் தவிற வேறு எவர் முன்பும் ஆடை இன்றி பிறந்த மேனியுடன் நிற்பது கற்பு இழந்ததிற்கு சமானம் ஆகிவிடும், ஆகவே என்ன செய்வது என யோசித்தாள். ஒரு கணம்தான், சிந்தித்தவள் கண்களை மூடியபடி தன் கணவனை நினைத்து பிரார்தனை செய்தாள். தன் கணவனையே நினைத்து அவள் பிரார்தனை செய்ததினால் அங்கு இலை முன் அமர்ந்திருந்த மும்மூர்த்திகளும் அனுசூயாவின் கற்பின் வலிமையினால் சிறு குழந்தைகளாக மாறி அழத் துவங்கினர். அவ்வளவுதான், அவள் மார்பில் பால் சுரக்கத் துவங்கியது. அழத் துவங்கிய குழந்தைகளை தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு பால் தரலானாள்.

அந்த நேரத்தில் அங்கு வந்து விட்ட அத்ரி முனிவரிடம் நடந்ததைக் கூறினாள் அனுசூயா. அவரும் அனைத்தையும் தன்னுடைய ஞான திருஷ்டி மூலம் தெரிந்து கொண்டார். நடந்து முடிந்திருந்த நாடகமும், நாடகத்தின் காரணமும் அதன் பின்னணியில் இருந்த மும்மூர்த்திகளின் மனைவிகளின் எண்ணமும் அவருக்கு நன்கே புரிந்தது. அவர் சப்த ரிஷிகளில் ஒரு மாபெரும் முனிவரல்லவா .

அத்ரி முனிவரும் அனுசூயாவும் மனம் மகிழ்ந்து குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடத் துவங்கினர். நாட்கள் கடந்தன. அனுசூயாவை சோதிக்கச் சென்ற தங்களுடைய கணவர்கள் திரும்பி வராததைக் கண்ட

மும்மூர்த்திகளின் மனைவிகள் கலக்கம் அடைந்து நாரதரிடம் அவர்களைப் பற்றி விசாரித்து வருமாறு கூறினர். அவரும் அத்ரி முனிவரின் ஆசிரமத்தை சென்றடைந்தார். அங்கே சென்று நடந்த விவரங்களை முழுவதும் அறிந்து கொண்ட நாரதர் ஓடிச் சென்று மும்மூர்த்திகளின் மனைவிகளிடம் அவர்களுடைய கணவர்கள் அனுசூயாவின் சிறு குழந்தைகளாக மாறி இருப்பதைப் பற்றிக் கூறினார். தங்களுடைய கணவர்கள் குழந்தைகளாகி விட்டதைக் கேள்விப் பட்டு திக்கித்துப் போய் அனுசூயாவிடம் ஓடி வந்தனர் சரஸ்வதி, லஷ்மி மற்றும் பார்வதி மூவரும். நடந்து விட்ட தவறுக்கெல்லாம் தாங்களே காரணம் என்பதை விளக்கிக் கூறிவிட்டு அவளிடம் மன்னிப்புக் கோரி, தங்களுடைய கணவர்களை மீண்டும் பழைய உருவில் திரும்பக் கொடுக்குமாறு அவளிடம் வேண்டினர்.

மனைவிகளின் முட்டாள் தனத்தினால் குழந்தைகளாகியிருந்த அவர்களுடைய கணவர்களான மும்மூர்த்திகளை எண்ணி பரிதாபப்பட்டாள் அனுசூயா. சரஸ்வதி, லஷ்மி மற்றும் பார்வதி மூவரின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்து, மீண்டும் அவர்கள் பழைய உருவை பெற்று அவர்களுடைய மனைவிகளுடன் ஒன்று சேரும் விதத்தில் குழந்தைகளாக மாறி இருந்தவர்களை தன் தவ வலிமையால் பழைய உருவத்திற்கு மாற்றினார் அனுசூயா. அவர் செயலைக் கண்டு மகிழ்ந்த மும்மூர்த்திகளும் ஒன்றிணைந்து தத்தாத்திரேயராக காட்சி தந்த பின் மழலைச் செல்வம் அற்ற அவர்களுக்கு தாங்களே மகன்களாகப் பிறப்பதாக மீண்டும் வரம் கொடுத்து விட்டு மறைந்தனர்.

## *தத்தாத்திரேயர் பிறப்பு*

இன்னும் காலம் ஓடிற்று. கர்பமுற்ற அனுயோவுக்கு மும்மூர்த்திகளும் மூன்று புதல்வர்களாகப் பிறந்தனர். சிவபெருமான், தமஸ் குணத்தைக் குறிக்கும் வகையில் துர்வாச முனிவராகவும், ரகு குணத்தைக் குறிக்கும் வகையில்

அத்ரியின் கண் மூலம் பிரும்மா சந்திரனாகவும் பிறக்க, மகா விஷ்ணுவோ, சாத்வ குணத்தைக் குறிக்கும் வகையில் தத்தாத்திரேயராகவே அவர்களுக்குப் பிறந்தார். விஷ்ணுவே தத்தாத்திரேயராக பிறக்க இருந்தார் என்பதற்கும் ஒரு பின்னணிக் காரணம் உண்டு என்று முன்னர் கூறினேன் அல்லவா , அது என்ன ?

கால காலத்திற்கு முற்பட்ட சமயத்தில் கஷ்யபன் என்ற அரசன் ஒரு நாட்டை ஆண்டு வந்தான். அவனுக்கு, கஷ்யபு என்ற மகன் இருந்தான். அந்த அரசன் பெரும் கொடுமைக்காரன். ஒருமுறை அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் கடுமையான போர் மூண்ட பொழுது கஷ்யபு இறந்து விட்டான். அந்த யுத்தம் பல ஆண்டுகள் பல்வேறு அசுர மன்னர்களால் தொடந்து நடத்தப்பட்டது. அந்த யுத்தத்தில் தேவர்கள் சார்பாக இந்திரனும் கலந்து கொண்டிருந்தான். இந்திரனிடம் மீண்டும், மீண்டும் தோற்றுப் போய் ஓடிக் கொண்டு இருந்த அசுரர்களுக்கு உதவுவதற்காக அசுரர்களின் குருவான சுக்ரா என்ற முனிவர் இமயமலைக்குச் சென்று சிவபெருமானை நோக்கி தவம் இருக்கலானார்.

சுக்ரா முனிவரின் அந்த முடிவினால் அவர் மீது கோபம் கொண்ட விஷ்ணு பகவான் சுக்ரா முனிவரின் தாயைக் கொன்று விட்டார். அதைப் நேரிலே பார்த்து விட்ட பிருகு முனிவர் கோபமுற்றார். என்ன இருந்தாலும் ஒரு பெண்ணை, அதுவும் ஒரு முனிவரின் தாயை ஒரு வலிமையற்ற பெண்ணைக் கொல்வதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால் ஒரு முனிவரின் தாயைக் கொன்ற பாவத்திற்காக விஷ்ணு பல்வேறு தாய்மார்களின் கருவில் சென்று வளர்ந்து அவர்களின் மகன்களாகப் பல்வேறு பிறவிகளில் பிறக்கும்படி சாபமிட்டார். அதனால்தான் விஷ்ணு இந்த ஜன்மத்தில் தத்தாத்திரேயர் என்ற உருவில் அத்ரி முனிவரின் மகனாக பிறக்கும்படி ஆயிற்று. அனுசூயா-அத்ரி முனித் தம்பதிகளுக்குப்

மூன்று தலைகளுடன், மும்மூர்த்திகளின் அம்சமாகப் பிறந்த பிள்ளை தத்தாத்திரேயரோ சாமானியக் குழந்தையாக வளரவில்லை. அவர் போக்கே விசித்திரமாக இருந்தது. அதிகம் எவருடனும் பழகுவதில்லை.

### *தத்தாத்திரேயரின் வாழ்க்கை முறைகள்*

வயது ஆக ஆக தத்தாத்திரேயரின் போக்கில் இன்னமும் மாறுதல் தோன்றலாயின. அவை எதுவுமே உண்மை அல்ல. வெளித் தோற்றமே அவை என்பது எவருக்கும் தெரியாது. அடிக்கடி வீட்டை விட்டு வெளியேறிச் சென்று பல இடங்களிலும் சுற்றலானார். ஆனால் தத்தாத்திரேயர் மாபெரும் யோக புருடர், மகா ஞானி, வேதங்கள் அவருக்கு அத்துப்படி என்ற நிலையில் இருந்தார் என்பதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. உலக நன்மையைக் கருதியே அவர் ஒரு அவதூதராகப் பிறந்து இருந்தார். அதனால்தான் அவற்றைப் எல்லாம் புரிந்து கொண்டிருந்தவர்கள் மட்டும் அவரிடம் சிஷ்யர்களாகச் சேர்ந்தனர். வந்தவர் அனைவரையுமே உடனேயே அவர் சிஷ்யனாக ஏற்றதில்லை. பால்ய லீலைகளாக அவர் செய்து காட்டிய யோக சாதனைகள் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக தபத்தில் இருந்த ரிஷி முனிவர்களாலும் கூட நினைத்துப் பார்க்க முடியாதது. ஒழுங்கற்ற வாழ்க்கையை மேற்கொண்டவர் போலத் வெளியில் வெளித் தோற்றம் அளித்தார். அவர் சாமானியர் அல்ல, அதனால்தான் அவரிடம் சிஷ்யர்களாக அவரை நாடி வந்த ரிஷி முனிவர்கள் வரும் பொழுது வேண்டும் என்றே ஆடைகள் கலைந்த நிலையில், இறைச்சியை கடித்தபடி, கள்ளும் குடித்த வண்ணம், பல பெண்களுடன் சல்லாபம் செய்தபடி அவர்கள் முன் காட்சி அளிப்பார் மனித உருவில் யோகப் புருடனாக இருந்த தத்தாத்திரேயர்.

வந்தவர்கள் அனைவரும் அதை ரசித்தது இல்லை. என்ன கேடு கெட்ட மனிதன் இவன் என்று அவரைப் புரிந்து கொள்ளாமல் வெறுத்து

ஓடியவர்களும் உண்டு. இல்லை, இல்லை, அவர் ஆடுவது நாடகமே, நம்மை சோதிக்கின்றார் என கை கூப்பி வணங்கி நின்று அவரை கெட்டியாக மனதில் கட்டிப் பிடித்தபடி ஓடாமல் நின்று அவருடைய சிஷ்யனானவர்களும் உண்டு. பரப்பிரும்மமான தத்தாத்திரேயருக்கு மற்றவர்களை எல்லாம் அப்படி சோதனை செய்வதில் அலாதியான ஆனந்தம் உண்டு.

தத்தாத்திரேயர் எதிலும் பற்றின்றி ஏகாந்தமாக அலைவார். அவர் மனது எந்த விதத்திலும் களங்கம் அடைந்தது இல்லை. ஜடத் தன்மையுடன் வெளியில் தெரியும் உடலுக்கும், உள்ளிருக்கும் புனிதமான ஆத்மாவிற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்பவர். அவர் எந்த நேரத்தில் எங்கு போவார், எங்கு இருப்பார் என எவருக்கும் தெரியாத, புரியாத புதிர். ஒருமுறைப் பார்த்தாலோ பிச்சைக்காரனைப் போல தோற்றம் தந்தபடி, அறைகுறை ஆடைகள் அணிந்தபடி அங்கும் இங்கும் அலைந்தபடித் தெரிவார். நான்கு நாய்கள் பின் தொடர, பசு மாடு பின் நின்றிருக்கும் கோலத்தில் காட்சியும் தருவார். இன்னொரு சமயத்திலோ ஏரிகள், குளங்களில் முதலியவற்றில் மூழ்கி நின்றும், சுடுகாடுகளில் உருண்டு புரண்டபடிக் கிடந்தும் நாட்கணக்கில் ஏகாந்தத்தை அனுபவித்தபடியும் இருப்பார். ஏரிகளில் சென்று அதன் உள்ளே முழுகிக் கிடந்தபடி பல மணி நேரம் இருப்பது சர்வ சாதாரணம். இப்படியாக அவர் கொண்டிருந்த வாழ்க்கை பல நூற்றாண்டு காலம் கழிந்தது. அவர் உலகத்திலேயே மிகப் பெரிய அவதாரம் என்றாலும், மனித உருவில் வந்து அவதரித்து இருந்ததினால் மறுபக்கம் மாபெரும் துறவி போலவே அவதூதராகவே வாழ்ந்து கொண்டு இருந்தார். மும்மூர்த்திகளை ஒன்றடக்கி இருந்த அவதூதர் அவர். பல்வேறு இடங்களுக்கும் சென்று அலைந்த வண்ணம் இருந்தாலும் அவருக்குப் பிடித்த இடம் நெல்லி மரத்தின் அடியில் அமர்ந்து இருப்பதே. உடல் முழுவதும் சாம்பலைப் போல வீபுதியைப் பூசிக் கொண்டும் புலித் தோலை உடை போல அணிந்து கொண்டும் இருப்பவர்.

அமைதியான ஆனால் ஜொலிக்கும் முகத்தைக் கொண்ட உருவம்.

### *தத்தாத்திரேயரின் சின்னங்களின் சிறப்புக்கள்*

தத்தாத்திரேயர் தன்னுடன் வைத்துக் கொண்டு இருக்கும் பொருட்களின் சிறப்பு என்ன?

-- கேட்ட அனைத்தையும் தந்தபடி, உலகையும், தர்மத்தையும் காப்பதைக் குறிக்கும் வகையிலான காமதேனு என்ற பசு.

-- ஆன்மீக வேத நூல்களான நான்கு வேதங்களும் என் கீழ் பணிந்து இருப்பவையே என்பதைக் குறிக்கும் வகையில் அவர் காலடியில் நான்கு நாய்கள்.

-- தான் என்ற அகந்தையை அழிப்பதைக் குறிக்கும் வகையில் திரிசூலம்.

-- அறியாமையை அழித்து ஒருவனுடைய மன சாட்சியைத் தட்டி எழுப்புவதைக் குறிக்கும் வகையில் கையில் குடுகுடுப்பை.

-- முக்காலங்களையும் கடந்து நிற்பவர், அனைத்து காலத்தையும் தானே இயக்குபவர், ஆரம்பமும் முடிவும் அற்றவர் என்பதை குறிக்கும் வகையிலான சுதர்சன சக்கரம்.

-- உள் ஆத்மாவை, மனச் சாட்சியைத் தட்டி எழுப்பும் விதத்தில் ஓம் என்ற என ஒலிக்கும் சங்கு

-- வைராக்கியத்தையும், பிறந்த எதற்கும் அழிவு நிச்சயம் என்பதைக் குறிக்கவும் சாம்பல் போன்ற வீபுதி

-- நமக்கு உள்ளவற்றில் எதை மற்றவர்களுடன் பகிந்து கொள்ள முடியுமோ அதை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வகையில் கையில் ஒரு பிட்சைப் பாத்திரம்.

- எப்பொழுதும் பகவானுடைய நாம ஜெபம் செய்து கொண்டு இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக ஒரு ஜெபமாலை.

### *தத்தாத்திரேயர் யார்? யதுகுல மன்னனின் சந்தேகம்*

அப்படிப்பட்ட சின்னங்களைக் கொண்டிருந்த தத்தாத்திரேயர் தான் யார்,

தன்னுடைய குரு யார் என்பவற்றை ஒரு மன்னனுக்கு விளக்கியதாக் கூறப்படும் கதை சுவையானது. அது இதுதான்.

குழந்தைப் பருவத்தைக் கடந்து வாலிபப் பருவத்தை எட்டிய தத்தாத்திரேயர் வீட்டை விட்டு வெளியேறி சுதந்திரமாக காடுகள், மலைகள் என அங்கும் இங்கும் சென்றவண்ணம் பல்வேறு இடங்களிலும் சுற்றி அலையலானார். பார்ப்பதற்கே விசித்திரமாகவும், ஒழுக்கமற்றவர் போலும் தோன்றிய அவர் பல நேரங்களில் நிர்வாணமாக காணப்பட்ட அவதூதர் என்றாலும் அவருடைய வெளித் தோற்றத்திற்கும் அவருடைய உள்ளத்துக்கும் சம்மந்தம் இல்லை. தன்னை நாடி வருபவர்கள் இந்த உலக வாழ்க்கையே ஒரு மாயை என்பதைப் புரிந்து கொண்டுள்ள அளவு மனப் பக்குவம் பெற்றவர்களா என்று நன்கு சோதித்த பின்னரே அவர்களை சீடர்களாக ஏற்றுக் கொள்வார் என்பதை நன்கு புரிந்து வைத்திருந்த பல ரிஷிகளும் முனிவர்களும் அவரைத் தேடி அவரிடம் தீட்சைப் பெற அலைந்தனர். அவர் ஒரு யோக புருடரே என்பதை முற்றிலுமாக உணர்ந்து கொண்டிருந்தனர்.

அப்படிப்பட்ட ஒரு பின்னணியில் வாழ்ந்து கொண்டிருந்த அவர் இருந்த இடம் கிருஷ்ண பரமாத்மா அவதரித்த காலத்துக்கு முட்பட்ட காலத்தில் ஆட்சியில் இருந்த யதுகுல மன்னன் ஒருவனின் அதிக்கத்தில் இருந்தது. அந்தக் காலங்களில் மன்னர்கள் மாறு வேடங்களில் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அலைந்து திரிந்தபடி நாட்டின் நிலைமைகளை கவனித்துக் கொண்டு இருப்பது வழக்கம். ஒரு நாள் அப்படி எண்ணம் கொண்டு நகர் ஊர்வலம் சென்று கொண்டிருந்த அந்த நாட்டு யதுகுல மன்னன் பிச்சைக்காரன் போல தோற்றம் அளித்தபடி தெருவில் அலைந்து கொண்டிருந்த தத்தாத்திரேயரை ஒரு தெருவில் பார்த்தான். அவனுக்கு அப்பொழுது அவரைப் பற்றிய எந்த விவரமும் தெரியாது.

கவலையின்றி பாடிக் கொண்டே பிச்சைக்காரன் போல அலைந்து திரிந்து கொண்டிருந்த தத்தாத்திரேயர் முகத்தில் எந்த விதமான கவலைக் கோடுகளும் தெரியவில்லை. அவருடைய முகத்திலோ அபரித்தமான தேஜஸ் ஒளிவிட்டுக் கொண்டு இருந்தது. அந்த பிச்சைக்காரன் உருவில் அலைந்து திரிந்து கொண்டிருந்த தத்தாத்திரேயரை எதேச்சையாகக் கண்ட யதுகுல மன்னன் யோசனை செய்யலானான். இத்தனை தேஜஸ்ஸான முகத்துடன் தோற்றம் தரும் இவன் பிச்சைக்காரனாக இருக்க முடியுமா , முகத்தில் எந்த விதக் கவலைக் கோடுகளும் தெரியவில்லை, ஏதோ தானே இந்த இராஜ்யத்தை ஆண்டு வரும் மன்னன் போல் அல்லவா கம்பீரமாக அலைந்து திரிந்து கொண்டு இருக்கின்றான். இத்தனை பெரிய சம்ராஜ்யத்தை ஆண்டு கொண்டும், அளவற்ற சம்பத்துக்களும் அடியாட்களும் நிறைந்து இருந்தும், அனைத்து சுக போகங்களையும் அனுபவித்துக் கொண்டும் உள்ள எனக்கே நிம்மதி இல்லை. ஒன்றும் அற்றவன் போலத் தெரியும் இந்த அனாதைப் பிச்சைக்காரன் எப்படி கவலையே இன்றி இத்தனை தேஜஸ்ஸான முகத்துடன் காணப்படுகின்றான்?

மனதில் பல்வேறு எண்ணங்கள் அலை பாய்ந்து கொண்டே இருக்க அவர் சென்ற பாதையிலேயே சென்று கொண்டு அவரையே கவனித்துக் கொண்டு இருந்த யதுகுல மன்னின் ஆச்சரியமும், ஆவலும் அடங்கவில்லை. என்ன இருந்தாலும் மன்னனும் பண்டிதம் பெற்றவன் அல்லவா, அவரைப் பற்றி ஒன்றுமே தெரிந்திராத நிலையில் தன்னுடைய ஆவலை அடக்க முடியாமல் அவரிடமே சென்று கேட்டு விடலாம் என எண்ணியபடி பிச்சைக்காரன் உருவில் இருந்த தத்தாத்திரேயிடம் சென்று பணிவோடு கேட்டான் 'அன்பனே உங்கள் முகத்தில் உள்ள தேஜஸ்ஸைப் பார்த்தால் நீங்கள் நிச்சயமாக பிச்சைக்காராக இருக்க முடியாது என என் உள் மனம் கூறுகின்றது. நீங்கள் எதோ ஒரு சன்யாசி அல்லது முனிவராகத்தான் இருக்க வேண்டும் என்றும் என் மனம் நினைக்கின்றது. நீங்கள் உண்மையிலேயே யார் என்பதை

இந்நாட்டின் அரசனான நான் தெரிந்து கொள்ளலாமா?'

பிச்சைக்காரன் உருவில் இருந்த தத்தாத்திரேயர் கூறினார் "மன்னா, காடு மேடுகளிலும், மலைப் பிரதேசங்களிலும், தெருவிலும் சுற்றி அலையும் பிச்சைக்காரப் பரதேசி எனக்கும் வணங்கத் தக்க மாபெரும் சாதுக்களுக்கும், சன்யாசிகளுக்கும் என்னப்பா சம்மந்தம், இந்த சாதாரணப் பிச்சைக்காரனைப் போய் அத்தனை பெரிய மனிதர்களுடன் ஏன் ஒப்பிடுகிறாய்?" அவர் கூறிய பதிலால் மன்னனின் சந்தேகம் இன்னமும் வலுத்தது. 'பிச்சைக்காரன் உருவில் உள்ள இந்த மனிதன் ஒரு மன்னன் என்று என்னைக் கண்டு வணங்கவும் இல்லை, பயப்படவும் இல்லை. எதோ ஒரு நண்பனுடன் பேசுவது போல் அல்லவா சர்வ சாதாரணமாகப் பதில் தருகின்றார், இல்லை, ........ நிச்சயமாக இவர் பிச்சைக்காரனாக இருக்க முடியாது. ஏன் எனில் இவர் பதில் கூறும் பொழுது கூட அலட்சியமாக பயமின்றி சாதாரணமாக அல்லவா கூறுகிறார். என்னிடம் எதையோ மறைக்கின்றார்' என மனதில் எண்ணினார்.

தன்னுடைய ஆவலை அடக்க முடியாமல் மீண்டும் கேட்டார் மன்னன் 'இல்லை அன்பரே, உங்களைப் பற்றி எதையோ நீங்கள் மறைக்கின்றீர்கள் என்று என் மனம் மீண்டும், மீண்டும் கூறுகின்றது. ஆனால் அதற்கான காரணம் மட்டும் புரியவில்லை. தயவு செய்து உங்களைப் பற்றி எனக்குள்ள ஐயத்தைப் போக்குவீர்களா? தத்தாத்திரேயர் முகத்தில் எந்த விதமான சலனம் இல்லை. 'என்னப்பா உன் ஐயத்திற்கு நான் என்ன விளக்கம் அளிக்க முடியும், நீயோ இந்த தேசத்தையே ஆள்கின்றாய், உனக்கு தெரியாத விஷயம் எனக்கு எப்படி தெரிந்து இருக்க முடியும் சொல் அப்பனே'

மன்னனுக்குத் இப்பொழுது புரிந்து விட்டது. விசித்திரமாகவும்,

ஒழுக்கமற்றவர் போலவும் தோன்றும் இவர் நிச்சயமாக பிச்சைக்காரர் அல்ல. வேஷம் போடுகின்றார். தான் யார் என கூறிக் கொள்ள விரும்பாத இவர் ஒரு மகா யோக புருடராகவே இருக்க வேண்டும், ஏன் எனில் இவர் பார்வையில் அகம்பாவம் தெரியவில்லை, ஆணவமும் இல்லை. மாறாக பேச்சில் அன்பு ஒழுக அச்சமற்றவராக, தன்னை மறைத்துக் கொள்ளும் விதமாகவும் அடக்கமாக பதில் தரும் இவர் யாராக இருக்க முடியும், அப்படி எண்ணியவாறே மீண்டும் பணிவோடு கேட்டான்.

'ஸ்வாமி என்னைப் போன்ற அரசர்களிடம் இல்லாதது இல்லை என்ற அளவில் என்னிடமும் வயிற்றுக்கும், வாழ்க்கைக்கும் தேவையான உலகப் பொருட்கள் அனைத்தும் உள்ளன. பெரிய தேசத்தை ஆளுகின்றேன். இட்டப் பணியையும் செய்ய ஆயிரம் பேர் காத்துக் கிடக்கின்றனர். ஆனால் அத்தனை சுகபோகங்கள் இருந்தும் நிம்மதியோ மன அமைதியோ இன்றி, அதற்கு வரி தேடிய வண்ணம் மகான்களையும் ஞானிகளையும் தேடி அலைகின்றோம். ஆனால் உங்களினால் எந்தவித அச்சமும் இன்றி, ஆசையும் இன்றி, உலகப் பற்றும் இன்றி எப்படி அன்பரே இத்தனை சுதந்திரமாத் திரிய முடிகின்றது, தயவு செய்து முதலில் என் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு பிச்சைக்காரர் தோற்றத்தில் காட்சி தரும் நீங்கள் உண்மையிலேயே யார் என்று இந்த எளியவனுக்கு விளக்க வேண்டும் என்பதே என் பிரார்தனை' என்றார். இப்படிக் கேட்டவன் மன்னனே என்றாலும் ஒழுக்கம் மிக்கவன், தவம் முதலியவற்றைப் புரிந்து கொண்டவன். சாது சன்யாசிகளை மதித்து நடப்பவன், நல்லவன் என்பதால் முதலில் அவனை வேண்டும் என்றே பரிட்சை செய்துப் பார்த்த தத்தாத்திரேயர் மனம் மகிழ்ந்து கூறலானார். 'இனிய குணம் மிக்க மன்னா, வா, அதோ அந்த ஒதுக்குப் புறமான இடத்தில் அமர்ந்து கொண்டு பேசுவோம்'. அவர் பின் தொடர்ந்து செல்ல துாரத்தில் இருந்த ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் அமர்ந்த பின் தத்தர் கூறினார் 'மன்னா,

இப்போது நான் கூறப் போவதைப் பொறுமையாகக் கேள். அனைத்து வெளி உலக சுகப் பொருட்களும் உன்னை சூழ்ந்து கொண்டு இருப்பதாகக் கூறுகின்றாயே. அது வெறும் மாயைதான். நீ உன் உள்ளுக்குள் ஒன்றும் அற்று நிற்பவன் என்பதை முதலில் புரிந்து கொண்டு நான் கூறுவதைக் கேள். நீ ஏன் உன்னிடம் உள்ள ஜடங்களான வெளிப் பொருளை மட்டும் வைத்துக் கொண்டு உன்னை என்னுடன் சம்மந்தப்படுத்திப் பார்க்கின்றாய். நானோ நானாகவே இருப்பவன். என்னை சுற்றி உள்ள ஜடப் பொருட்களைக் காட்டிக் கொண்டு என்னை நான் பெருமைப் படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அந்தப் பொருட்கள் என்னிடம் இருந்தால் அவற்றுக்குத்தான் என்னால் பெருமையே தவிற அவற்றினால் எனக்கு பெருமை அல்ல என நினைப்பவன் நான். அதனால்தான் மன மகிழ்ச்சியோடு இப்படித் திரிகின்றேன். நான் யார் என அறிய ஆவலோடு இருக்கின்றாய் அல்லவா, இப்பொழுது நான் கூறப் போகும் அனைத்தையும் கவனமாக முழு மனதை செலுத்திக் கேள். அவற்றை எல்லாம் கேட்ட பின் என்னைப் நீ புரிந்து கொண்டு, நான் யார் என்பதையும் தெரிந்து கொள்வாய்'

அடடா ........ அற்புதமான ஒரு தத்துவத்தை என்ன சாதாரணமாகக் கூறுகின்றார். மன்னனுக்கு மண்டையில் எவரோ உளியால் அடித்தது போல் தோன்ற, தத்தாத்ததிரேயர் கூறியதை உன்னிப்பாகக் கேட்கலானார். தத்தாத்திரேயர் தொடர்ந்தார். "இந்த உலகைப் படைத்து விட்ட பரமாத்மன் பல்வேறு குணமுடைய ஜீவன்களையும் படைத்து விட்டான். ஒற்றைக் கால் ஜீவன் முதல் பல கால், கைகளைக் கொண்ட ஜீவன்கள் என விதவிதமாக எத்தனை எத்தனை வகைகளைப் படைத்தான். ஆனால் அத்தனை ஜீவன்களிலும் இல்லாத அந்தராத்மா என்ற ஒன்றை மனிதர்களிடம் மட்டுமே வைத்து விட்டான். அவனுக்குள் மட்டும் ஆழ்ந்து யோசிக்கும் தன்மையையும் வைத்து உள்ளான். அதனால்தான் மனிதனால் தியானிப்பதின் மூலம் தன் உள்ளே உள்ள அந்தராத்மாவைக் கூட அறிந்து கொள்ள முடிகின்றது,

பரமாத்மனையும் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனாலும் அதை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் முடியாமல் உள்ள உன்னைப் போன்றவர்கள் மற்ற ஞானிகளைத் தேடி அலைகிறார்கள்.

உள்ளுக்குள்ளே உள்ள அந்தராத்மாவும், அதை இயக்கும் சக்தியான எண்ணங்களையும் தவிற மற்ற அனைத்தும் ஜடப் பொருளான சதைப் பிண்டமாக, தசைகளுடன் கூடிய ஒரு உடலாக தோற்றம் அளித்தபடி உள்ளது. நீ கூறியபடியே, அந்த ஒரு உடல் படும் வேதனையையும், இல்லாத ஒன்றை தேடி இடமிடமாக ஓடி அலையும் மூடத்தனத்தையும் எண்ணிப் பார். ஒரு உடல் மேலும் மேலும் பல உடல்களை தேடி ஓடிக் கொண்ட வண்ணம் உள்ளது. மனைவி, குழந்தைகள், சந்ததிகள், சன்தானங்கள், சேவகர்கள் என அனைத்தும் கிடைத்தும் கூட, போதும் என்ற மனம் வரவில்லை. இன்னமும் வேண்டும் என ஏங்கி, ஏங்கி அலைவது ஏன் ? பற்று....... உலகப் பொருட்கள் மீது வைத்து விட்ட அளவற்ற பற்று ........ அளவற்ற ஆசை. அவனுக்குள் ஆழ்ந்து யோசிக்கும் தன்மை இருந்தும் அவைகளைப் பற்றி நினைத்துப் பார்க்க அவன் மனம் மறுப்பது ஏன் ?, இந்த உடலே ஒரு மாயை, இதற்கு அழிவு நிச்சயம் எனும் பொழுது இருப்பதைக் கொண்டு திருப்தி அடையாமல் எதற்காக இல்லாத ஒன்றைத் தேடி அலைந்த வண்ணம் நிம்மதியை இழந்து நிற்கிறோம் என ஒரு கணம் அவன் யோசித்துப் பார்த்தானா?

## *தத்தாத்திரேயரின் குருக்கள் யார் ?*

சாதாரணத் துறவியான நான் யார் என்பதை தெரிந்து கொள்வது முக்கியம் அல்ல. அதை விட முதலில் எனக்கு போதனை செய்த குருமார்கள் யார் என்று தெரிந்து கொள். எனக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் இந்த உலகில் இயற்கையோடு உலகெங்கும் பிணைந்து உள்ள இருபத்தி நான்கு குருமார்கள்."

தான் கூறிக் கொண்டு இருந்ததை இடையிடையே நிறுத்தி நிறுத்தி, நிதானமாக தத்தாத்திரேயர் சொல்லச் சொல்ல தன்னை மறந்து அதைக் கேட்டபடி அவர் காலடியில் அமர்ந்தான் அந்த யதுகுல மன்னன். அவன் மனதில் அவனை அறியாமலேயே மெல்ல மெல்ல அமைதி தோன்றலாயிற்று. தத்தாத்திரேயர் தொடர்ந்தார் "எனக்கு உள்ள அந்த இருபத்தி நான்கு குருமார்கள் யார், யார் என யோசனை செய்கின்றாயா , என் குரு ஒருவர் அல்ல, இருவர் அல்ல மன்னனே, இருபத்தி நான்கு குருக்கள், ...... ஆமாம் இருபத்தி நான்கு குருமார்கள் எனக்கு உள்ளனர். என்ன தலையைச் சுற்றுகின்றதா இல்லை உண்மையாக இருக்குமா என்று யோசிக்கின்றாயா? எவர் அந்த இருபத்தி நான்கு குருக்கள் என்று குழம்புகின்றாயா ,......... கேள் மன்னா.....கேள் ...... என் குருமார்கள் பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, சிலந்தி, பிங்களை என்ற வேசி, சந்திரன், சூரியன், ஆகாயம், கடல், நுரை, மலைப் பாம்பு, புறா, மீன், மான், யானை, குழந்தை, தேனி, விட்டில் பூச்சி, தேன் சேகரிப்பவன், சிறு பறவை, அம்பு செய்பவன், பாம்பு, புழு, சிறுமி போன்றவர்களே. அவர்கள் ஒவ்ஒருவரும் எனக்கு கற்றுத் தந்த பாடம் என்ன என்பதை நீ அறிந்தால் இன்னும் வியப்படைவாய்." தத்தாத்திரேயர் கூறிக் கொண்டு இருந்ததை மெய் மறந்து கேட்டபடி, வியப்போடு அவரை நோக்கியபடி அவர் காலடியில் அமைதியாக அமர்ந்திருந்தான் அந்த யதுகுல மன்னன்.

"தத்தாத்திரேயர் தொடர்ந்து கூறலானார் ''அந்த குருக்களிடம் இருந்து நான் கற்றுக் கொண்டவை எவைத் தெரியுமா,........ஒவ்ஒன்றாகக் கேள்... அவர்களின் குணத்தையும் அவர்கள் கற்றுத் தந்த பாடத்தையும் கவனமாகக் கேள் -

**பூமி** – பொறுமை என்ன என்பதை பூமியே எனக்குக் காட்டினாள். தன் மீது ஏறி நின்றபடி, தன் உடலை தோண்டி சிதைத்தாலும், தன்மீது காறித் துப்பி அசிங்கப் படுத்தினாலும் இன்னமும் என்னதான் செய்தாலும் அவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டு, மனம் தளராமல் தன் மீதே வாழ்ந்து கொண்டு இருக்கும் அந்த மக்களை பொறுமையைக் கடை பிடித்தபடி பூமித் தாய் காத்து வருவது எத்தனை பெரிய தியாகம்? நீயும் நானும் அப்படி செய்வோமா ?

**தண்ணீர்** - இயற்கையான தண்ணீர் இனிமையானது மட்டும் அல்ல, மிகவும் துய்மையானதும் கூடத்தான். அனைத்து அழுக்குகளையும் தண்ணீரைக் கொண்டே சுத்தப் படுத்துகின்றோம். அழுக்குகளை நீரில் போட்டால் சற்று நேரத்திலேயே அவற்றை விலக்கி விட்டு அவற்றை அடியில் தள்ளி வைத்து தண்ணீர் துாய்மையாகி விடுகின்றது. அது போலத்தான் நாமும் இனிமையானவர்களாக இருந்து கொண்டு அசுத்தமான மனதைக் கொண்டவர்கள் நம்மிடம் வந்தாலும் நம் மனதைத் துாய்மையாகவே வைத்துக் கொண்டு அவர்களையும் துாய்மை படுத்த முயல வேண்டும் என்ற உண்மையை அதனிடம் இருந்து தெரிந்து கொண்டேன்.

**நெருப்பு** - நெருப்பைத் தொட முடியாது. எந்த ஒன்றையும் நல்ல பொருளோ, கெட்டவைகளோ அவற்றை நெருப்பில் போட்டு விட்டால் அதை நெருப்பு விழுங்கி விட்டது போல போட்டவை அனைத்தும் அழிந்து விடும். துாய்மைப் படுத்தி விடும். பசுவின் சாணத்தை எரித்தே துாய்மையான பஸ்பம் செய்கின்றனர். ஆனால் சாணத்தினால் நெருப்பு மாசுப்படுவது இல்லை. ஒவ்ஒருவரும் செய்யும் யாகத்தில், ஹோமத்தில் யாகுதியை எரியும் நெருப்பில் போட்டே தங்களுடைய பாவத்தைக் களைந்து விடுகின்றனர். ஒளிமயமான நெருப்பில் போடப்படும் பொருளைப் பொறுத்தே அதன் ஜுவாலை பெரியதாகவும், சிறியதாகவும் எரிந்தபடி இருக்கும். அது

போலத்தான் ஒரு யோகியும் இருக்க வேண்டும். ஒளிமயமான தன்னிடம் வந்தவர்களின் பாவத்தைத் களைந்து, அதே நேரத்தில் தன்னையும் எந்த ஒரு நிலையிலும் வந்தவர்களின் நட்பினால் மாசு படுத்திக் கொள்ளாமல் நெருப்பைப் போல வைத்துக் கொள்ள வேண்டும். போடப்படும் பொருளைப் பொறுத்தே நெருப்பின் ஜுவாலையும் இருக்கும் என்பதைப் போலவே இறைவன் நினைப்பும் நம்முள் அதிகம் இருக்க வேண்டும் என்பதற்காக நாம் தியானிப்பதை இன்னமும் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அது கற்றுத் தந்த பாடம்.

காற்று – அனைவரும் உயிர் வாழத் தேவையான பிராண வாயுவை தந்தபடியும் அதே நேரத்தில் தன்னையும் மாசுப் படுத்திக் கொள்ளாமல் உள்ளதே காற்று. காற்றை நாம் மாசு படுத்தினாலும் அது அவற்றை எங்கோ ஒரு மூலைக்கு தள்ளிப் கொண்டு போவது போல தான் போகும் பாதையில் சென்று கொண்டே இருக்கின்றது. காற்றை இங்கு நில் என்றோ, அங்கு போ என்றோ கூற முடியாது. சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் காற்றினால் செல்ல முடிகின்றது. மலர்கள் தரும் மணத்தையும் மற்ற மணங்களையும் தன் மீது அமர்ந்தபடி வரவிட்டாலும் சற்று நேரத்திலேயே பட்டற்ற நிலைக்கு சென்று விடுவது போல அவற்றை அது விலக்கி விடுகின்றது. அது போலத்தான் ஒரு யோகியும் மற்றவர்களால் பாதிக்கப்படாமல் பட்டற்ற நிலையில் உள்ள காற்றைப் போல சுதந்திரமாக திரிந்தலைந்து கொண்டு இருக்க வேண்டும் என்பதை அதனிடம் இருந்து பாடமாகத் தெரிந்து கொண்டேன்.

சிலந்தி – சிலந்தி தன் வாயில் இருந்தே நூலைப் போன்ற இழைகளை வெளித் தள்ளி மெல்ல, மெல்ல வலையைப் பின்னி அதற்குள்ளேயே தானும் அமர்ந்தபடி விளையாடியபடி இருந்து கொண்டு இருந்தாலும் பின்னர் தானே அந்த இழைகளை மீண்டும் விழுங்கி விடுகின்றது. இது எதை

உணர்த்துகின்றது எனில் அளவுக்கு அதிகமாக சிருஷ்டியை படைக்கும் பரமாத்மனும் தான் படைத்த சிருஷ்டியை மீண்டும் சம நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத் தானே படைத்த சிருஷ்டியை, எப்படி ஒரு சிலந்தியை தான் படைத்த இழைகளை விழுங்கி விடுகின்றதோ அது போல அவ்வப்பொழுது அழிக்கின்றான். தான் போதித்ததை தன்னுள் இருந்து விலக்கி விடாமல் தன்னுள் மீண்டும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஞானம் சிலந்தியிடம் இருந்தே எனக்குக் கிடைத்தது".

தத்தாத்திரேயர் கூறக் கூற, என்ன தத்துவம், என்ன தத்துவம் என்று வியந்தபடி அவற்றை கேட்டுக் கொண்டு ஆனந்தமாக அமர்ந்திருந்தான் யது குலமன்னன். தத்தாத்திரேயர் தொடந்து கூறிக் கொண்டிருந்தார்.

"பிங்களை என்ற வேசி -- இந்தக் கதையைக் கேள். முன் ஒரு சமயம் ஒரு உத்தமமான மன்னன் ஒருவனின் ஆட்சியில் இருந்த பூமியில் வாழ்ந்து வந்தவள் பிங்களை என்ற ஒரு பெண். தன் உடலை விற்றே வளமான வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்தாள். தினமும் அவளைத் தேடி பலர் வருவார்கள். இப்படியான ஒரு வாழ்க்கையை அவள் ஓட்டிக் கொண்டு இருக்கையில் எதோ ஒரு காரணத்தினால் அவளுக்கு ஒரு நாள் எந்த வாடிக்கையாளரும் வரவில்லை. இரவு வெகு நேரம் கண் விழித்து அமர்ந்து இருந்தவள் எவரும் வரவில்லை என்பதைக் கண்டதும் மனம் சோர்வு அடைந்தாள். காமம் தலைக்கேறி அமர்ந்து இருந்தவள் அலுப்பு நேரிட உறங்கிவிட்டாள். அலுப்பினால் உறங்கி விட்டவள் உள்ளத்தில் இருந்த காமம், என்றும் அல்லாமல் அன்று மெல்ல மடியத் துவங்கியது. உறக்கம் வராமல் படுத்தவள் யோசனை செய்யலானாள். யோசனை செய்யச், செய்ய அவளுக்கே அவமானமாகியது. ஒன்றும் இல்லாத ஜடமான இந்த தசைகளையும் சதைகளையுமா இத்தனை நாளும் மற்றவர்களுக்கு இரையாக்கி என் வாழ்கைக்கு தேவையானவற்றைப் பெற்று வந்தேன்?

உடம்பின் உள்ளே செல்லும் அனைத்துமே மறுநாள் அசுத்தமாக அல்லவா வெளியேறுகின்றது. சேச்சே.. .. .. என்ன காரியம் செய்து வந்து இருக்கின்றேன், இதுவரை சம்பாத்தித்தது போதும். யாருக்காக இந்த உடலை மற்றவர்களை சீண்ட விட வேண்டும், இனி இந்த உடலை விற்பது பாவச் செயல் என ஒருவரும் வராத அந்த இரவில் அலுத்துக் கொண்டாள். மனம் அமைதி அடைந்தது. ஆழ்ந்த உறக்கம் வந்தது, உறங்கி விட்டாள். மறு நாள் முதல் அந்தத் தொழிலை முற்றிலும் விட்டுவிட்டு வந்தவர்களைத் திருப்பி அனுப்பினாள். கனத்திருந்த இதயத்தில் பாரம் குறைந்து அமைதியாக இருந்ததை உணர்ந்து கடவுள் பக்தி கொண்டு வாழ்ந்து வரலானாள். இது கற்றுத் தந்த பாடம் என்ன? உள்ள மட்டும் போதும் என்று திருப்தி கொண்டு இருந்தவாறு அளவு கடந்து வைத்திருக்கும் ஆசைகளைத் துறந்து விடு, மனதுக்கு அமைதி கிடைக்கும் என்பதே.

சந்திரன் -- இயற்கையின் நியதியினால் சந்திரன் தேய்ந்து மீண்டும் வளர்கின்றது. தேய்வதும் மீண்டும் வளர்வதும் ஒரு மாயை. வளர்பிறையிலும் தேய் பிறையிலும் சந்திரன் அழிகின்றதா என்றால் அது இல்லை. அதன் பிம்பம் மட்டும் மறைந்திருந்து வெளி வருகின்றது. சந்திரன் அழியவில்லை. அதன் தோற்றம் மட்டுமே மாறுபடுகின்றது. ஆகவே உடலின் தோற்றம் எப்படி மாறுபட்டாலும் அதற்குள் உள்ள ஆத்மா அதனால் மாறுதல் அடைவது இல்லை எனப் புரிந்தது. ஒரு யோகியும் அப்படித்தான் தன் மனதை வைத்துக் கொள்ள வேண்டும்.

சூரியன் -- அனைத்து உலகிலும் தோன்றுவது ஒரே ஒரு சூரியனே. அதைச் சுற்றி ஓடிக் கொண்டு இருக்கும் பூமியில் இருந்து நீரை மேலிழுத்தும் கிரகித்துக் கொண்டும் இருந்தாலும் அதை தன்னுடனேயே வைத்துக் கொண்டு விடாமல் நியதிகளுக்கு ஏற்ப தக்க சமயத்தில் அதை மீண்டும் நீராகவே மாற்றி மழை என்ற பெயரில் பூமிக்கே திருப்பித் தருகின்றதைப்

போலவே, யோகியும் நல்லவற்றை பல இடங்களிலும் கிரகித்துக் கொண்டு அதன் மீது பற்று கொண்டு விடாமல் தன்னிடம் வந்து அடைக்கலம் ஆகும் மற்றவர்களின் நல் வாழ்க்கைக்கு தேவைப்பட்ட பொழுது போதனை செய்த வண்ணம் இருக்க வேண்டும்.

ஆகாயம் -- ஆரம்பமும் முடிவும் தெரியாமல் உலகெங்கும் படர்ந்து விரிந்துள்ள ஆகாயத்தைப் பார். படர்ந்து விரிந்துள்ள ஆகாயம், தன் மீது தவழ்ந்து செல்லும் காற்றாலோ, மின்னல், மழை மற்றும் இடிகளாலோ எந்த காலத்திலாவது தன் உருவை மாற்றிக் கொண்டதா? என்றும் அமைதியாக நின்ற வண்ணம்தான் உள்ளது. அது போலத்தான் எந்த நிலைகளிலும் எதன் மீதும் பற்று கொண்டு விடாமல் நம் ஆத்மாவையும் அப்படி பற்றின்றி வைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதை அதன் மூலமே உணர்ந்தேன்.

கடல் -- கடலைப் பார்......கடலின் ஆழம் எத்தனை என்பதோ, அதற்குள் என்ன பொருள் இருக்கின்றது என்பதோ அதில் முழுகிப் பார்த்தால் ஒழிய வெளியில் ஒன்றும் தெரியாது. கடலின் அடியில் பாறைகளும் உண்டு, பலவித இரத்தினங்களும் உண்டு. விதவிதமான ஜீவன்களும் உண்டு. எத்தனை ஆறும், நதிகளும் வந்து அதனுடன் கலந்தாலும், அதனுள் எந்தப் பொருட்களை வீசி எறிந்தாலும் தன்னை அதனால் மாற்றிக் கொள்ளாமல் தன் மீதே அந்தப் பொருட்களை மிதக்க விட்டும், தன் காலடியில் அதைத் தள்ளி வைத்து விட்டும், மிதப்பவற்றை மெல்ல மெல்ல கரையில் தள்ளியும் விடுகின்றது. அப்படித்தான் ஒரு யோகியும் இருக்க வேண்டும் . தன்னைப் பற்றிய உண்மையை வெளியில் காட்டிக் கொள்ளாமலும், மற்ற சுக போகங்களில் தன்னை இழந்து விடாமலும் இருந்து கொண்டு தேவையற்றவற்றை விலக்கி வைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதையும் அதன் மூலமே தெரிந்து கொண்டேன்”

**மலைப் பாம்பு** – மலைப் பாம்பைப் பார். அது இறை தேடி இடமிடமாக அலைவது இல்லை. தன்னிடம் வந்து சிக்கும் பிராணிகளை விழுங்கி விட்டு பல நாட்கள் ஒன்றும் கிடைக்காவிடிலும் பசியோடு படுத்துக் கிடக்கின்றது. கிடைத்த இரையை சாப்பிடுகின்றது. பிராணிகளைத் தேடி அங்கும் இங்கும் அலைவதில்லை. அது போலத்தான் கிடைத்ததை உண்டு கொண்டு ஆத்ம திருப்தியுடன் வாழந்து கொண்டு இருக்க வேண்டும் என்பது பாடமாகக் கிடைத்தது.

**புறா** -- இந்தக் கதையைக் கேட்டால் சம்சார பந்தம் என்பது என்ன என்று புரியும். ஒரு காட்டில் புறா ஒன்று தன் மனைவி, குழந்தைகளுடன் ஆனந்தமாக வாழ்ந்து கொண்டு இருந்தது. குழந்தைகள் பிறந்ததை எண்ணி மிகவும் மகிழ்சியுற்ற புறா அவை எழுப்பும் கூச்சலில் தன்னை மறந்து லயித்திருக்கும். அப்படி மகிழ்ச்சியுடன் இருந்த ஒரு நாள் அந்த புறாக் குஞ்சுகளை தன் வலையில் சிக்க வைத்துப் பிடித்துக் கொண்டான் ஒரு வேடன். குழந்தைகள் தவிப்பதைக் கண்ட பெண் புறாவோ அவற்றைக் காப்பாற்ற முடியாமல் தவித்து அழுதது. முடிவாக அவற்றைக் காப்பாற்ற முடியாவிடிலும் அவற்றுடன் சேர்ந்தாவது இருக்கலாம் என்ற குழந்தைகளின் மீதான பாசத்தில் தானும் சென்று அவை இருந்த அந்த வலையில் தன்னை சிக்க வைத்துக் கொண்டது. இறை தேடப் போய்விட்டு திரும்பி வந்த ஆண் புறா அந்த காட்சியைக் கண்டு கண்ணீர் விட்டு அழுதது. அதற்கும் வேறு வழி தெரியாததினால் தன் குடும்பத்தினர் படும் பாட்டைக் கண்டு அதுவும் வேடன் கையில் தானே போய் சிக்கிக் கொண்டு மரணம் அடைந்தது. இந்தக் கதை எனக்கு என்ன உணர்த்தியது தெரியுமா , குடும்ப இன்பத்தில் லயித்து இருப்பவன் காமக்ரோதங்களுக்கும் பாசத்திற்கும் தன் மனதை அடிமையாக்கிக் கொண்டு விடுவதினால் உலகப் பற்றின் மீது அறியாமல் தன்னை இணைத்துக் கொண்டு விடுகின்றான். பிறப்பவன் என்றாவது இறந்தே ஆக வேண்டும் என்றாலும் காமக்ரோதங்களுக்கும்,

பாசத்திற்கும் தன்னை முழுமையாக அடிமையாக்கி வைத்துக் கொண்டு, அதுதான் தன் வாழ்க்கை என்ற குறுகிய மூடத்தனமான எண்ணத்துடன் இருந்து கொண்டு அதனால் அழிந்து விடக் கூடாது. பிறந்ததிற்கான காரணத்துக்கு நியாயம் கற்பித்த வண்ணமும் ஒருவனின் வாழ்க்கை அமைந்து இருக்க வேண்டும் என்பதே இதன் பாடம் எனப் புரிந்தது .

மீன் -- நீரில் கிடைக்கும் உணவு போதும் என்ற அளவில் மனதை வைத்துக் கொள்ளாமல், நாக்கு ருசியை அடக்க முடியாமல், தூண்டிலில் உள்ள உணவை எடுக்கப் போய் மற்றவரிடம் அகப்பட்டுக் கொள்ளும் மீனைப் போன்ற நிலையில் யோகிகள் இருக்கக் கூடாது . ஐம்புலன்களின் தடுமாற்றத்தின் முதல் ஆரம்பமே நாக்கின் ருசி. முதலில் ருசியை அடக்கி விட்டது போல அடங்குவது மனது நினைத்தாலும், ஒருவன் அறியாமலேயே அவனுக்குள் அடங்காமலேயே இருக்கும் அந்த ருசி என்ற மாயப் பேய். அதனால்தான் ஒரு விஷச் செடியை ஆணி வேருடன் பிடுங்கி எறிவது போல் நாக்கின் ருசியை அறவே ஒடுக்கி எறிய வேண்டும் என்பதே யோகிகள் முதலில் செய்ய வேண்டிய வேலை என மீன் மூலம் அறிந்து கொண்டேன்.

மான் -- மானுக்கு ஒரு குணம் உண்டு . அது இசைகளைக் கேட்டால் அந்த இன்பத்தில் மயங்கி கண் மூடிக் கொண்டு நின்று விடும். அந்த சமயத்தில் அது வேடர்களிடம் அகப்பட்டுக் கொள்ளும். எத்தனையோ முனிவர்கள் ஆடல் பாடல்களில் மயங்கிப் போய் தங்களுடைய தவ வலிமைகளை இழந்தது உண்டு . ஆகவேதான் யோகி எனப்படுபவன் எந்த நிலையிலும் ஒரு கீழ்த்தரமான இசையில் தன் மனதை பறி கொடுத்து விட்டு அதில் தன்னை அடிமை படுத்திக் கொள்ளாமல் உறுதியான மனதுடன் இருக்க வேண்டும் என்பதை மான் மூலம் நான் கற்றுக் கொண்டேன்.

யானை – பெண்ணாசை மிகக் கொடியது என்பதை யானையே எனக்குக்

கற்றுத் தந்தது. காட்டில் யானையைப் பிடிக்க வேடர்கள் ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டி அதன் மீது இலை தழைகளைப் போட்டு மூடி வைத்து விட்டு அதன் மீது ஒரு பெண் யானையின் பொம்மையை வைத்து விடுவார்கள். அந்தப் பக்கமாக வரும் ஆண் யானை அந்த பெண் யானையின் பொம்மையை பார்த்து, அது ஒரு நிஜ யானை என எண்ணிக் கொண்டு அதை அடைய நினைத்து ஓடி வரும் பொழுது பள்ளத்தில் விழுந்து விடும். அது மட்டும் அல்ல தான் ஒரு பெண் யானை மீது மையல் கொண்டு அதை பிடிக்கத் துரத்தும் பொழுது வேறு ஒரு ஆண் யானையும் அதைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தால் அதனுடன் போரிடத் துவங்கும். அந்தப் போரின் முடிவில் அவைகளில் ஒன்று மடிந்துவிடும். அழிவும் பெண்ணால் வரும் என்னும் பொழுது பெண் ஆசையை அடக்குவது அவசியம் அல்லவா, ஆகவே ஒரு யோகி பெண்ணை பார்த்து மயங்குவது தற்கொலைக்கு சமம் என்ற தத்துவத்தை யானை எனக்குக் கற்றுத் தந்தது.

குழந்தை – கள்ளம் கபடம் அற்றது அற்றது ஒரு குழந்தை. அதனால்தான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கின்றனர். அதற்கு இன்பமோ, துன்பமோ எதுவும் தெரியாது. அன்னையிடம் பால் பருகும் அதற்கு தேவை தன்னுடன் எவராவது இருக்க வேண்டும், தன்னுடன் விளையாடிக் கொண்டு இருக்க வேண்டும். அவ்வளவே. அதில்தான் அது இன்பத்தைக் காண்கின்றது. கவலை அற்ற வாழ்க்கை அது. அப்படித்தான் ஒரு யோகியும் குழந்தையைப் போல கவலை இன்றி இருக்க வேண்டும் என்பதை குழந்தை எனக்குக் காட்டியது.

தேனி – சுறுசுறுப்புக்குத் தேனியைக் கூறினாலும் அதன் குணங்கள் கவனிக்கப்பட வேண்டியவை. பல் வேறு இடங்களிலும் உள்ள பூக்களில் இருந்து அந்த மலர்களை சிதைக்காமல் அதில் உள்ள தேனை மட்டும் சிறிது உண்ட பின் அதுவும் போதாது என இன்னமும் எடுத்து வந்து ஒரு

இடத்தில் அதை சேமித்து வைக்கின்றது. அத்தனை பாடுபட்டும் கஷ்டப்பட்டும் சேகரித்து வைத்த தேனை தேன் எடுப்பவன் புகை மூட்டி தேனிகளைத் துரத்திய பின் தேனை எடுத்துக் கொண்டு சென்று விடுகின்றான். இது கற்றுத் தந்த பாடம் என்ன தெரியுமா, ஒரு யோகி அன்றாடம் தேவைப்படும் அளவில் மட்டும் பிட்சையை எடுத்து உண்டபடி இருக்க வேண்டும், மறு நாளுக்கென சேர்த்து வைக்கலாகாது. பல பூக்களில் இருந்து தேனிகள் தேனை எடுத்து சாப்பிடுவது போல பல இடங்களில் இருந்தும் அனைத்து நல்ல விஷயங்களை கற்று அறிந்து கொண்டும், அதில் உள்ள விஷயத்தைக் ஒவ்ஒன்றாகப் படித்து தனக்குள் கிரகித்துக் கொண்டும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

விட்டில் பூச்சி – விட்டில் பூச்சி என்ன செய்கின்றது தெரியுமா , எங்கு ஜுவாலைத் தோன்றினாலும் அந்த மின்மினுக்கும் தோற்றத்தில் மோகமுற்று அதன் அழகில் மயங்கி அதன் அருகே ஓடிச் சென்று அதிலேயே விழுந்து மடிகின்றது. இது கற்றுத் தரும் பாடம் என்னவென்றால் நன்கு அலங்கரித்துக் கொண்டு செல்லும் பெண்களின் வெளி அழகில் மயங்கி மோகம் கொண்டு அழிந்து விடாதே.

இப்படி பல்வேறு உதாரணங்களைக் காட்டியபடி தனக்கு குரு என்பவர்கள் எவர் எவர் என கூறிக் கொண்டு இருந்ததை, இடையிடையே சற்று நிறுத்திய பின் மீண்டும் தத்தாத்திரேயர் தொடர்ந்து கூறலானார்.

தேன் சேகரிப்பவன் -- தேன் எடுப்பவன் தன்னை முழுமையாக ஒரு போர்வையினால் போர்த்திக் கொண்டு புகையைக் கிளப்பி விட்டு தேனிக்களைத் துரத்திய பின் தேன் கூட்டை எடுத்துச் சென்று தேனை எடுக்கின்றான். அப்படிச் செய்யாமல் தேன் கூட்டை நெருங்கினால் வந்தவனை தேனிக்கள் கடித்துக் குதறி துரத்தி விடும். ஆகவே தானும்

அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் சொத்து சேர்த்து வைத்தால் இப்படித்தான் தேன் சேகரிப்பவன் போன்று எவனாவது வந்து அனைத்தையும் அபகரித்துக் கொண்டு போய் விடுவான் என்ற உண்மை தெரிய வந்தது.

சிறு பறவை – ஒரு சிறிய பறவை ஒரு மாமிசத் துண்டை கவ்விய வண்ணம் பறந்து கொண்டு இருந்தது. அதைக் கண்ட ஒரு பெரிய பருந்து அந்த சிறு பறவையை பிடிக்க துரத்தி வந்ததும், புத்திசாலித்தனமான அந்த சிறு பறவை தன் வாயில் இருந்த மாமிசத் துண்டை கீழே போட்டுவிட அந்தப் பெரிய பருந்து சிறு பறவையை விட்டு விட்டு மாமிசத் துண்டை எடுக்க ஓடியது. ஒரு பொருளை நாம் வைத்துக் கொண்டால் அதனால் நமக்கு தீமையே வரும் என்று தெரிய வந்தால், அதன் மீது ஆசை கொண்டு அலைவதை விட அதை தவிர்த்து விடுவதே நலம் என்ற படிப்பினை அதன் மூலம் கிடைத்தது.

அம்பு செய்பவன் --அம்பு செய்பவனைப் பார்த்தாயானால் அவன் அதில் தன்னுடைய முழு கவனத்தையும் செலுத்திச் செய்வது தெரியும். போரில் அம்புகள் எய்பவனின் கவனம் முழுவதும் எதிராளியிடம் இருந்து வரும் அம்பை பார்த்தபடி நிலையாக அதை எதிர் கொண்டு அழிக்கும் விதத்தில் இருக்கும். அப்படிப்பட்ட நிலையான மனதுடன் இருந்து கொண்டு இறை வழிபாடு கொண்டால் கலக்கமற்ற மனநிலை பெறலாம் எனப் புரிந்து கொண்டேன்.

பாம்பு -- பாம்பைப் பார் அது ஒரு இடத்திலும் நிலையாக தங்காமல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டு எறும்புப் புற்றிலும் பள்ளத்திலும் போய் வசிக்கும். அது மட்டும் அல்ல அது எப்பொழுதுமே மிகவும் எச்சரிக்கையோடு இருக்கும். அது போலத்தான் ஒரு யோகியும் தனக்கென ஒரு தனி இடத்தில் தங்காமல், அங்கும் இங்கும் சென்று கொண்டு

கோவில்களிலும், குகைகளிலும் வசித்தபடியும் இருக்க வேண்டும் எனப் புரிந்து கொண்டேன்.

புழு -- ஒரு வகையான வண்டு தன் புழுவை கூட்டில் வைத்துவிட்ட பின் மீண்டும் மீண்டும் அங்கு வந்து சப்தம் செய்தபடி இருக்கும். அது செய்யும் சப்தத்தினால் பயந்து போன புழு அந்தக் கூட்டை விட்டு வெளியே வராமல் அங்கேயே தங்கி இருக்கும். மெல்ல மெல்ல அந்தப் புழு ஒரு வண்டாக மாறும் வரை பெரிய வண்டு அப்படிக் கத்திக் கொண்டே இருக்கும். அது போலவே பக்தி பூர்வமாகவும் நிலையாகவும் கடவுள் மீது பயம் கொண்டு பக்தி செலுத்தி வந்தால் நம் உள்ளமும் பக்தி மார்கத்தில் மாறும் என்பதே அது தந்தப் பாடம்.

சிறுமி – திருமண வயதை எட்டிய ஒரு பெண் தானியம் திரட்டிக் கொண்டு இருக்கையில் அவள் போட்டிருந்த கை வளையல்கள் சப்தம் போட்டன. அப்படி சப்தம் வருவதைத் தவிர்க்க அவள் எல்லா வளையல்களையும் எடுத்து விட்டு இரண்டு வளையல்களை மட்டும் அணிந்து கொண்டு வேலை செய்யத் துவங்கினாள். அந்த இரண்டு வளையல்களும் கூட ஒன்றுடன் ஒன்று உராசித்துக் கொண்டு சப்தம் தரத் துவங்க, ஒரே ஒரு வளையல் மட்டும் போதும் என்று எண்ணிய வண்ணம் ஒற்றை வளையலை மட்டும் போட்டுக் கொண்டு சப்தம் வராமல் வேலை செய்தாள். அது போலத்தான் யோகியும் தன்னைச் சுற்றிலும் அதிகமானவர்கள் இருந்தால் குழப்பமே உண்டாகும் என்ற உண்மையை புரிந்து கொண்டு, தனியாகவே தான் இருந்து கொண்டு தன் கடமையை நிலையாகச் செய்து கொண்டு இருக்க வேண்டும் என்ற நியதியைத் தெரிந்து கொண்டேன்."

தத்தாத்திரேயர் தொடர்ந்து கூறலானார், "மன்னா இந்த உடலே ஒரு மாயை. நம் உடல் முழுவதும் படர்ந்து உள்ள அங்கங்கள் போதாது என்று

அளவற்ற ஆசைகளையும் நாம் பெருக்கிக் கொள்கின்றோம். நமக்கு வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் அனைத்திற்கும் இந்த உடல் கொண்டுள்ள காமக் குரோத இச்சைகளே காரணம். இருக்கும் ஒரு உடல் போதாது என்று ஒவ்ஒருவரும் நான், எனக்கு, என்று தன்னுடன் மனைவி, மக்கள், சம்பத்து என்று ஒன்றன் பின் ஒன்றாகப் பெருக்கிக் கொண்டே போகின்றனர். இன்று உள்ள இந்த உடல் நாளை இருக்காது என்பதே உண்மை எனத் தெரிந்தும் உடலுக்கு பல்வேறு வகைகளினால் ஆன சுகம் தேவைப் படுகின்றது. அதனால்தான் மாயையான இந்த உடலின் மீது பற்றை விலக்கி விட்டு, ஆசைகளையும் அழித்து விட்டு நான், எனக்கு என்ற அகந்தையை விட்டு விட்டு எல்லாமே அந்த பரப்பிரும்மன் என்று நான் இருக்கின்றேன். அனால்தான் என்னால் எந்தவித அச்சமும் இன்றி, ஆசையும் இன்றி, உலகப் பற்றும் இன்றி இத்தனை சுதந்திரமாத் திரிந்து அலைய முடிகின்றது”.

தத்தாத்திரேயர் கூறிய அனைத்தையும் கவனத்துடன் கேட்ட வண்ணம் இருந்தவன் கண்ணில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. மன்னன் இப்பொழுது அவரைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்து கொண்டான். தடாலென அவர் காலடியில் விழுந்து வணங்கினான். “ அற்புதம் , ஐயா .... அற்புதம் இனியாவது உங்களின் இந்த மாறு வேடத்தைத் களைந்து விட்டு உண்மையில் நீங்கள் யார் என இப்பொழுதாவது கூறுங்கள்” என மன்னன் அவரிடம் வேண்டிக் கொள்ள அவன் முன் தன் சுய உருவில் தோன்றினார் தத்தாத்திரேயர். வாழ்க்கை என்பது என்ன, அதில் எப்படி தன்னை அடக்கிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற பாடத்தைப் தத்தாத்திரேயரிடம் இருந்துப் பெற்ற யதுகுல மன்னனும் மனதில் தெளிவு பெற்றான். அதன் பின் அந்த மன்னனும் தத்த பக்தனாகவே மாறி வாழ்நாள் முழுவதும் மன அமைதி பெற்று வாழ்ந்து வந்தான்.

## *தத்தாத்திரேயர் ஆசி பெற்ற காத்தவீர்யன் கதை*

மார்கண்டேய புராணத்தில் தத்தாத்திரேயர் எப்படி எல்லாம் தன்னை பூஜிப்பவர்களுக்கு உதவி செய்து உள்ளார் என விரிவாக கூறப்பட்டு உள்ளது. ஆனாலும் பிரகதியில் நடந்த ஒவ்ஒரு சம்பவத்திற்கும் ஒவ்ஒரு காரணம் உண்டு. அதனால் வரங்களைப் பெற்று அழிந்தவர்களும் உண்டு, பிறர் அழியக் காரணமான சம்பவங்களும் உண்டு. தத்தாத்திரேயர் சரித்திரத்தில் அவர் வாழ்க்கையில் முக்கியமாக பங்கு பெற்ற கார்த்தவீர்யன், பரசுராமர், மற்றும் ரேணுகாதேவி போன்றவர்களின் கதையைக் கூறாமல் இருந்தால் அது நிறைவான தத்த சரித்திரமாக இருக்க முடியாது. கார்த்தவீர்யன் கதையின் மூலமாக ஒரு பகுதியில், பரசுராமர் மற்றும் ரேணுகாதேவியின் மகிமைகளையும் தத்தாத்திரேயர் கூறுகின்றார். முதலில் கார்த்தவீர்யன் என்பவன் யார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சூர்ய குலத்தில் உதித்தவன் அவன். கிருதவீர்யன் என்ற மன்னனுக்கும், அவன் மனைவி சுகந்தை என்பவளுக்கும் பிறந்தவன் கார்த்தவீர்யன். சூர்ய நாட்டை ஆண்டு வந்தவர்கள் ஷத்திரிய வம்சாவளியினர். அவர்களின் பிற்கால சந்ததியினரே வடநாட்டில் உள்ள ஜெயஸ்வால் என்பவர்கள் என்றும் கூறுகின்றனர். அவர்களுடைய குருக்கள் பார்கவா என்ற பிராம்மண வம்சத்தினர். அவர்களை பிருகு என்றும் கூறுவர். உண்மையில் ஷத்ரியர்களும் வேதங்களை நன்கு கற்று அறிந்தவர்களே. அவர்கள் பண்டிதத்தில் பிராமணர்களுக்கு இணையானவர்கள் என்பதில் ஐயம் இல்லை. அவர்கள் கொண்டிருந்த உடல் அமைப்புக்களினால் யுத்தங்களில் சண்டை போட தகுதியானவர்களாக இருந்தனர், ஆட்சிப் பொறுப்புக்களையும் ஏற்று இருந்தனர். பண்டிதர்கள் என்ற பிராமணர்களோ அவர்களின் வழிகாட்டிகளாக இருந்தனர். சூர்ய மன்னர்கள் கொடையாளிகள். அவர்களில் முக்கியமானவர் கார்த்தவீர்யனின் தந்தையான கிருதவீர்யன் என்பவர். வீர்யன் என்பது அவர்களின் வம்சப் பெயராகவே விளங்கியது. கிருதவீர்யன் பூர்வ ஜென்மத்தில் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்த

சம்பன் என்பவன். அந்த ஜென்மத்தில் அவன் செய்த பெரும் பாவங்களினால் அடுத்த ஜென்மத்தில் ஒரு புத்திரன் மூலம் அவனுக்கு சோகம் ஏற்படும் என்ற சாபத்தை ச்யவன முனிவரின் மூலம் பெற்று இருந்தார்.

அப்படி ஒரு சாபம் பெற்றவர் அதற்கு அடுத்தப் ஜென்மத்தில் மகா பலசாலியாகவும் வித்வானாகவும் பிறந்தார். பெரிய நாட்டை தன் கீழ் கொண்டு வந்து ஆண்டு வந்தார். பல்வேறு யாகங்களை வெகு சிறப்பாகச் செய்து முடித்திருந்தார். சோமவேதா என்ற யாகத்தை செய்து பிருகு போன்ற முனிவர்களுக்கு நிறைய தானம் செய்தார். யமராஜனின் சபையை அலங்கரித்தவர்களில் அவரும் ஒருவர். ஆனால் அவருக்கு இருந்த ஒரே குறை, முந்தைய ஜென்மத்தில் கிடைத்து இருந்த முனிவரின் சாபத்தின் பலனாக அடுத்த பிறவி எடுத்து இருந்த கிருதவீர்யனுக்குப் பிறந்த எந்தக் குழந்தைகளுமே உயிருடன் இருக்கவில்லை. கிருதவீர்யனுக்கு வயதும் ஏறிக் கொண்டே இருந்தது. தனக்குப் பிறகு இத்தனைப் பெரிய நாட்டை எவரிடம் ஒப்படைப்பது என்ற கவலைப் பிறந்தது. அந்த நிலையில் அரச சபைப் பண்டிதர்களாக இருந்தவர்கள் சிலர், கிருதவீர்யன் யக்கியவால்யரிடமும் பிரகஸ்பதியிடமும் சென்று அவர்களுடைய ஆலோசனையைப் பெற வேண்டும என்று ஆலோசனைக் கூறினர். ஆனால் யக்கியவால்யரிடம் நேரடியாகச் சென்று அது குறித்துக் கேட்க மனோ தைரியம் இல்லாத அரசன் அதற்காக முதலில் தன்னுடைய மனைவியை யக்கியவால்யரின் மனைவியிடம் அனுப்பி அவளிடம் உதவி கோருமாறு அனுப்பினார்.

யக்கியவால்யருக்கோ கல்யாணி மற்றும் மைத்திரேயி என்ற இரு மனைவிகள் இருந்தனர். அவர்களில் மைத்திரேயி மகா பண்டிதம் பெற்றவள். என்ன இருந்தாலும் ஒரு மாபெரும் முனிவரின் மனைவி அல்லவா. மைத்திரேயியை சந்தித்த கிருதவீர்யனின் மனைவி அவளை வணங்கிவிட்டு

அவளிடம் வந்ததிற்கான காரணத்தைக் கூறி அழுதாள். முந்தைய ஜென்மத்தில் ச்யவன முனிவரின் மூலம் பெற்ற சாபத்தினால் இந்த ஜென்மத்தில் கிருதவீர்யனுக்குப் பிறந்த எந்தக் குழந்தைகளுமே உயிருடன் இல்லை, உயிருடன் இருக்கவும் மாட்டார்கள் என்பதினால் தனக்கு பிறக்கும் ஒரு குழந்தையாவது உயிருடன் இருக்க என்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்று கூறுமாறு அவளிடம் வேண்டினாள். மைத்திரேயியும் கிருதவீர்யனின் மனைவிக்கு சில கடுமையான விரதங்களைக் அனுஷ்டிக்குமாறு அறிவுறைக் கூறினாள்.

அவற்றை அவள் நியமப்பூர்வமாக அனுஷ்டித்தால் மட்டுமே பாவ விமோசனம் பெற முடியும் என்றும் கூறினாள். அதே சமயத்தில் கிருதவீர்யனும் மாமுனிவரான பிரகஸ்பதியிடம் சென்று தான் அவரிடம் வந்ததிற்கான காரணத்தைக் கூறினார். பிரகஸ்பதியும் தத்தாத்திரேயர் தனக்கு உபதேசித்த சூர்ய மந்திரத்தைப் பற்றிக் கூறி அதை உபாசனை செய்து தத்தாத்திரேரை வழிபட்டால் விமோசனம் நிச்சயம் கிடைக்கும் என்றார். கிருதவீர்யனும் அவன் மனைவியும் சற்றும் தயங்காமல், பிரகஸ்பதி கூறிய சூர்ய உபாசனையையும், மைத்திரேயியும் கூறிய விரதத்தையும் விதிப்பூர்வமாக செய்து முடித்தனர். அடுத்த சில மாதங்களிலேயே கிருதவீர்யனின் மனைவீ கர்பமுற்று ஒரு ஆண் மகனைப் பெற்று எடுத்தாள். ஆனால் அப்படி பிறந்த அழகான குழந்தையோ முடமாகிய கைகளுடன் பிறந்தது. இருந்தாலும் தத்தாத்திரேயின் அருளினால் ஒரு குழந்தையாவது உயிரோடு பிறந்ததே என ஆறுதல் பட்டு அதை மகிழ்ச்சியோடு ஏற்றனர் கிருதவீரன் தம்பதியினர். குழந்தை முடமாகப் பிறந்ததற்கும் ஒரு பின்னணிக் காரணம் இருந்தது. பூர்வ ஜென்மத்தில் அது பெற்றிருந்த ஒரு சாபமே அதற்கான காரணம். அந்தக் கதை என்ன?

முன் ஒருகாலத்தில் சுதர்சன் என்பவன் மகாவிஷ்ணுவின் சேனையில்

முக்கியமான ஒரு வீரனாக இருந்தான். அந்த கால கட்டத்தில் பல்வேறு நிலைகளில் திருமால் பல அரக்கர்களை அழிக்க வேண்டி வந்தது. அந்த சமயங்களில் எல்லாம் திருமாலிற்கு பெரும் துணையாக ஆயுதங்களை ஏந்திய வண்ணம் சுதர்சனே நின்றிருந்தான். யுத்தங்களில் விஷ்ணு வெற்றி பெற்ற பொழுதெல்லாம் தன்னால்தான் அந்த வெற்றி கிடைத்ததுப் போல பிறர் எதிரில் காட்டிக் கொண்டிருந்தான். அதை விஷ்ணுவும் அறிந்து கொண்டார். அவன் அப்படி செய்து வந்த பைத்தியக்காரத்தனமான எண்ணத்தை என்றாவது ஒரு நாள் மாற்றிக் கொள்வான் என எதிர் பார்த்துக் காத்திருந்தார். ஆனால் அவன் கர்வத்தைக் குறைத்துக் கொள்ளவும் இல்லை, தான் செய்து வந்த முட்டாள்தனத்தை மாற்றிக் கொள்ளவும் இல்லை. ஒரு நாள் திருமாலுக்கு கோபம் வந்தது. அவனைக் கூப்பிட்டு அனுப்பினார். “என் வெற்றிக்குக் காரணம் நீதான் என்று அனைவரிடமும் தொடர்ந்து பொய் கூறி வரும் உனக்கு இனி என் எதிரில் நிற்கக் கூடத் தகுதி இல்லை. ஓடிப் போ...... நீ செய்த காரியத்திற்கு அடுத்த பிறவியில் கையில்லா முடமாகப் பிறந்து மீண்டும் என்னையே சரணடைந்து என் கையாலேயே மடிவாய்” என சாபமிட்டார். அந்த சாபத்தினால் இப்போது அவனே கிருதவீரன் தம்பதியினருக்கு குழந்தையாகப் பிறந்திருந்தான்.

குழந்தை வளர்ந்து பெரியவனாயிற்று. வம்சாவளிப் பெயரையும் சேர்த்து அவனுக்கு கார்த்தவீர்யன் என்று பெயர் சூட்டினர். அதோடு கூட அவனுக்கு அர்ஜுனன் என்ற பெயரையும் வைத்தனர். அங்கஹீனத்தைத் தவிற வேறு எந்த குறையும் இல்லை கார்த்தவீர்யனுக்கு. மிகவும் புத்திசாலியாகவே வளர்ந்து வந்தான். காலப் போக்கில் முடமாக இருந்து வந்த காத்தவீர்யனின் கவலையில் உழன்றே தந்தை கிருதவீர்யனும் இறந்து போனான். கிருதவீர்யன் பதவிக்கு வரும் முன்பு கிருதவீர்யனின் முன்னோர்கள் பிராம்ண வம்சத்தினரருக்குப் பெரும் உதவிகள் செய்து

இருந்தனர். அவர்கள் கொடுத்த செல்வத்தையும், உதவிகளையும் பெற்ற பிராமணர்கள் மெல்ல மெல்ல நல்ல நிலைக்கு உயர்ந்து ஷத்திரியர்களுக்கு இணையான செல்வந்தர்களாக ஆயினர். காலம் ஓடியது. கிருதவீர்யன் இறந்து சில காலம் கழிந்த பொழுது பிராம்மண வம்சத்தினர் செல்வம் பெருகி அவர்கள் செழிப்புடன் இருக்க பல்வேறு காரணங்களினால் ஷத்திரியர்களின் வாழ்க்கை நலிவுற்றது. செல்வத்தை இழந்த ஷத்திரிய வம்சாவளியினர் பிராமண வம்சத்தினரிடம் சென்று தங்களுக்கு உதவுமாறு கேட்டனர். பிராமணர்களோ உதவி செய்ய மனமில்லாது அதற்கு மறுத்து விட்டனர். அதுவே மெல்ல மெல்ல ஷத்திரியர்கள்-பிராம்மணர்களின் பகை துவங்கக் காரணமாயிற்று.

ஷத்திரியர்கள் பிராம்மணர்களைப் பழி வாங்கத் துவங்கினர். அவர்கள் பதுக்கி வைத்து இருந்த செல்வத்தையும் பறித்துக் கொள்ளத் துவங்கினர். ஷத்திரியர்களின் கொடுமையைத் தாங்க முடியாமல் பல பிராமணர்கள் அங்கிருந்து தப்பி ஓடிச் சென்று இமயமலை அடிவாரங்களில் வசிக்கலாயினர். அந்த நேரத்தில்தான் பிருகு வம்சத்தில் (பிராமணர்களின் இன்னொரு பெயர்) அத்ரி ரிஷியும், ஷத்திரிய வம்சத்தில் கார்த்தவீர்யனும் பிறந்திருந்தனர். ஷத்திரியர்கள்-பிராமணர்களின் இடையில் ஆரம்பம் ஆன பகை தொடர்ந்தது.

கிருதவீர்யன் இறந்த பிறகு முடமாகி பிறந்து இருந்தவனை கிருதவீர்யனின் அமைச்சர்கள் வம்சாவளியின் பெருமையைக் காக்க இராஜ்ய பரிபாலனத்தை ஏற்கும்படி காத்தவீர்யனிடம் வற்புறுத்தத் துவங்க, முடமான தன்னால் ராஜ்ய பரிபாலனத்தை சிறப்பாக நடத்த முடியாது என்ற காரணத்தைக் கூறி அதனால் இராஜ்ய பரிபாலனத்தை ஏற்க அவன் மறுத்தான். ஆனால் அவர்களின் வாதங்களைக் கேட்ட பின் அவர்களின் கோரிக்கையைத் தட்ட முடியாமல் காத்தவீர்யன் முடமான நிலையிலும் இராஜ்ய பரிபாலனத்தை

ஏற்றான். அவன் ராஜ்ய பரிபாலனத்தை ஏற்கும் முன் கிருதவீர்யனின் அமைச்சரவையில் இருந்த கர்கா (*Garga)* என்ற முனிவர் அவனிடம் உடல் அங்கஹீனங்களினால் கவலைப்படாமல் இராஜ்ய பரிபாலனத்தை ஏற்ற பின் தத்தாத்திரேயரை சென்று சந்தித்து அவருடைய ஆசிகளினால் விளங்காமல் இருந்த கைகளுக்கு விடி மோட்சம் பெறலாம் என அறிவுறுத்தினார். அவர் கூறிய அந்த அறிவுரைப்படி காத்தவீர்யனும் இராஜ்ய பரிபாலனத்தை ஏற்றப் பின் தத்தாத்திரேயரை தரிசிக்க நினைத்தான்.

அப்பொழுது தத்தாத்திரேயர் மிகவும் பிரபலமான ஒரு யோகப் புருடராக ரிஷி முனிவர்களால் போற்றப்பட்டு வந்தவர். அதனால் உடனே சென்று அவரை தரிசிக்க விரும்பினான் கைகள் விளங்காத கார்த்தவீர்யன். கர்கா முனிவரிடம் சென்று தன் ஆசையைக் அவரிடம் கூறினான். அவரும் தத்தாத்திரேயர் விஷ்ணுவின் ஒரு அம்சமே என்றும், நர்மதை நதியில் குளிக்க அவர் வருவது உண்டு எனவும், அப்போது அவரிடம் சென்று வணங்கிய பின் துாய மனதுடன் அவரை ஆராதித்தால் நிச்சயமாக அருள் புரிவார் என்று ஆசி கூறி அவனை அனுப்பினார். அது போலவே அவரை சந்திக்க வந்த நாரத முனிவரும் நர்மதை நதியில் பத்திரதீப பிரதிஷ்டா என்ற யாகம் செய்யும்படி கார்த்தவீர்யனுக்கு அறிவுறைக் கூறினார். தத்தாத்திரேயர் விசித்திரமானவர் என்பதால் வந்தவர் அனைவருக்கும் உடனேயே தரிசனம் தந்து ஆசி கூறியதில்லை. வேண்டும் என்றே வந்தவர்களை சோதிக்க எண்ணி அவர்கள் வரும் பொழுது பலமுறை ஆடைகள் கலைந்த நிலையிலும், இறைச்சியை கழுத்தபடி, கள்ளும் குடித்த வண்ணம், பல பெண்களுடன் சல்லாபம் செய்தபடியும் தோன்றுவார். ஸ்வாமி ஆடுவது நாடகமே, நம்மை சோதிக்கின்றார் என விடாப் பிடியாக நின்றால் ஒழிய அவருடைய ஆசிகளைப் பெற முடியாது என கர்கா முனிவரும் மற்றவர்களும் கார்த்தவீர்யனுக்கு தத்தாத்திரேயரைப் பற்றி கூறி இருந்தனர். கார்த்தவீர்யனுக்கு சுமார் பன்னிரண்டு வயது ஆனது. அப்பொழுது அந்த

முனிவர்களின் அறிவுறைப்படியே நர்மதை நதிக்குச் சென்று குளித்து விட்டு ஹோமம் செய்து முடித்த பின் நர்மதை நதியின் கரையில் தத்தாத்திரேயர் இருந்த இடத்தைத் தேடி அலைந்தான். ஒரு வழியாக மலையின் அடிவாரத்தில் இருந்த தத்தாத்திரேயர் ஆசிரமத்தை அடைந்தான். அவனுக்கு மற்றவர்கள் கூறி அனுப்பியபடியே தத்தரும் அலங்கோலமான நிலையில் இருந்தாலும் அவரை சென்று சரணடைந்து அவருக்கு சேவைப் புரிய தன் மனம் விரும்புவதாகவும் அவருடைய அருள் தனக்குத் தேவை எனவும் பலவாறு அவரை துதித்தான். அவன் வந்த காரணம் தத்தருக்குப் புரியாதா என்ன , ஆனாலும் அவனை சோதிக்க வேண்டும் என அவர் விரும்பினார். அப்பொழுதுதான் அவரிடம் வரும் மற்றவர்களுக்கும் தன்னிடம் வருபவர்கள் தீவிரமான பக்தி கொண்டு வந்தால்தான் அவர்களை தான் ஏற்றுக் கொள்வேன் என்பதைப் புரிய வைக்க முடியும் என்பதை மனதில் கொண்டு நாடகத்தைத் துவக்கினார்.

பாவம், வந்துள்ளவன் கை கால்கள் விளங்காமல் உள்ளவன். அவன் கஷ்டப்படுகின்றானே எனவும் யோசிக்கவில்லை. இதை செய், அதை செய் என ஓயாமல் பல வேலைகளைச் செய்யுமாறு கூறினார். கார்த்தவீர்யனும் லேசுப் பட்டவன் அல்ல. தன்னால் முடிந்த அளவிற்கு அவர் இட்ட அத்தனை வேலைகளையும் அவருக்குச் செய்யலானான். கால்களைப் பிடித்து விடுவது, மலர்கள் பறித்து வருவது, காய் கனிகளை கொண்டு வருவது என அத்தனை வேலைகளையும் முகம் சுளிக்காமல் செய்தான். நடு நடுவில் தத்தாத்திரேயர் அவனை வாய்க்கு வந்தபடி எல்லாம் கண்டபடி திட்டுவார். அனைத்து உணவையும் தானே அருந்தி விடுவார். மிச்சம் இருந்தால் மட்டுமே அவன் உணவு அருந்துவான். இப்படியாக சில காலம் நாடகமாடிக் கொண்டு இருந்தவண்ணம் அவன் மனதை சோதித்துக் கொண்டிருந்தவர், அவனை எத்தனைக் கொடுமைப் படுத்தினாலும் தன் மீது வைத்துள்ள நம்பிக்கையையோ பக்தியையோ சற்றும் குறைத்துக் கொள்ளாமல் தனக்கு

பணி விடைகளை தொடர்ந்து செய்து கொண்டிருந்ததைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவனுடைய அங்கஹீனத்தைக் கண்டு மனமும் வருந்தினார் .

அவனிடம் இருந்த பவ்யமான குணத்தையும், அவனுடைய தந்தையின் பிறவி பற்றியும் புரிந்து கொண்டிருந்த தத்த ஸ்வாமிகளோ ஒரு நாள் அவன் முன் சென்று தன் சுய உருவைக் காட்டி அவனுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். அதை எதிர்பார்த்துக் காத்திருந்தவன்போல தன் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு அவர் பாதங்களில் விழுந்து வணங்கியபடிக் கேட்டான் "ஸ்வாமி, இன்றுதான் என் வாழ்வில் வசந்தம் வீசுகின்ற நாள் என நினைக்கின்றேன். எனக்கு என் குடி மக்களை காப்பாற்றுவது முதல் கடமை. ஆனால் அதை செய்ய முடியாமல் இந்த அங்கஹீனமான கைகள் என்னைத் தடுக்கின்றன. அதனால் அங்கஹீனமானவனாக உள்ள எனக்கு ஆயிரம் கைகளையும், திடமான கால்களும் கொடுக்க வேண்டும். என்னை எதிர்ப்பவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் தோற்று ஓட வேண்டும். என் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே தீமைகள் செய்வோரும், ஏன் அந்த தீமைகளுமே கூட ஓடி ஒளிய வேண்டும். செல்வத்துக்குக் குறை வரக் கூடாது. என்னை நல் வழியில் நடத்திச் செல்ல நற்குணங்கள் கொண்டவர்களின் துணை என்றும் எனக்கு இருக்க வேண்டும். நான் என்றும் இளமையுடனும் இருக்க வேண்டும். நான் தர்ம வழியில் இருந்து தவறி செல்லும் கால கட்டத்தில் என்னை விட பலசாலியும் பெருமை மிக்கவனால் மட்டுமே என் உயிரை பறிக்க முடியும் என்பதான வரங்கள் வேண்டும் என்றான். அப்படிப்பட்ட வரங்களைத் தந்து தன்னைக் காத்து அருளும்படி அவரிடம் வேண்டி நின்றான்".

தத்தாத்திரேயரும் அவன் கேட்ட அனைத்து வரங்களையும் தயங்காமல் தந்தார். கூடவே அவன் மானிடப் பிறவியில் இருந்தாலும் எங்கும் சென்று

வர ஒரு விஷேசமான தேர் ஒன்றையும் அவனுக்குத் தந்தார். கை, காலில்லாமல் பிறந்த கார்த்தவீர்யன் இப்படியாக தத்தாத்திரேயரிடம் வரமும் உபதேசமும் பெற்றான். அவற்றைப் பெற்றுக் கொண்டு மனம் மகிழ்ந்து திரும்பி வரும் பொழுது வழியில் ஒரு அசரி கூறியது 'அதிகம் இறுமாப்புக் கொள்ளாதே மூடனே, நீ பெற்ற வரங்களுக்குக் காரணம் பிராமணர்களே என்பதை மறந்து விடாதே. அவர்கள் துணை இன்றி ஷத்திரியன் நீ நாட்டை ஆள முடியாது என்பதைப் புரிந்து கொள்'. இது என்ன அபசகுனமாக இருக்கின்றதே என ஒரு கணம் கலங்கினான் கார்த்தவீர்யன். சற்று யோசனை செய்தவனுக்குப் புரிந்தது தன் மீது உள்ள பொறாமையினால் வாயு பகவான்தான் அதைக் கூறி இருக்கின்றார். எனவே அதை மனதில் இருந்து ஒதுக்கி விட்டு நடந்தார்.

அதன் பின் கார்த்தவீர்யன் அடிக்கடி தத்தாத்திரேயரை சென்று வணங்கி அவருடைய ஆலோசனைகளைக் கேட்டறிந்தபடி மிக உயர்வான நிலையில் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருந்தான். கார்த்தவீர்யன் ஆட்சி செய்த நாட்டின் பெயர் மகிஷ்மதி என்பது. கார்த்தவீர்யன் 85000 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த நாட்டை ஆண்டவன் என்பார்கள். இவனுக்கு அர்ஜுனன் என்றும் பெயர் உண்டு. அதனால்தான் தத்தாத்திரேயர் சரித்திரத்தில் தத்தர் அவனை அர்ஜுனா என அழைப்பதைக் காணலாம். அவன் ஆட்சியில் குறைகள் ஒன்றுமின்றி ஜனங்கள் வாழ்ந்து வந்தனர். தேவ முனிவர்கள் அவனிடம் மிகவும் அன்பும் மரியாதையும் வைத்து இருந்தனர். தான தர்மங்களை தம் மூதையோர் செய்ததை விட அதிகம் செய்தான். அநீதி நடந்த இடங்களுக்குத் தானே சென்று அவற்றை அடக்கினான். எளியவர்களை வலியோர் கொடுமைப் படுத்துவதைத் தடுத்தான். அப்படிப் பட்ட நிலைமை அவன் ஆண்ட பூமி முழுவதும் இருந்து கொண்டு இருக்க மக்களோ கடவுள் என்றாலே கார்த்தவீர்யன் என்று சொல்லும் அளவுக்குச் சென்று விட்டனர். இப்படியாக நல்ல ஆட்சி நடத்தி வந்தவன் மீது

பொறாமைக் கொண்ட இராவணனன் திக்விஜய யாத்திரை என்ற பெயரில் பல இராஜ்ஜியங்களை வென்றபடி இருந்து கொண்டு காத்தவீர்யன் இருந்த இராஜ்யத்திற்கும் வந்து அவனுடன் போரிட ஆயத்தமானான். மகா பலசாலி என கருதப்பட்ட இராவணணின் அகங்காரத்தை அடக்க வேண்டும் என்று எண்ணி அவனுடன் கார்த்தவீர்யனும் போரிடச் சென்றான்.

ஆனால் இராவணன் அப்போது நாட்டில் இல்லை. சிவ பூஜை செய்ய ஆற்றங்கரைக்குச் சென்று இருந்தான். அதே நதியில் கார்த்தவீர்யனும் குளிக்கச் சென்றான். வேண்டும் என்றே சிவ பூஜை செய்து கொண்டிருந்த இராவணன் அமர்ந்து இருந்த பக்கமாக தன்னுடைய ஆயிரம் கைகளால் ஒரு அணைக்கட்டைப் போன்று தேக்கி வைத்திருந்த தண்ணீரை விடுவித்தான். அவ்வளவுதான். இராவணணின் சிவ லிங்கம் அந்த தண்ணீரில் மூழ்கியது. பூஜை நின்றது. இதனால் கடும் கோபமுற்ற இராவணனும் கார்த்தவீர்யன் மீது போர் தொடுத்தான். கடுமையாக நடந்த போரில் தத்தாத்திரேயர் ஆசி பெற்று சிவ பெருமானின் பக்தரான இராவணனை வென்று சிறை பிடித்தான். அதன் பின் புலத்தியர் என்ற முனிவரின் வேண்டுகோளை ஏற்று சிறை பிடித்த இராவணனை விடுவித்தான்.

இன்னும் காலம் ஓடியது. கார்த்தவீர்யன் மனம் தளராமல் தன் கடமைகளை செய்தவண்ணம் மக்களின் நலனையே மனதில் வைத்துக் கொண்டு இராஜ்யத்தை ஆண்டு வந்தான். தத்தாத்திரேயரின் அனகாஷ்டமி விரதத்தை நாடு முழுவதும் அனுசரிக்கும்படி கட்டளை இட்டான். நேரம் கிடைத்த பொழுதெல்லாம் தத்தரின் ஆசிரமத்துக்குச் சென்று பல மணி நேரம் அமர்ந்து கொண்டு அவரை பூஜிப்பான். ஆனாலும் மெல்ல மெல்ல மனதுக்குள் இனம் புரியாத வகையில் ஒரு துயரம் தோன்றலாயிற்று. நமக்கு இல்லாதது இல்லை, இனி என்ன இருக்கின்றது இந்த வாழ்வில் என்று எண்ணத் தொடங்கினான். வார்கையின் தத்துவம் என்ன என்ற பெரும்

கேள்வி மீண்டும் மீண்டும் மனதில் தோன்றியது. விடை கிடைக்கவில்லை. வயது ஏற ஏற வாழ்கையில் வெறுப்பும் ஏற்பட்டது. துறவறத்தை ஏற்று அனைத்தையும் துறந்து விட்டு தத்தரிடமே சென்று விடலாம் என மனதில் ஆசை எழும்பியது. உடனே சென்று தத்தரைக் பார்க்க வேண்டும் என மனம் விரும்பியது. கிளம்பி விட்டான்.

தத்தாத்திரேயர் ஆசிரமத்தை அடைந்தவன் முதல் முறையாக அவர் தன்னுடைய கண்களை மூடியபடி தியானத்தில் அமர்ந்து இருப்பதைக் கண்டான். தியானத்தில் இருக்கின்றாரா இல்லை ஏதும் யோசித்தபடி அமர்ந்து இருக்கின்றாரா என்று புரியாமல் குழம்பினான். யாரைக் கேட்பது? அந்த நேரத்தில் எவருமே அங்கு இல்லை. போகட்டும், ஸ்வாமிகள் கண் விரிக்கும் வரை இருந்து அவரை மனதாற கண்டு களிக்கலாம், அவரையும் அதுவரை அவரை தொழுது கொண்டு இருக்கலாம் என்று எண்ணியவன் அவர் எதிரே அமர்ந்தபடி தியானித்தபடியும், பூஜை செய்தும், ஆராதித்தும், நமஸ்காரம் செய்தும் பொழுதைக் கழித்தான். அன்று முழுதும் தத்தர் கண் விரித்துப் பார்க்கவே இல்லை. அதனால் மனதில் பெரும் துயருற்றவன் அவரைத் தோத்திரம் செய்யலானான்.

“தேவா உனக்கு என் வணக்கம், ஞானத்தைத் தந்து அகங்காரத்தை அழித்தவரே உமக்கு என் வணக்கம். நீர் சச்சிதானந்த ஸ்வடுபம்,.......முனிவர்களாலும், ரிஷிகளாலும் கூட புரிந்து கொள்ள முடியாத உம்மை மாயயான உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கும் நான் எப்படிப் புரிந்து கொள்ள இயலும் என்பதை அறிந்து கொள்ளாத ஜடம் அல்லவா நான் .......அதனால்தான் உன் பாதங்களில் இப்போது சரணடைந்து விட்ட என் வணக்கத்தை எற்றுக் கொள் பரப்பிரும்மனே......சம்சார வாழ்வில் இருந்து விடுதலைக் கோரி உன்னிடம் வந்துள்ள இந்த அபலைக்குக் கை கொடுத்து கரை ஏற்று பிரபுவே.......கேட்ட அனைத்தையும் அள்ளித் தந்தாய்,

....... நான் கேட்டேன், ....... நீ கொடுத்தாய் .......ஆனால் பிரபு எல்லாமே உள்ள இந்த வாழ்வு ஒரு மாயை என்பதைப் புரிந்து கொண்டு உன்னிடம் சரணடைய வந்துள்ள என்னை ஆசிர்வதித்து இந்த சம்சாரம் என்றக் கடலில் இருந்துக் கரை ஏற்றுவாயா.......தயாநிதியே....... தாமரைக் கண்ணா,....... யோகிகளுக்கெல்லாம் மகா யோகியாக உள்ளவரே, நீங்கள் இன்றி நாங்கள் இல்லை....... உம்மிடம் அடைக்கலமாகி வந்திருக்கும் இந்த எளிய பக்தனை கண் திறந்து பார்த்து ஆசிர்வாதம் செய்வீர்களா இறைவனுக்கும் இறைவனாவனே' என்றெல்லாம் பலவாறு பிரார்திித்துக் கொண்டு இருந்தும் தத்தர் கண்களைத் திறக்கவே இல்லை.

மறுநாள் எங்கிருந்தெல்லாமோ முனிவர்கள், ரிஷிகள் என்ற பலர் அங்கு வந்து தத்தரை வணங்கி விட்டுச் சென்றனர். வந்தவர்கள் மாபெரும் முனிவர்கள், ரிஷிகள். அவர்கள் காத்தவீர்யனை ஒரு பொருட்டாகக் கருதவும் இல்லை, அவனிடம் எதுவும் கேட்கவும் இல்லை. ஆனாலும் கார்த்தவீர்யன் மனம் தளராமல் அங்கேயே ஒரு மூலையில் தனியாக நின்றிருந்தபடி இருந்தான். திடீர் எனக் கண் விரித்த தத்தரோ அவனை ஏறெத்தும் பார்க்காமல் வேறு இடத்தில் சென்று அமர்ந்தார்.

எங்கிருந்தெல்லாமோ வந்திருந்த முனிவர்கள், ரிஷிகளுடன் சேர்ந்து கொண்டு நதிக் கரைக்குச் சென்றார். அங்கு ஸ்னானம் செய்த பின் தினசரி செய்யும் பூஜைகளை முடித்த பின் மீண்டும் தன் இருக்கையில் வந்து அமர்ந்தார். கார்த்தவீர்யன் இன்னமும் ஒரு மூலையில் கண்களில் நீர் வழிய நின்று கொண்டுதான் இருந்தான். எதேச்சையாக அவன் பக்கம் திரும்பிய தத்தர் அவனை தன் அருகில் அழைத்தார். என்ன வேண்டும், என செய்கையிலேயே கேட்டதுதான் தாமதம் பொல பொல என்று கண்களில் ஆறு போல கண்ணீர் வழிய அவர் காலடியில் வந்து விழுந்தான் காத்தவீர்யன். அவனை தம் கரம் கொடுத்து எழுப்பினார். எழுந்தவனை

ஊம்‘........ம்........கூறு......    இன்னும் என்ன வேண்டும் , என்ன கேட்க வந்துள்ளா் , எழுந்த கார்த்தவீர்யனும் கூறத் துவங்கினான் “ஸ்வாமி, இந்த எளியவனுக்கு இன்னும் என்ன வேண்டும், என்ன கொடுக்காமல் விட்டு இருக்கின்றீர்கள்...... கேட்ட அனைத்தையுமே தந்து விட்டீர்கள்......இனி மேலும் கேட்டால், நான் மகா பாவி ஆகி விடுவேன். இந்த உலகில் உங்கள் கருணையினால், உங்கள் அருளினால் எத்தனை அனுபவிக்க வேண்டுமோ அத்துணையும் அனுபவித்து விட்டேன், செல்வத்துக்கு குறையில்லை, என் பலத்துக்கும் குறை இல்லை. ஆனாலும் மனதில் ஒரு சலனம்......ஆசாரம், நியமனம் என்று ஒவ்ஒருவரும் ஒவ்ஒரு விதமாக சாஸ்திரங்களை கோடிட்டுக் காட்டி அதை செய், இதை செய் என்று கூறுகின்றனரே. அப்படி என்றால் எந்த ஆசாரங்களைதான் நாங்கள் கடை பிடிப்பது? ஒருபுறத்தில் அனைத்தும் நீங்களேயான பரப்பிரும்மம் என்றும் கூறுகின்றனர். ஆனால் நீங்களோ ஆசாரங்களை மீறியவாறு காட்சி தருகின்றீர்கள். நான் வந்த பொழுது கூட நீங்கள் தியானத்தில் இருந்தீர்கள். அப்படி என்றால் பரப் பிரும்மம் எனப்படும் நீங்கள் யாரைக் குறித்து தியானத்தில் இருந்தீர்கள் , உங்களையும் விட மேலானவர் இந்த உலகில் வேறு எவர் இருக்க முடியும் , மோட்சத்தை அடைய என்னதான் வழி உள்ளது , இவற்றை எனக்கு விளக்கி விட்டால் போதும் ஸ்வாமி, நான் அனைத்தையும் துறந்து விட்டு எங்காவது சென்று உம்மை பிரார்தித்தபடி தியானம் செய்தபடி அமர்ந்து கொள்வேன்” என்றான் .

தத்தாத்திரேயர் முகத்தில் ஒரு பெரிய ஒளி தோன்றியது. சுற்றி நின்ற முனிவர்கள், ரிஷிகள் அனைவரும் தத்தாத்திரேயர் என்ன கூறப் போகின்றார் என ஆவலுடன் அவரை நோக்கி கைகளை கூப்பிய வண்ணம் நின்றிருந்தனர். தத்தாத்திரேயர் மெல்ல கூறலானார், “அர்ஜுனா, நீ இன்றுதான் உண்மையிலேயே என் மனதில் அதிக இடத்தைப் பெற்று நிற்கின்றாய். நீ வந்தது முதல் உன்னை நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். உன்

வாயில் இருந்து வெளிவந்த அத்தனை தோத்திரங்களையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். நான் யாரைக் குறித்து தியானத்தில் இருந்தேன் என்றோ என்னையும் விட மேலானவர் எவர் இருக்கின்றார் என்பதையோ ஒரு சரியான தருணத்தில் கூறுவேன். அதற்கான காலம் இன்னமும் வரவில்லை. அது ஒரு தனிக் கதை. இப்போதைக்கு நான் கூற விரும்புவது இதுவே. நான் தியானித்தது என் உள் ஆத்மாவையே. உன்னுடைய மற்ற கேள்விகளுக்கு எல்லாம் பதில் வேண்டுமாயின் அதற்கு சில கதைகளைக் நீ தெரிந்து கொள்ள வேண்டும்” என்றார். ஒருவன் எப்படி வாழ்ந்து கொண்டு இருந்தாலும், எதிலும் மயங்கிவிடாமல் அவனவன் காரியங்களை அவனவன் மனச் சாட்சிக்கு நியாயமாகப்படும் வகையில் நியதி பிழறாமல் செய்தும், செய்யும் அந்த ஒன்றையும் கூட மனப்பூர்வமாக, தெய்வீகமாகவே எண்ணி செய்து வந்தால், அவைகள் ஒருவனைத் தானாகவே மோட்சத்திற்கு செல்லும் வழியில் கொண்டு சென்று விடும் எனக் கூறியவர் அவற்றினை விளக்கும் சில உதாரணக் கதைகளையும் அவனுக்குச் சொன்னார்.

“மேலும் கூறினார் ‘அர்ஜுனா நான் கூறியவற்றை நன்கு கிரகித்துக் கொண்டாயா , சந்தேகங்கள் தோன்றுவது இயற்கை. அதுவும் நீ கேட்ட விளக்கங்களுக்கு நான் உனக்காகக் கூறிய கதைகள் வெறும் கதைகள் அல்ல. இது தத்துவார்த்தமான தர்கம். இந்த பூமியில் உள்ள அனைத்துமே ஒரு மாயை. இருட்டில் அமர்ந்து கொண்டு வெளிச்சத்தை தேடி அலையக் கூடாது. நாம் எதை நினைத்துப் பார்கின்றோமோ அது அதுவாகவே தெரியும் மனப்பக்குவத்திற்கு போக நன்கு பழகிக் கொள்ள வேண்டும். ஒரு குரு நமக்கு உபதேசித்ததை, வேத வாக்கியங்களை முழு மனதுடன் கேட்டும், அதை ஆராய்ந்தும், குரு உபதேசித்ததை எல்லாம் தியானம் செய்தவண்ணமும் இருந்தபடி, மனதை துாய்மையாக வைத்திருக்கக் கற்றுக் கொண்டு பற்றற்ற நிலையில் சென்று வேதங்களைப் பார். ஆத்மா மட்டுமே தெரியும் அந்த நிலையில் சென்று பார். அனைத்து விளக்கமும்

கிடைக்கும்". தத்தாத்திரேயர் கூறிய அனைத்தையும் கேட்ட கார்த்தவீர்யன் "ஸ்வாமி இன்று நீங்கள் கூறிக் கொண்டே இருந்த பொழுது எனக்குக் கிடைத்த ஆனந்தத்தை என்ன என்று சொல்வது , எப்படி விவரிப்பது என்றே தெரியவில்லை. ஆனாலும் குருதேவா, நீங்கள் எனக்கு முன்னர் உபதேசித்ததை எல்லாம் எனக்குள் புதைத்து வைத்திருந்து ஆயுளுக்கும் ஆனந்தத்தை அடைய முடியாமல் என் உள்ளம் தவிக்கின்றதே என்ன செய்யட்டும் மகா பிரபுவே" என கண்களில் நீர்மல்க கேட்டான் கார்த்தவீர்யன்.

தத்தாத்திரேயர் கூறினார் "அர்ஜுனா, காதில் கேட்டவை மனதில் பதியாததின் காரணம், அலை பாயும் மனமே...... முதலில் மனதை அடக்க வேண்டும். அதற்கான வழி என்ன எனில் பிராணாயணத்தை முழுவதும் கற்ற வேண்டும். பிராணண் என்பது நம் உயிர். அதைக் கட்டுப்படுத்தி விட்டு நாம் விரும்பும்படி மட்டும் அதை செல்ல விட்டால் நம் மனதும் அடங்கும். ஒரு வண்டி சக்கரத்துக்கு ஆணி போல ஒருவன் மனதுக்கும் பிராணண் உள்ளது. அதைக் கட்டுப் படுத்தி விட்டால் மனது தானாகவே கட்டுப் பட்டு விடும். பிராணணை எப்படி அடக்குவது? அதற்கு பிராணாயணம் செய்ய வேண்டும்.

பிராணாயணம் என்பது நம் உடலுக்குள் செல்லும் காற்றை அடக்கி ஆள்வது. அதை வெற்றிகரமாகச் செய்தால் முதல் படியை கடந்து விட்டவனாகி விடுவோம். அதற்குப் பிறகு தன்னுடைய குரு உபதேசித்ததை எல்லாம் மீண்டும் மீண்டும் மனதில் நிலைப் படுத்திக் கொள்ளும் பொழுது தியான நிலையை எட்டுகின்றோம். அந்த தியான நிலையை அடைந்த பின், நானே நான், நானே பிரும்மம் என்ற பிரவாகத்தை மனதுக்குள்ளே ஏற்படுத்திக் கொண்டே இருந்தால் அத்தனை சித்திகளும் தாமாகவே உன்னை வந்து அடையும். சலனமற்ற நிலையில் நீயும் இருப்பாய். சில நாட்களிலேயே ஜீவன் முக்தி அடைவாய். இப்பொழுது நீ பற்றற்ற

வாழ்கையில் இருந்து கொண்டு இருப்பதாகக் கூறுகின்றாய், உனக்குள் உள்ள அலை பாயும் மனதிற்கு நிம்மதி வேண்டும் என்கின்றாய். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு அல்லவா உள்ளது. உனக்கு மன நிம்மதி வேண்டும் எனில் அதற்கு நீ ஒன்று செய்ய வேண்டும். புனிதமான இந்த மலையில் தனிமையாக உள்ள குகைக்குள் சென்று நான் உபதேசித்தவற்றை மனதிலே கொண்டு ஏகாந்தமாக இருந்தவண்ணம் தவமிரு. அதன் பின் நீ சமாதி நிலையை அடைவாய்" என்று கூறி விட்டு அவன் தலை மீது தன் கையை வைத்து ஆசி கூறினார். அவருடைய ஆசியை பெற்றுக் கொண்டு எழுந்தவன் எதிரிலே தெரிந்த மலை குகைக்குள் சென்று தவமிருக்கலானான்.

பல மாதங்கள் கடந்தன. தியானம் சற்றே கலைந்தது. மீண்டும் தத்தாத்திரேயரிடம் சென்று அவரை வணங்கினான். இப்பொழுது எப்படி இருக்கின்றது எனக் கேட்ட தத்தரிடம் "பேரானந்த உலகில் இருந்தேன், ஆனால் மீண்டும் தடங்கல் ஏற்பட்டுவிட்டது ஸ்வாமி. அதனால் மீண்டும் உங்கள் ஆணையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் ஸ்வாமி" என்றவனை மீண்டும் அதே குகைக்குச் சென்று இன்னமும் சிறிது காலம் தவத்தில் இருக்குமாறு கூறி அனுப்பினார் தத்தர். சிறிது காலம் சென்றது. மீண்டும், மீண்டும் இடையிடையே பலமுறை வெளி வந்தான் கார்த்தவீர்யன். ஒவ்ஒரு முறையும் அவன் வந்த பொழுது அவனை மீண்டும் சென்று தவத்தினைத் தொடருமாறுக் கூறி அனுப்பினார் தத்தர். இப்படியாகப் பல காலம் கடந்த பின் ஒருமுறை தவம் கலைந்து இடையே வந்தவனை மீண்டும் சென்று தபத்தைத் தொடர அறிவுறுத்தாமல் நாடு திரும்பி தர்ம வழிப்படி நடந்தபடி இராஜ்ய பரிபாலனம் செய்யுமாறு கட்டளை இட்டார். தான் செய்த தவத்தினால் இன்னமும் அதிக மனோ பலம் பெற்ற கார்த்தவீர்யன் நாடு திரும்பினான், நல்லாட்சி செலுத்தி வரலானான்.

எவ்வளவு சிறந்த மனிதனாக ஒருவன் இருந்தாலும், ஞானம் பெற்றாலும்

காலப் போக்கில் தான் என்ற அகங்காரம் மெல்லத் தோன்றத் துவங்கும் என்பதே உலக நியதி. கார்த்திவீர்யன் மட்டும் இதில் எப்படி மாறுபட்டு இருக்க முடியும் , எது வேண்டாம் என நினைக்கின்றோமோ அதுதான் நம்மை ஆக்ரமிக்கும். கர்வம் கூடாது என அவன் நினைக்க நினைக்க அந்த கர்வமே அவன் மண்டையில் நிற்கலாயிற்று. அரச சபை நடவடிக்கைகளில் பண்டிதர்களின் தர்கங்களைப் உன்னிப்பாகக் கேட்டான்.

அந்தணர்களின் கேள்விகள், மற்றும் அவர்களுடைய வாதங்களை கவனித்தான். அவன் மனம் எண்ணலாயிற்று. இவர்கள் கூறுவது அனைத்தும் எனக்கே புரிகின்றது. வேதங்களை வைத்துக் கொண்டு அவனவனுக்குத் தோன்றிய எண்ணங்களின்படி தர்க்கமும் வாதமும் செய்து கொண்டிருக்கும் வேதமே ஒரு குழப்பமான ஒன்றாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அந்த வேதங்களை நான் ஏன் படிக்க வேண்டும் , அந்தணர்கள் காலையில் எழுந்து அதை செய், இதை செய் என ஆயிரம் கர்ம நிஷ்டங்களைக் கூறுகிறார்களே.

மகா ஸ்னானம் அது இது என பல்வேறு புண்ண நதிகளில் சென்று நிஷ்டா நியமங்களுடன் குளித்துவிட்டு வருகின்றார்களே, அப்படி செய்யும் அவர்கள் என்ன பெரிய சுகமான வாழ்வை பெற்று விட்டார்கள் , எத்தனை வேத பண்டிதர்கள் யாசகம் செய்தவண்ணம் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள், அவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் நான் என்ன பெரிய கர்ம நிஷ்டங்களை அனுசரித்து தத்தரிடம் இருந்து இத்தனை சக்திகளையும் பெற்றேன், விரதங்கள், நியமனங்களை அனுஷ்டிக்கும் அந்த அந்தணர்களும் எந்த விதமான விரதங்களையும், நியமனங்களையும் அனுஷ்டிக்காத என்னிடம் அல்லவா யாசித்தபடி இருக்கிறார்கள். அவர்களை விட நான் என்ன தாழ்ந்து விட்டேன்' என எண்ணத் துவங்கியவன் மனதில் அந்தணர்கள் பற்றி இருந்த நல்ல அபிப்பிராயம் களங்கப்படத் துவங்கியது.

ஒரு முறை தத்தாத்திரேய ஸ்வாமிகளின் தரிசனத்திற்குச் சென்றவன் தன் மனதில் எழுந்த அந்த சந்தேகங்களைக் குறித்து அவரிடமே கேட்டு விட்டான். "மகாப் பிரபோ...... அந்தணர்கள் அனைவரும் மகா ஸ்னானம், மகா ஸ்னானம், இந்த நதியில் குளி, அந்த நதியில் குளி என்று எல்லாம் கூறுகின்றார்களே, உண்மையில் நதிகளுக்கு அத்தனை சக்தி உள்ளதா?" சிரித்தபடியே தத்தஸ்வாமி அவனுக்கு நதிகளின் பெருமைகளையும், அதில் குளிப்பதால் ஏற்படும் பலன்களையும் விவரமாக எடுத்துக் கூறிய பின், பல கதைகளையும் அதற்கு ஆதாரமாகக் கூறி அவன் மனதில் எபுந்த சந்தேகங்களுக்கு விடை கூறினார். ஆனால் அவற்றை அவனுடைய உள் மனம் ஏற்கவில்லை. ஸ்வாமிகள் கூறிவிட்டதால் அவைகளை மீறவும் முடியவில்லை. ஸ்வாமிகளின் அருள் தனக்கு இருப்பதால் வேறு எதுவுமே வேண்டாம் என்றே மனது எண்ணியது.

வீடு திரும்பிய அவன், சுய அறிவோடு ஒருவன் சிந்தித்தால் தக்க விடை கிடைக்கின்றதே என நினைக்கத் துவங்கினான். அந்த மாதிரி நினைக்கத் துவங்கியதுமே அந்தணர்கள் அனுஷ்டிக்கும் அனைத்துமே ஒரு மாயைப் போலத் தோன்றலாயிற்று. அதே நேரத்தில் அவனை சுற்றி இருந்த மற்றவர்களுக்கோ அவன் உயர்ந்த நிலையில் சென்று கொண்டு இருந்ததினால் அவன் மீது பொறாமை ஏற்பட்டது. அவனைக் கவிழ்க்க தக்க தருமணம் பார்த்துக் காத்துக் கிடந்தனர். இப்படி ஒரு மன மாற்றம் கொண்டு வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கையில் ஒருநாள் அவனுடைய அரச சபையில் அந்தணர்களைப் பற்றிய வேண்டாத விவாதம் துவங்கியது. என்றும் இல்லாமல் அன்று பெரும் கோபம் கொண்ட மன்னன் கார்த்திவீர்யன் ஒன்றுமற்ற விவாதத்தில் எதை எதையோ அந்தணர்களுக்கு எதிராகப் பேசினான். அதற்கு முன் அவன் அந்தணர்களை அப்படி அவமானப் படுத்தும் வகையில் பேசியதே இல்லை. நடுச் சபையில் தங்களை அவமதிக்கும் முறையில் அவன் பேசுகின்றானே என அந்தணர்கள் மனம் வருந்தினர்.

மற்றவர்கள் அந்தணர்களை எக்காளத்துடன் பார்க்க தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருக்கும் நிலைமை அந்தணர்களுக்கு ஏற்பட்டது.

அதுவே தக்க தருணம் என்று காத்திருந்தது போல வாயு பகவான் எவர் கண்களிலும் புலப்படாத தோற்றத்தில் அவன் முன் தோன்றி அவன் நடந்து கொண்ட விதத்தை கடுமையாகக் குறைக் கூறினார். “ஒன்றும் இன்றி சரீரப் பிண்டமாக கிடந்த இருந்த உனக்கு வஷிஷ்டர், பிருகு, காஷ்யபர், அத்ரி என பல முனிவர்களுக்கு இணையாக இத்தனைப் பெரிய வாழ்வு தந்தாரே தத்தாத்திரேயர் அது மறந்து விட்டதா , அது மட்டும் அல்ல, தத்தாத்திரேயர் உனக்குக் கொடுத்த அத்தனை புத்திமதிகளையும் மீறி, இன்று அவையில் அந்தணர்களை அவமானப் படுத்தும் முறையில் நீ பேசியது இத்தனை நாளும் செய்த அனைத்து நற்பண்புகளையும் காற்றோடு பறக்க விட்டு விட்டது. நீ அப்படி நடந்து கொள்வாய் என அடையாளம் தெரியாமல் உன்னை வளர்த்து விட்டும், உன் உண்மையான மன நிலையைத் தெரிந்து கொள்ளாமல் உன்னை அந்தணர்களுக்கு இணையாக இத்தனைப் பெரிய நிலையில் ஏற்றியும் விட்டுள்ள அந்த தத்தாத்திரேயர்தான் உன் இந்த மாறுதலைக் கண்டு அவமானப்பட வேண்டும்” என அவனை உசுப்பி விட்டார்.

தத்தாத்திரேயர் பெயரைக் கேட்ட உடனேயே கார்த்திவீர்யன் மனம் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்தது. தான் செய்த பிழைக்கு தன் குருநாதர் எப்படி பொறுப்பேற்பார் என நினைத்தவன் சற்றும் தயங்காமல் எழுந்தான். அனைவர் முன்னிலையிலும் சற்றும் கவலைப் படாமல் தான் கூறிய அனைத்து கருத்துக்களுக்கும் தானே பொறுப்பு ஏற்பதாகக் கூறி விட்டு, அப்படி ஒரு தவறான கருத்துக்களைக் கூறி விட்டதற்கு தான் மிகவும் வருந்துவதாகவும் கூறி மன்னிப்புக் கேட்டான். எந்த ஒருவன் தன் குற்றங்களை பகிரங்கமாக தவறு எனக் கூறி விட்டு மன்னிப்புக்

கேட்கின்றானோ அந்த நிமிடத்திலேயே அவன் மற்றவர்களை விட உயர்ந்து விடுகின்றான் என்பது ஒரு தத்துவம். அதுவே இவன் விஷயத்திலும் நடந்தது. வாயுதேவன் நினைத்ததிற்கு மாற்றாக நல்லதே நடந்தது. மன்னன் கார்த்திவீர்யன் அனைவர் மனதிலும் முன்பை விட அதிகம் உயர்ந்தான். வாயு பகவான் போட்ட திட்டம் தோல்வி அடைந்து விட, கார்த்திவீர்யன் அழிய விரைவில் வேறு வழி எதாவது கிடைக்காதா என தவித்தவாறு அடுத்து என்ன செய்து எப்படி அவனை கவிழ்கலாம் என தேவர்களுடன் கலந்து யோசிக்கலானார்.

பல தேவ முனிவர்கள் கார்த்திவீர்யனிடம் மிகவும் அன்பும் மரியாதையும் வைத்து இருந்தனர் என்றாலும் சிலருக்கு அவன் மீது பொறாமையும் உண்டு. அதனால் அவன் புகழைக் கெடுக்க விரும்பிய அக்னி பகவான் ஒரு அந்தணர் உருவில் சென்று கார்த்தவீர்யனிடம் பிச்சைக் கேட்டார். எத்தனை கொடுத்தும் அவை எதுவுமே தனக்குப் போதவில்லை என்று வந்தவர் கூற வேறு வழித் தெரியாமல் வந்தவர் கேட்ட பிட்சையாக செடிகள், கொடிகள், மரங்கள் போன்றவற்றை உணவாக உட்கொள்ளுமாறு கூறி விட்டான். கூடவே அங்கு வந்து பிட்சைக் கேட்டு வந்தவர் அக்னி தேவன் என்பதையும் தன்னை களங்கப்படுத்தவே அவர் ஒரு திட்டத்துடன் வந்துள்ளார் என்பதையும் நொடிப் பொழுதில் புரிந்து கொண்டான். போகட்டும் எத்தனை ஆட்டம் போட்டால் என்ன, என்னை அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது' என மமதைக் கொண்டான். அந்த தைரியத்தில் தாராளமாகச் சென்று மனம் திருப்தி அடையும் அளவு சாப்பிட்டு விட்டுப் போங்கள் எனக் கூறி விட்டான். தருகிறேன் என்று கூறி விட்டால் அதில் இருந்து பின் வாங்க முடியாது. அவனுக்குத் தெரியும் அக்னி பகவான் என்ன செய்தாலும் அதனால் பாதிக்கப்பட இருப்பது காட்டில் உள்ள முனிவர்களும் ரிஷிகளும்தான். அவர்கள் சாபமிட்டால் அக்னி மட்டுமே அதற்கு பலியாவான் என்று நினைத்தான்.

ஆனால் பாவம் அவனுக்கு அப்போது புரிந்திருக்கவில்லை. பிறந்த விட்ட எவனுக்கும் மரணம் உண்டு. மரணத்தைத் தள்ளிப் போட முடியுமே தவிற தடுத்து நிறுத்த முடியாது. தத்தரின் கருணையினால் சில விதி விலக்கோடு சாகா வரங்களைப் பெற்று உள்ளவனுக்கு முடிவு காலம் துவக்கப்பட வேண்டும் என்ற நியதிக்கு உட்பட்டு இயற்கை தன் வேலையைத் துவக்கி விட்டது என்பது அவனுக்கு அப்போது புரிந்திருக்கவில்லை. மன்னனின் சம்மதம் கிடைத்ததும் அக்னி பகவான் மனம் மகிழ்ந்தது. சாப்பிட்டு விட்டுப் போங்கள் என அவர் கூறியதை எதிர்பார்த்து நின்று இருந்த அக்னியும் காட்டில், மலைகளில் என தான் சென்று கொண்டிருந்த வழிகளில் எல்லாம் இருந்த அனைத்து மரங்களையும் செடி கொடிகளையும் எரித்த வண்ணமே சென்றான். அதில் ஊர்வ முனிவரின் ஆசிரமமும் எரிந்து போயிற்று. மக்கள் மட்டும் அல்ல முனிவர்களும், ரிஷிகளும் அலறினர். அவர்களின் அலறல் காடுகள் முழுதும் எதிரொலித்தது.

அந்த அலறல் தவத்தில் இருந்த வஷிஷ்டர் காதுகளிலும் விழுந்தது. அவர் தவம் கலைந்தது. என்ன நடந்தது என்று வஷிஷ்டர் யோசிக்கவில்லை. மன்னன் தானம் கொடுத்ததினால்தானே இந்த நிலைமை ஏற்பட்டது என மனதில் கோபம் கொந்தளித்தது. மனதில் எழுந்த கோபத் தீயில் இத்தனைக்கும் காரணமானவர் யார் என்றும் யோசிக்கவில்லை. பொறாமையினால் அக்னி பகவான் செய்த சதியில் சிக்கிய மன்னன் தெரியாத்தனத்தினால்தான் தானம் செய்தான் என்றும் புரிந்து கொள்ளவில்லை. ஆத்திரம் அறிவை மறைத்தது. கடும் கோபமுற்ற வஷிஷ்ட முனிவர் நடந்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளாமல் கார்த்தவீர்யனுக்கு சாபமிட்டார் "நீ தானே அக்னியை காட்டில் சென்று அங்கு உள்ள செடி, கொடிகளை உணவாக உட்கொள்ளுமாறு கைகளை நீட்டிக் கூறினாய் அதனால் பிராமணர்களின் ஆசிரமங்களும் எரிந்து விட்டன. ஆகவே உனக்கு ஒரு பிராமணனின் கைகளினால் விரைவில்

மரணம் சம்பவிக்கட்டும்". பின்னாளில் அதுவே நடந்தது.

இன்னும் காலம் ஓடியது. கார்த்தவீர்யனின் இராஜய பரிபாலனம் நல்லபடியே நடந்து வந்தது. அனால் அவன் அழிவு காலம் நெருங்கத் துவங்க தன்னையும் அறியாமல் தவறான வழிகளைக் கடை பிடித்தபடி கார்த்தவீர்யன் செல்லலானான். தத்தாத்திரேயர் தந்திருந்த விஷேஷமானத் தங்கத் தேரில் ஏறி தன் மனதிற்குத் தோன்றியபடி மூவுலகமும் செல்லத் துவங்கினான். செல்லக் கூடாத இடங்களிலும் நுழையத் துவங்கினான். அப்படிப்பட்ட ஒரு நேரத்தில் ஒரு முறை இந்திரன் தன் மனைவியுடன் உல்லாசமாக இருந்த பொழுது அங்கு சென்று அவனை நையாண்டி செய்தான். தன்னை எவராலும் அழிக்க முடியாது என தத்தர் வரம் அளித்துள்ளதாக நினைத்தான். இதை எல்லாம் கண்டு மனம் வெதும்பிய தேவர்கள் விஷ்ணுவிடம் சென்று காத்தவீர்யன் செய்து வந்த அக்கிரங்களைப் பற்றி விவரமாகக் வுறினர். விஷ்ணு அவர்களை அமைதிப் படுத்திக் கூறினார் ' அஞ்ச வேண்டாம் அவன் அழிவு காலம் தொடங்கி விட்டது'. இன்னும் சில காலம் கழிந்தது.

வேறு ஒரு நாட்டுடன் அவன் தொடுத்திருந்த யுத்தத்தில் வெற்றிப் பெற்ற பின் ஒரு பெரும் சேனையுடன் தன் நாட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்த கார்த்தவீர்யன் வழியில் இருந்த காட்டில் மாபெரும் தபஸ்வியான ஜமதக்கினி முனிவரைக் கண்டு அவருக்குத் தன் வணக்கத்தைத் தெரிவிக்கச் சென்றான். வந்திருந்த சேனைகளுக்கும் களைப்பும் பசியும் எடுக்கத் துவங்க சாப்பிட உணவு எங்கு கிடைக்கும் எனத் தேடலாயினர். தன்னைக் கண்டு ஆசி பெற்றுச் செல்ல வந்தவனை அமரச் சொல்லிய ஜமதக்கினி முனிவரும் 'களைப்புத் தீர உணவு அருந்தி விட்டுப் போ' என்று கூற, கார்த்தவீர்யன் தயங்கினான் 'இல்லை ஸ்வாமி, நான்

கிளம்புகின்றேன், என்னுடன் பெரும் சைனியமே வந்துள்ளது. அவர்களுக்கும் சாப்பிட நான் எதாவது செய்தாக வேண்டும். அவர்கள் பட்டினியுடன் இருக்கையில் நான் மட்டும் உணவு அருந்துவது தர்மம் அல்ல' என்றான். முனிவர் சர்வசாதாரணமாக நகைத்தபடிக் கூறினார் "மன்னா நீ என்னைப் பார்க்க வந்த பின் உணவு அருந்தாமல் போகலாமா , கூடாது அப்பனே.... கூடாது...... நீ ஏன் கவலைப்படுகிறாய், நான் உணவு அருந்த உன்னை மட்டும் அல்ல உன் சைனியங்களையும் சேர்த்துத்தான் அழைத்தேன். அனைவரும் உணவு அருந்திவிட்டுச் செல்லட்டும். அவர்களையும் கூப்பிடு" என்று கூறி விட்டு 'அம்மா வந்துள்ள விருந்தாளிகளுக்கு வயிறார உணவு தந்து அனுப்பம்மா' என்று உள்ளே எவரையோ பார்த்துக் கூறினார். மன்னன் அதிர்ந்து நின்றிருந்தான். இத்தனை பெரிய சைனியத்திற்கு இவர் எப்படி உணவு தரப் போகின்றார்?

முனிவரின் வீட்டின் உள்ளிருந்தது வெளி வந்தது ஒரு வெள்ளை நிறப் பசு. சற்று நேரம்தான். போடப் போட எங்கிருந்து வந்தது உணவு, எங்கிருந்து வந்தது உணவு என பிரமித்து நின்ற பொழுதுதான் தெரிந்தது அத்தனை உணவையும் தந்தது அந்தத் தெய்வப் பசுதான் என்று. அனைவரும் வயிறார உணவு அருந்தினர். வந்திருந்த அனைவருமே முனிவரின் பெருந்தன்மையை பெரிதாகக் போற்றிப் புகழத் துவங்க மன்னன் மனதில் தோன்றிய பொறாமை வெறுப்பாக மாறியது. விதி தன் வேலையை வேகமாகச் செய்யத் துவங்கியது. 'இத்தனை பெரிய சாம்ராஜ்யம் இருந்தும் நான் செய்ய முடியாத ஒரு வேலையை கேவலம் காட்டில் உள்ள ஒரு முனிவன் செய்து விட்டானே . இந்த பசு மட்டும் நம்மிடம் இருந்தால் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் உருக் குலைந்துப் போய் விடுமே' என எண்ணியவன் மனதில் பொறாமை எழுந்தது. முனிவரோ அவன் மீண்டும் எதையோ கூறத் தயங்குகின்றானே என்பதைப் பார்த்து விட்டுக் கேட்டார் 'என்ன மன்னா

என்ன யோசனை செய்கிறாய், சாப்பிட இன்னமும் எதுவும் வேண்டுமா?' மன்னன் பார்த்தான், இதுவே தக்கத் தருணம் என நினைத்து துணிந்து கேட்டு விட்டான் 'உங்களுக்கு எத்தனைப் பணமும் பொருளும் வேண்டுமோ அத்தனையையும் தந்து விடுகின்றேன். ஸ்வாமி எனக்கு இந்தப் பசுவை விற்று விட வேண்டும்'. தீயை மிதித்தவர் போல அதிர்ந்து நின்றார் முனிவர். 'இந்தப் பசுவையா, நான் விற்க வேண்டுமா, என்ன மன்னா கேலி செய்கிறாயா , பிராமணர்களுக்கு நீங்கள்தான் யாசகம் தர வேண்டும். ஆனால் நீங்கள் என்னடா என்றால் ஒரு பிராமணணிடமே பொருளை யாசகம் கேட்கலாமா?' என்றார்.

அவர் மிக அதிகமான பணத்தையும், பொருளையும் எதிர்பார்த்துக் கொண்டு அதனால் பசுவைத் தர மறுப்பதாக எண்ணினான் மன்னன். இன்னமும் இது தருகிறேன், அது தருகிறேன் என பல பொருட்களைத் தருவதாக ஆசை காட்டினான். முனிவரோ பசுவை இழக்க எந்த நிலையிலும் தயாரில்லை. அந்தப் பசு தன் தாயைப் போன்றது என மன்றாடிக் கூறினார். மன்னனும் விடுவதாக இல்லை. அந்தப் பசு எனக்கு வேண்டும் என கோபத்துடன் கூறலானான். அவன் என்ன கூறியும் அந்தப் பசுவைத் தர அவர் ஒப்புக் கொள்ளவில்லை என்பதினால் தன் சேனையினரை அழைத்து அதை கட்டாயமாக ஓட்டிச் செல்லும்படி கட்டளை இட்டு விட்டான். முனிவர் அத்தனை பெரிய சைனியத்துடன் எப்படி சண்டையிட முடியஜம். வந்து உள்ளவன் ராக்ஷசனாக இன்று காட்சி தருகிறான். தத்தருடைய அனுக்கிரகம் இருப்பதால் அவனை லேசில் வெல்ல இயலாது. இடிந்து போய் அமர்ந்தார். பேச முடிவில்லை. கண்களில் நீர் கடல் போலக் கொட்டியது . பேச்சு மூச்சே நின்று விட்டது போல அமர்ந்த இடத்திலேயே எழுந்திருக்க முடியாமல் கிடந்தார். அந்த தெய்வீகப் பசுவும் தன் தந்தையை விட்டுப் போகின்றோமே எனக் கதறியவாறு அந்த சைனியர்கள் இழுத்துச் செல்ல

கண்ணீர் விட்டபடி நடை பிணமாக நடந்து செல்லலாயிற்று.

இதெல்லாம் நடந்த பொழுது முனிவரின் மகன் பரசுராமன் அங்கு இல்லை. காட்டிற்கு சென்று இருந்தவன் திரும்பி வந்தார். தன் தந்தை பேச முடியாமல் அமர்ந்து இருந்ததைக் கண்டார். என்ன ஆயிற்று, என்ன ஆயிற்று எனப் பல முறை கேட்டும் பதில் கூற முழுயாமல் பிரமை பிடித்தபடி அமர்ந்து இருந்தவரைக் கேட்டுப் பிரயோசனம் இல்லை என்பதால் இடிந்து போய் அமர்ந்து இருந்த மற்றவர்களையும் உலுக்கி, உலுக்கிக் கேட்டதில் நடந்த விவரத்தைக் கூறினார்கள் அவர்கள். இரத்தம் கொதித்தது பரசுராமனுக்கு. ஒரு ஷத்ரியன் தன் தந்தையை அவமானப்படுத்தி விட்டுச் சென்று விட்டானா? அவன் திமிரை அடக்காமல் இருப்பது தவறு என நினைத்தவர் தன் கோடாலியை எடுத்துத் தோள் மேல் வைத்துக் கொண்டார், பிற அம்பு, ஆயதங்களையும் எடுத்துக் கொண்டு காத்தவீர்யனைத் தேடிப் போகத் துவங்கினார். துாரத்தில் சென்று கொண்டிருந்தவர்களைப் பார்த்துக் கத்தினார். 'ஏ, அயோக்கியனே, நில்...... எதற்காக என் தந்தை ஜமதக்கினியிடம் இருந்து பசுவைப் பிடுங்கிச் சென்றாய்?. இப்படி பயம் இல்லாமல் என்னை அழைக்கும் அவன் யார், எங்கிருந்தோ வந்து என்னையே மிரட்டும் அளவு துணிவு கொண்டவன் என் நாட்டிலும் இருக்கின்றானா என கார்த்தவீர்யன் நினைத்துக் கொண்டிருந்தபோதே மீண்டும் இடி முழக்கம் போல 'பசுவை விடுகின்றாயா இல்லையா' என கர்ஜித்தார் பரசுராமர்.

'ஷத்திரியனான நான் இதற்கெல்லாம் பயந்து பணிந்து விட்டால் இராஜ்யத்தை எப்படி ஆளுவது , வந்து உள்ளவன் தனியாகத்தான் வந்து உள்ளான். அவனுடன் சைனியமும் இல்லை. தனியாக வந்தவனை சேனை மூலம் அடக்குவது கோழைத்தனம் என நினைத்தவன் வந்திருப்பவனின் பலம் தெரியாமல் பசுவை விட முடியாது என்று கூறிவிட்டு உனக்கு உயிர் மீது

ஆசை இருந்தால் ஓடிப் போ என திமிருடன் கூறினான். போர் வீரர்களோ ஓகோ....... ஓகோ எனச் சிரித்தவாறும் எள்ளி நகைத்தபடியும் குதித்தாட நெருப்புப் போல ஆனார் பரசுராமர். ‘அற்பப் பதரே என்னையா எள்ளி நகையாடுகின்றாய்‘.... வா, வந்து மோதிப் பார்’ என யுத்த கோஷம் போட்டார் பரசுராமர். யத்தம் துவங்கியது. நொடிப் பொழுதில் பாதி சேனை அழிந்தது. திடுக்கிட்டான் கார்த்தவீர்யன். என்ன நடக்கின்றது , இத்தனை நாட்களும் எனக்கு நிகர் எவனும் இல்லை என நினைத்து இருந்தேன். இவன் யார் , எங்கிருந்து வந்து என்னிடம் இத்தனை பராக்கிரமாக யுத்தம் செய்கிறான் , என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் எனக்கு தத்தர் துணை இருக்கையில் கவலை எதற்கு , என எண்ணியவாறு உக்கிரமாகப் போரிடத் துவங்கினான். அம்பு மழை பொழிந்தபடி இருவரும் போரிட்டனர். பரசுராமன் அவன் கைகளை வெட்ட வெட்ட புதிது புதிதாக கைகள் முளைத்துக் கொண்டே இருந்தன.

அந்த நேரத்தில் காத்தவீர்யன் தான் செய்த பிழையை நினைக்கலானான். தவறுதான் ஒரு அந்தணனின் பசுவை அநியாயமாக பிடுங்கிக் கொண்டு வந்து தவறு செய்து விட்டேன். ஒரு எளியவனின் சொத்தை பறிப்பதை தத்தர் கூட அனுமதிக்க மாட்டார். மேலும் எனக்கு நிகரானவன் பிறக்கவில்லை என்றுதான் நினைத்தேன். இறுமாப்புடன் இருந்திருக்கின்றேன். தத்தர் வரம் கொடுத்தபோது அவர் கூறியது நினைவுக்கு வந்தது. “உன்னை விட வலியவன் மட்டுமே உன்னைக் கொல்ல முடியும். அப்படி என்றால் எவனோ ஒரு பலசாலி பிறக்க இருந்தது அவருக்குத் தெரியும், இல்லை நான் செய்த பாவத்திற்கு தண்டனை அளிக்க அவரேதான் யாரையோ அனுப்பி உள்ளார்.” இப்படி நினைத்துக் கொண்டு இருக்கையில் அடுத்து வஷிஷ்டர் கொடுத்த சாபம் மனதில் தோன்றியது. “‘உன்னை ஒரு பிராமணன் அழிப்பான்”

தவறு செய்தாகி விட்டது. இனி யோசனை செய்து என்ன பயன். வந்துள்ளவன் பராக்கிரமசாலிதான். இல்லை எனில் என் முன் இத்தனை நேரம் தாக்கு பிடிக்க முடியுமா? ஆயுதங்கள் தீர்ந்து போன நிலையில் மல் யுத்தம் செய்தபடி இருவரும் கடும் யுத்தம் புரிந்தனர். யுத்த வித்தைகளைக் கண்ட இருவரும் எதிரியின் யுத்தக் கலையைக் கண்டு மனதுக்குள் வியந்தனர். தனக்கு எதிராகப் போர் செய்பவனுக்கு எந்த தெய்வத்தின் அருள் இருந்தது என்று புரியவில்லை. முடிவாக பரசுராமர் பரமேஸ்வரனைத் துதித்துக் கொண்டே பிரும்மாஸ்திரத்தை ஏவினார். வெட்டப்பட்ட கைகள் முளைக்கவில்லை. வந்தவர் விஷ்ணுவின் அம்சம். விஷ்ணுவோ தத்தரின் ஒரு பகுதி. பரசுராமரோ சிவனை நினைத்தபடி பிரும்தாஸ்திரத்தை ஏவினார். தத்தரின் மற்றோரு பகுதி சிவனல்லவா , ஆக பரசுராமரும் வேண்டுகோளும் மறைமுகமாக தத்தரைத்தான் போய்ச் சேர்ந்தது. அதே நேரத்தில் காத்தவீர்யனை அழிக்க வேண்டியது தத்தரின் கடமை. இல்லை எனில் பூர்வ ஜென்மப் பாவத்தைப் போக்குவது எப்படி? வஷிஷ்டரின் சாபத்துக்கும் ஒரு நல்ல முடிவு வேண்டும், ஏன் எனில் அவர் மாபெரும் முனிவர். ஆகவே அனைத்தும் ஒன்று சேர்ந்து கொள்ள கார்தவீர்யனின் ஆயுள் முடிவிற்கு வந்தது. அவன் செய்த நற்குணங்களினால் தத்தாத்திரேயரின் அருள் பெற்ற, அவருடைய முக்கியமான சிஷ்யன் என்பதால் சொர்கத்தை அடைந்தான். யுத்தம் முடிந்ததும் பசு ஓடி வந்து பரசுராமர் பக்கத்தில் நின்று கண்ணீர் விட அதைத் தேற்றியவாறே தன் தந்தையிடம் அழைத்துச் சென்றார் பரசுராமர்.

## *தத்தாத்திரேயரும் பரசுராமரும்*

பரசுராமர் பிறப்பு பற்றி அறியும் முன் அவருடைய தந்தை எப்படி அவதரித்தார் எனத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அம்வசு வம்சத்தினரான குசும்பா என்ற நாட்டைச் சேர்ந்த புருரவன் என்ற மன்னனின் பிள்ளை காதி என்பவர். குசும்பாவிற்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும்

உண்டு. அவர்களில் சிலர் மட்டுமே ரிஷி, முனிவர்களாக இருந்தனர். காதி ஒரு முனிவர் என்பதால் காட்டில் வசித்து வந்தார். அவருக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் சத்தியாவதி. நல்ல அர்கும், நற்பண்புகளும் நிறைந்தவள். அந்தக் காட்டில் பிருகு முனிவரும் இருந்து வந்தார். அவருடைய மகன் ரீக்கா என்பவர் சத்யவதியின் மீது ஆசைக் கொண்டு அவளை மணக்க விரும்பினார். பெண் வீட்டினர்தான் பிள்ளை தருபவர் வீட்டிற்கு வரதட்சணைத் தருவதுண்டு. ஆனால் அதற்கு மாறாக ரீக்காவோ ஒரு பக்கம் காது கறுப்பாக இருந்த ஆயிரம் குதிரைகளை காதிக்குக் கொடுத்து அவருடைய மகளான சத்யாவதியை மணந்து கொண்டார். காதியின் மனைவிக்கு ஒரு விபரீத ஆசைத் தோன்றியது. தன் பெண் சத்யாவதி கருதரித்து குழந்தைப் பெற்று எடுக்கும் பொழுது தானும் ஒரு குழந்தையை பெற்றெடுக்க வேண்டும். தன்னுடைய ஆசையை சத்தியாவதியிடமும் கூறி இருந்தாள்.

சத்தியவதிக்கு திருமணமாகி சிலகாலம் சென்றது. பிருகு முனிவர் எதோ வேலையாக அங்கு வந்திருந்தார். வந்தவரிடம் சத்யவதி தனக்கும் தன்னுடைய தாயாருக்கும் ஒவ்ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள ஆசையாக உள்ளது என்றும் அதற்கு அவர் அருள் புரிய வேண்டும் எனவும் அவரிடம் வேண்டினாள். அவரும் மிகவும் மனம் மகிழ்ந்து இரண்டு பாத்திரங்களில் சில உணவுப் பொருட்களை வைத்துக் அவளிடம் கொடுத்த பின் அவற்றில் ஒன்றை சுட்டிக் காட்டிக் கூறினார் 'சத்யாவதி இது உனக்கு, மற்றொன்று உன் தாயாருக்கு என மந்திரம் ஓதி இந்த பிரசாதத்தைப் படைத்துள்ளேன். நாளை காலை எழுந்து குளித்த பின் நீ சத்யாவதியை நீயும் உன் தாயாரும் இதை சாப்பிட்டால் உன் வேண்டுகோள் பலிக்கும். ஆனால் தாயே, ஒன்றை மிகக் கவனமாகக் கேட்டுக் கொள். பாத்திரத்தில் உனக்கு உள்ளதை உன் தாயாரோ, உன் தாயாருக்கு கொடுத்ததை நீயோ சாப்பிட்டு விடாதீர்கள்' என அறிவுறைக்

கூறிவிட்டுச் சென்றார்.

மறு நாள் காலையில் தன் பெண் எழுந்திருக்கும் முன்பே அவளுடையத் தாயார் எழுந்து குளித்து விட்டு அந்த பிரசாதத்தைப் புசிக்கச் சென்றாள். அந்த பிரசாதத்தைப் நோக்கிய அவளுக்கு மனதில் ஒரு ஆசை எழுந்தது. ஒரு வேளை தன் மருமகள் சத்யாவதிக்கு நல்ல லட்சணமான குர்ந்தைப் பிறக்க வேண்டும் என்று எண்ணி எதாவது விஷேச பூஜை செய்த பிரசாதத்தை அவளுக்கு வைத்து இருப்பாரோ என எண்ணியவள், தன்னுடைய மகளுக்கு வைத்திருந்த பிரசாதத்தை தான் உண்டு விட்டு தனக்கு வைத்திருந்ததை தன் மகளுக்கு மாற்றி வைத்து விட்டாள். எழுந்து குளித்து விட்டு வந்த தன் மகளிடம் தான் தவறுதலாக அவளுக்கு வைத்திருந்தப் பாத்திரத்தில் இருந்ததை சாப்பிட்டு விட்டதாகப் பொய் கூறி விட்டாள். மகள் பாவம் என்ன செய்ய முடியும், நடக்கக் கூடாதது நடந்து விட்டது. வேறு வழி தெரியாமல் பிரசாதத்தை வேண்டாம் எனக் கூறி முனிவரை அவமானப் படுத்தக் கூடாது என்று எண்ணிய மகளும் மாற்றி வைத்திருந்த பிரசாதத்தை உண்டு விட்டாள்.

இருவரையும் நலம் விசாரிக்க வந்த பிருகு முனிவரிடம் நடந்து விட்டத் தவறை சத்தியாவதி கூறினாள். நடந்ததை தன் ஞானக் கண் மூலம் தெரிந்து கொண்டார். நடந்தது நடந்ததுதான் என்பதால் சத்யவதிக்கு பிறக்க இருந்த குழந்தைக்கு இருக்க வேண்டிய குணங்களை அவளுக்குப் பிறக்க இருக்கும் பேரன் எடுத்துக் கொள்ளட்டும் என ஆசி கூறி விட்டுச் சென்று விட்டார். காலா காலத்தில் இருவருக்கும் பிள்ளைகள் பிறந்தனர். சத்யாவதிக்கு இப்படியாக ஜமதக்னி பிறக்க, அவளுடைய தாயாருக்கோ விஸ்வாமித்திரர் பிறந்தார். அதனால்தான் சத்யாவதியின் அடக்க சுபாவத்தைப் போலவே சாத்வீகக் குணம் கொண்டு பிறந்து இருந்த ஜமதக்கினி முனிவருக்கு தன்னிடம் இருந்து பசுவைப் பறித்துச் சென்ற

கார்த்தவீர்யனுடன் சண்டைப் போடத் தெரியவில்லை.

ஜமதக்னி முனிவருக்கு திருமணம் ஆயிற்று. அவர் மனைவி ரேணுகா தேவி கணவருக்குப் பணிவிடை செய்வதில் மாசற்று இருந்தாள். அவர்களுக்கு பரசுராமரையும் சேர்த்து சில பிள்ளைகள் பிறந்தன. இருவரும் மன மகிழ்வோடு வாழ்ந்து வந்தனர். ஆனாலும் விதி சில சம்பவங்களைச் நடக்கச் செய்ய வேண்டும் என நினைப்பதினால் தன் பங்கிற்கு அது விளையாடிற்று. ஒரு நாள் ரேணுகா குளிப்பதற்கு நதிக் கரைக்குச் சென்றாள். எதேச்சையாக சற்று தொலைவில் மற்றோரு நாட்டின் மன்னன் தன் மனைவியுடன் அதே நதியில் குளிப்பதைக் கண்டாள். அவர்களோ ஜலக்கிரீடை செய்து கொண்டு ஒருவரை ஒருவர் கட்டி அணைத்தபடி விரசமான லீலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தனர். அதைக் கண்ட ரேணுகாவின் மனதில் ஒரு நிமிடம் காம உணர்வு எழுந்தது. எத்தனை இன்பமாக உல்லாசம் அனுபவித்தபடி இருக்கின்றனர் என நினைத்தவள், அடுத்த கணமே தன் கணவன் நினைவு வர அவசரம் அவசரமாகக் குளித்து விட்டுக் வீட்டிற்குக் கிளம்பினாள். வீடு வந்து சேர்ந்த மனைவியின் முகத்தில் தோன்றி மறைந்திருந்த காமம் அவர் கண்களில் பட்டு விட்டது. நடந்ததை தன் மனக் கண்களால் பார்த்தார். என்ன இருந்தாலும் தபஸ்வி அல்லவா , அவள் புனிதம் கெட்டு விட்டதை அறிந்தவர் தன் பிள்ளைகளை அழைத்தார். ‘தர்ம நெறி கெட்டு விட்ட இவள் தலையை வெட்டி வீசி எறியுங்கள்’ என்று ஆணையிட்டார்.

தந்தையே கூறினாலும் எந்தப் பிள்ளைக்குத் தன் தாயாரின் தலையை வெட்டத் தோன்றும், அந்தக் காரியத்தைச் செய்ய எவரும் முன் வரவில்லை. வந்தது கோபம் ஜமதக்கினிக்கு ‘என் சொல்லை மீறிய நீங்கள் அனைவரும் காட்டு விலங்குகள் போல அலைவீர்கள்’ என சாபமிட்டார். ரேணுகா தலை குனிந்தபடி நின்று கொண்டு இருந்தாள். கடைசியாக வெளியே போய் இருந்த

பிள்ளை பரசுராமர் வந்தார். நிலைமை சரியாக இல்லை. தந்தை கண்களில் கோபம் கொந்தளித்தபடி நிற்கின்றார். சகோதரர்களும் தாயும் தலை குனிந்தபடி உள்ளனர். என்ன நடந்து இருக்கும், யோசனை செய்யத் துவங்கியவரிடம் அதே உத்தரவைப் பிறப்பித்தார் அவர் தந்தை. 'தர்ம நெறி கெட்டு விட்ட இவள் தலையை வெட்டி எறி' அத்தனைதான், அதைக் கூறி விட்டுத் திரும்பிய ஜமதக்னியின் முன் வந்து விழுந்தது ரேணுகாவின் தலை. பெரும் ஆச்சரியம் அடைந்தார் ஜமதக்கினி 'உண்மையான பிள்ளை அவனே என மகிர்ழ்சி அடைந்துக் கேட்டார் 'மகனே நீதான் என் உண்மையான மகன். கேள்......உனக்கு என்ன வரம் வேண்டும்.... கேள்...... நான் செய்த புண்ணியங்களால் அது உடனே நிறைவேறும்' என்றார். அதையே எதிர்பார்த்து நின்றவன் கூறினார் 'தந்தையே அறியாமல் என் தாய் செய்த பிழையை மன்னித்து விட்டு அவள் உயிர் பெற்று எழ உதவுங்கள். அது போலவே தாய் மீது பாசம் கொண்டு அவளைக் கொல்ல முடியாமல் தவித்து நின்று உங்களிடம் சாபம் பெற்ற என் சகோதரர்களுக்கும் சாப விமோசனம் வேண்டும்'

முனிவர் கண்களில் நீர் நிறைந்தது. எத்தனை தத்துவார்த்தமான பிள்ளை இவன், என் சொல்லை புறக்கணிக்கவில்லை. தாய் மீதும் தன் குடும்பத்தின் மீதும் எத்தனை பாசம் வைத்து உள்ளான் இவன் என மனம் மகிழ்ந்து அவர் கேட்ட வரங்களைத் 'ததாஸ்து' என்று கூறிக் கொடுக்க, இறந்து கிடந்த ரேணுகா உயிர் பெற்று எழுந்தாள். கணவர் கால்களில் விழுந்து வணங்கினாள். மற்ற பிள்ளைகளும் அவ்விதமே செய்தனர். அதன் பிறகு அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக பல ஆயிரம் வருடங்கள் வாழ்ந்து வரலாயினர். ரேணுகாவும் தன் கணவனைத் தவிற வேறு எவர் தென்பட்டலும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. இப்படி இனிமையான வாழ்கை நடந்து கொண்டிருந்தது. அதற்குப் பின்னர்தான் காத்தவீர்யன் வந்து பசுவைக்

கவர்ந்து சென்றதும், அதை மீட்க அவனை பரசுராமர் துரத்திச் சென்று அவனை அழித்த சூறாவளிக் காட்சிகளும் நடைபெற்று முடிந்திருந்தன. அதனால் கோபத்தின் உச்சியில் இருந்த காத்தவீர்யனுடைய ஆட்களோ தம் மன்னனைக் கொன்று விட்ட பரசுராமரின் தந்தையைக் கொன்று அதன் மூலம் பரசுராமரை அவமதிக்க எண்ணி தருணம் பார்த்து காத்திருந்தனர். ஏன் எனில் பரசுராமரை அவர்களால் நேரடியாகப் போரிட்டு ஜெயிக்க இயலாது. அவர்களை அவர் அழித்து விடுவார். அதற்கு ஒரே வழி பேடித்தனமாக பரசுராமர் இல்லாத பொழுது அவர் தந்தையைக் கொல்ல வேண்டும் என நினைத்தனர்.

அவர்கள் எண்ணம் நிறைவேறும் வகையில் ஒரு நாள் பரசுராமர் வீட்டில் இல்லை. ஒரு பெரிய சேனையுடன் காத்தவீர்யனுடைய ஆட்கள் ஜமதக்கினியின் ஆசிரமத்தில் நுழைந்தனர். அனைத்துப் பொருட்களையும் நாசம் செய்தனர். அவரை இழுத்துப் போட்டு அடித்துப் போட்டு சித்திரவதை செய்து கொன்றனர். கூட இருந்த மற்றவர்களையும் கொன்றனர். ரேணுகா அலறினாள். அவரை விட்டு விடும்படிக் கெஞ்சினாள். மசியவில்லை முரடர்கள். கெஞ்சிய அவளையும் அவமானப்படுத்தினர். அனைத்து அக்கிரமங்களையும் செய்து விட்டு பரசுராமர் வரும் முன் ஓடி விட்டனர். ரேணுகா ‘பரசுராமா‘..... ‘பரசுராமா‘ என இருபத்தி ஏழு முறை மார்பில் அடித்துக் கொண்டபடி கத்தினாள் , தொண்டைக் கிழியும் வகையில் அலறினாள். அந்தக் கதறல் ஒலி காட்டில் எங்கோ ஒரு மூலையில் இருந்த பரசுராமர் காதில் ஒலித்ததும் என்ன ஆயிற்றோ என அலறியபடி ஓடி வந்தவர் கண்களில் பட்டது அந்த அலங்கோலமானக் காட்சிகள். ‘தந்தையே என்னால்தானே உங்களுக்கு இந்த கதி வந்தது‘ எனப் புலம்பியவர் இடிந்து போய் சிதைந்து கிடந்த வீட்டில் இருந்து தன் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வெறி பிடித்தவர் போல் அந்த ஷத்ரியக் கூட்டத்தைத் தேடிப் போனார்.

வெற்றி மிதப்பில் ஆடிக் கொண்டு இருந்த அந்த கும்பலில் இருந்த அனைவரையும் துண்டு துண்டாக வெட்டி எறிந்தார். அவருடைய தாக்குதலைப் தாங்க முடியாமல் போன ஷத்ரியர்கள் நகருக்குள் ஓழு ஒளியலாயினர். அப்படி ஓடிப் போய் ஒளிந்து கொண்ட அனைத்து ஷத்ரியர்களையும் தேடித் தேடி அலைந்து வெளியில் இழுத்துப் போட்டு அவர்களையும் வெட்டிக் கொன்றார். இனி அங்கு ஒரு ஷத்ரியர் கூட இல்லை எனத் தெரிந்தவுடன் வெறி தீர்ந்த வேங்கைப் போல வீடு திரும்பினார்.

இரத்த வெள்ளத்தில் தந்தை இறந்து கிடக்க அதைக் க்டடிப் பிடித்தபடி விக்கி விக்கி அழுது கொண்டிருந்த தாயைக் கண்ட பரசுராமனும் குழுந்தைப் போல உரத்த குரலில் அழத் துவங்கினார். “தந்தையே, இத்தனை பராக்கிரமசாலி நான் இருந்தும் உன்னைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டேனே....எனக்கு வாழ்க்கையில் இனி என்ன இருக்கிறது” என அழுது புலம்பிக் கொண்டு இருந்த மகனை, ரேணுகா வந்து சமாதானம் செய்தாள். “ஆனது ஆகி விட்டது மகனே, உன் தந்தைக்கு இறுதிக் காரியங்களையாவது உடனே செய்........ இந்த பூமி இப்போது களங்கப்பட்டு விட்டது . இங்கு இறுதிக் காரியங்கள் செய்யக் கூடாது. எழுந்திரு. எழுந்து போய் ஒரு காவடி கொண்டு வா.. ஒரு புறம் உன் தந்தையின் உடலை வை. மறு புறம் என்னை வைத்துக் கொண்டு அதை எடுத்துச் செல். எந்த இடத்தில் அசரீரி நில் என்று கூறுகின்றதோ, அங்கே உன் தந்தைக்கு செய்ய வேண்டிய காரியங்களை செய்து விடு. நானும் அவர் சிதையில் விழுந்து உயிர் துறக்கிறேன். அதன் பின் இருவருக்கும் சேர்த்தே ஈமச் சடங்குகளை அங்கே நடத்து”. கூடி இருந்த மற்ற பெரியவர்களும் அதுவே சரி என்று அவள் கூறியதை ஆமோதிக்க தாயின் சொற்படி ஒரு காவடியைக் கொண்டு வந்த பரசுராமன் அதில் ஒரு புறம் தந்தையையும், மறு புறம் தாயையும் வைத்துக் கொண்டு மேற்கு திசை

நோக்கி நடக்கலானார்.

காடுகள், செடிகள், கொடிகள் என பல்வேறு பகுதிகளையும் கடந்து சென்று கொண்டே இருந்தார். வெகு தொலைவு நடந்து சென்றும் அவரை நிற்குமாறு கூறும் சப்தம் எங்கிருந்தும் வரவில்லை. அதனால் நிற்காது நடந்து கொண்டு இருந்தார். நடந்து கொண்டிருந்தவர், தத்தாத்திரேயர் வசித்து வந்த மலைப் பகுதியின் அருகில் சென்று கொண்டிருந்த பொழுது நில், மேலும் போகாதே என்ற குரல் ஒலித்தது. ஆனால் எவரும் தென்படவில்லை. யாராக இருக்கும் என யோசித்தவாறு தன்னுடையத் தாயாரைக் கேட்கலாம் என்று திரும்பினார். தவத்தில் அமர்ந்து இருந்தவள் போன்று காணப்பட்ட தாயின் வாயில் இருந்து மெல்லிய சப்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது. "என் அன்புப் புதல்வனே உனக்கு அடிக்கடி உன் தந்தை போதிப்பாரே தத்தரைப் போய் பார், தத்தரிடம் செல் என, அவருடைய ஆசிரமம்தான் அங்கே உள்ளது. போ, அங்கே போய் அவரிடம் சென்று எங்களுக்கு எப்படி இறுதி காரியங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டு விட்டு அவர் எப்படி அதை செய்யுமாறு கூறுகின்றாரோ அது போலச் செய்...... அவரைக் காண முடியவில்லை என்றால் அவருடைய ஆசிரமத்தில் உள்ள நெல்லி மரத்தின் அடியில் சென்று அமர்ந்து கொண்டு அவரைப் நினைத்தபடி தியானம் செய். உடனே அவர் எங்கு இருந்தாலும் உன்னைத் தேடி வருவார்" . தாயின் சொல்லைக் கேட்ட பரசுராமர் ஆசிரமத்தில் நுழைந்து தத்தாத்திரேயரைத் தேடினார். ஆனால் அவர் காணவில்லை. தாய் கூறியதற்கு மாறாக அங்கு அலங்கோலமான நிலையில் ஒருவர் கெட்ட நடத்தை கொண்ட பெண் போல் இருந்தவளிடம் சல்லாபம் செய்து கொண்டு இருந்தார். உள்ளே கருவாட்டு வாசனை, கூடவே சாராய நெடியும் மூக்கைத் துளைத்தது. ஏற்கனவே தன் தந்தை தத்தரின் லீலைகளைப் பற்றிக் கூறி இருந்ததினால் எதிரே உள்ளவர் தத்தரே எனவும் தன்னை சோதிக்கவே அப்படி நாடகம் ஆடுகின்றார் என்பதையும் பரசுராமர் புரிந்து கொண்டார். அவரிடம் சென்று

அவரை சேவித்த பின் தன் தந்தைக்கு இறுதிக் கடன் செலுத்த தான் வந்திருப்பதாகவும் அதற்கு அவர்தான் தனக்கு ஒரு வழி காட்ட வேண்டும் என்றும் வேண்டினார். ‘இறுதிக் கடன் பற்றி எனக்கென்னடா தெரியும்.. வேண்டுமானால் நீயும் இங்கு அமர்ந்து கொண்டு இந்த மொந்தையைப் போட்டுக் கொள். அதை விடுத்து இறுதிக் கடன் செய்ய என்னுடைய உதவி கேட்டு இங்கு வந்து என்னை ஏன் கேலி செய்கிறாய?’ என்றார் தத்தர். பரசுராமருக்கு வைராக்கியம் அதிகம். அசைந்து கொடுக்கவில்லை. “ஸ்வாமி தயவு செய்து நாடகத்தைத் தொடராதீர்கள். நீங்கள் கூறும்படித்தான் என் தந்தைக்கும் தனக்கும் இறுதிக் கடன் செய்ய வேண்டும் என என் தாய் விரும்பியுள்ளதால் என்னையும் அவள்தான் இங்கு அழைத்து வந்திருக்கிறாள்”

என்ன சொன்னாய், நான் சொல்லியபடித்தான் இறுதிக் கடன் செய்ய வேண்டும் என கூறியவள் உன் தாயாரா , அவளும் வந்திருக்கிறாளா, யாரடா அவள் , என்று ஆச்சர்யத்துடன் கேட்ட அந்த அகோர மனிதன் முன்பு பெரிய ஒளி வெள்ளம் தோன்றியது. அனைத்து நாடகக் காட்சிகளும் மறைந்து விட்டிருந்தன. பரசுராமர் எதிரில் ஜோதிஸவடுபமான வடிவில் தத்தர் நின்று கொண்டிருந்தார். ‘வா, உன் தாயார் யார் என நான் பார்க்க வேண்டும்’ என்று கூறிவிட்டு அவருடன் சென்றவர் ரேணுகாவைப் பார்த்தார். அவ்வளவுதான், என் தாயே என பய பக்தியுடன் அவளை வணங்கிய பின் அவளைக் குறித்து தோத்திரம் செய்து ஆராதிக்கலானார். தேவி, ஏக வீரா, அனைத்துலகத்துக்கும் தாயாளானவளே, உன்னை நான் வணங்குகிறேன். எனப் பலவாறு அவளைத் துதித்தபடி அவள் முன்பாக அவர் நின்று கொண்டு இருந்த பொழுதும் சலனமற்று கம்பீரமாக அமர்ந்து இருந்தாள் ரேணுகா.

நடக்கும் அனைத்தையும் ஆச்சரியத்துடன் நின்றபடி பார்த்துக் கொண்டு

நின்ற பரசுராமரை அழைதத தத்தாத்திரேயர் பரசுராமரை அனைத்து புண்ணிய நதிகளிலும் குளித்து விட்டு வரும்படிக் கூறிவிட்டு இறுதிக் கடன்களை செய்ய வேண்டிய முறைகளைச் சொல்லிக் கொடுத்தார். பரசுராமரும் தத்தர் கூறியபடி இறுதி ஸம்ஸ்காரங்களை செய்து முடித்தார். ரேணுகாவும் தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டு ஜமதக்னியின் சிதைக்கு மூட்டிய தீயில் தானும் விழுந்து அவருடன் பயணித்து விட்டாள். அனைத்து காரியங்களும் நடந்து முடித்த பின் பரசுராமரும் அவருடன் கூட வந்தவர்களும் தத்தாத்திரேயருக்கு தங்களுடைய வணக்கங்களைத் தெரிவித்து விட்ட பின் அவருடைய ஆசிகளைப் பெற்றுக் கொண்டு திரும்பினர். தன்னுடைய தாயார் ஜமதக்கினியை காத்தவீர்யனின் ஆட்கள் கொன்ற பொழுது தன்னை கூப்பிட ஓலக் குரல் எழுப்பி தன் மார்பில் இருபத்தி ஒன்று முறை அடித்துக் கொண்ட தன் தாயாரின் நினைவாக இருபத்தி ஒரு முறை பூமியின் பல பகுதிகளுக்கும் சென்று ஷத்திரியர்களை அழித்தார். எத்தனை மனிதர்களைத்தான் கொன்று தீர்ப்பது, மனம் வெறுப்பு அடைய தன் தாயாரும் தந்தையும் கூறி இருந்தபடி மீண்டும் தத்தரிடமே சென்று அவரிடம் சரணடையலாம் என எண்ணியவாறு தத்தரிடம் செல்லத் துவங்கினார். அவர் போகும் வழியில் ரேணுகாவும் தந்தை ஜமதக்கினியும் அவர் முன் தோன்றி அவருக்குக் காட்சி தந்த பின் அவர் அத்தனை கொலைகள் செய்ததினால் ஏற்பட்டு உள்ள பாவத்தைத் தொலைக்க ஒரு யாகம் செய்யும்படிக் கூறி விட்டு மறைந்தனர்.

என்ன யாகம் செய்வது, அதை எப்படிச் செய்வது எனத் தெரியாமல் மனம் குழம்பிய வண்ணம் தத்தாத்திரேயரிடமே மீண்டும் போய்ச் சேர்ந்தார். வழியில் தனக்குக் காட்சி தந்த பெற்றோர்கள் கூறிய அறிவுறையைக் தத்தாத்திரேயரிடம் தெரிவித்த பின் திருமணம் ஆகாத தன்னால் எப்படி யாகம் செய்ய முடியும் எனத் தான் தவிப்பதாகவும் அதுவே மனதில் வேதனை தருவதாகவும் கூறினார். தத்தாத்திரேயர் ஆறுதல் சொன்னார்

‘கவலைப் படாதே ராமா, எந்த ஒரு செயலுக்கும் ஒரு மாற்று வழி உண்டு. உன்னை அவர்கள் செய்யச் சொன்ன யாகத்திற்கு ரேணுகா யாகம் எனப் பெயர் அளிக்கின்றேன். அதை செய்து முடிக்கும் வரை நானே உனக்கு வழி காட்டிக் கொண்டிருந்து அதில் பங்கு பெறுவேன்’ என்று கூறினார். யாகத்திற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்த பின், பரசுராமரின் பிரும்மச்சரியத்தை முடிவிற்குக் கொண்டு வந்து யாகம் செய்யும் வகையில் ஒரு தங்கப் பதுமையிலான பெண் உருவைப் படைத்து அதை அவருடைய பக்கத்தில் வைத்துக் கொண்டு மனைவி ஸ்தானமாக அதை மனதில் கருதிக் கொண்டு யாகத்தைத் துவக்கும்படிக் கூறினார்.

தத்தர் கூறியது போல் யாகம் நடந்தது. ஒரு பக்கம் தத்தரே ஒரு ருத்வியாக அமர்ந்து கொள்ள மறு புறம் காஷ்யப முனிவர் அமர்ந்தபடி காரியங்கள் நடந்தேற அதை அங்கு கூடி இருந்த அனைத்து ரிஷி முனிவர்களும் பார்த்துக் கொண்டு இருந்தனர். அப்பொழுது அவர்கள் மனதில் எழுந்து நின்ற கேள்வி ‘தத்தர் இந்த யாகத்திற்கு ஏன் ரேணுகா யாகம் என்று பெயரிட்டார் , அது மட்டும் அல்ல இப்பொழுதெல்லாம் ஸ்வாமி ‘...ரேணுகா‘ , ‘ரேணுகா‘ என்று அழுக்கடி உச்சரித்துக் கொண்டு இருக்கின்றார். அந்த ரேணுகாவிற்கும் இவருக்கும் என்ன தொடர்ப்பு இருக்கும் , அவள் உண்மையிலேயே பரசுராமனின் தாயார்தானா இல்லை எனில் வேறு ஒரு பெண்மணியா?. மனதில் எழுந்த கேள்விகளுக்கு பதில் கிடைக்கவும் அதைப் பற்றி தத்தாத்திரேயரிடம் சென்று கேட்கவும் எவருக்கும் துணிவும் இல்லை. யாகத்தின் இடையிடையே அவர் இதை செய் அதை செய் என பரசுராமனை வழி நடத்திக் கொண்டு இருக்கிறார். திடிரென பரசுராமர் மீது அவருக்கு என்ன அக்கரை? கேள்விகள் அவர்கள் மனதைக் குடைந்தவண்ணம் இருந்தன. அது போலவே பரசுராமரும் இடையிடையே யோசித்தவண்ணம் இருந்தார். யாகம் நன்கு நடந்து முடிந்தது. ருக்விக்களாக வந்த முனிவர்களுக்கு எந்த மனக் குறையும் இன்றி நிறைய தானங்கள்

கிடைத்தன. அனைவரும் ஸ்வாமிகளை சேவித்துக் கொண்டு இருக்கையில் அத்தனை நேரமாக தன் மனதில் அடக்கி வைத்திருந்த சந்தேகத்தை பரசுராமர் கேட்டு விட்டார்.

“ஸ்வாமி என் பெற்றோர்கள் சொர்கத்திற்கு செல்லும் முன் என்னை வழியிலே சந்தித்தனர். அவர்கள் என்னிடம், தத்தாத்திரேயர் கூறும்படி இறுதி ஸமஸ்காரங்களை செய்து முடித்த பின் தத்தரிடமே தீட்சைப் பெற்றுக் கொண்டு தத்தரிடமே சிஷ்யனாகும்படியும் கூறினர். உங்களிடம் வந்த நான் என் தாயாரின் பெயரைக் கூறிய உடனேயே என்னுடன் வந்து அவளை வணங்கினீர்கள். அப்பொழுதே நினைத்தேன் இத்தனைப் பெரிய யோக குருவும் மூம்மூர்த்தியின் அவதாரமுமான நீங்கள் எப்படி என் தாயாரை வணங்கினீர்கள், என் தாயார் ரேணுகாவை முன்பே உங்களுக்குத் தெரியுமா, அதற்கும் மீறி இந்த யாகத்திற்கு ரேணுகா யாகம் எனப் பெயர் வைத்தீர்கள். அதன் காரணம் என்ன என்று அடியேனுக்கு விளக்கினால் மனம் தெளிவாகும்” என்று வேண்டினார். அவர் கூறியதை அமைதியாகக் கேட்டுக் கொண்டு இருந்த தத்தர் முகத்தில் எந்த விதமான சலனமும் இல்லை.

“உங்களுக்கும் என் தாயாருக்கும் என்ன பந்தம் என்று கேட்டாய் அல்லவா சொல்கிறேன் கேள். உன் தாயார் சாகாரம், என்ற தூல சரீரமும், நிராகாரம் என்ற ஜேஷ்ம சரீரமும் கொண்டவள்.அவளுக்கு இரண்டு உருவங்கள் உண்டு. அவளே உலகு அனைத்தையும் காக்கும் லோக மாதா. உன்னுடையத் தாயார் இந்தப் பிறவியில் ஜமதக்னி முனிவரின் மனைவியாகப் பிறந்ததின் காரணம் லோகத்தின் நன்மையைக் கருதி என் மூலம் அனைவருக்கும் நல்வழிப் போதனைத் தர வேண்டும் என்பதினால்தான். ரேணுகாவாகப் பிறந்த அவள் தன் தூல உருவத்தை விட்டு விட்டு தன் இடத்திற்கு சென்று விட்டாள். கார்த்தவீர்யன் முன்

பிறவியில் விஷ்ணுவிடம் பெற்ற சாபத்திற்கு அவருடைய ஒரு அம்சமான உன் மூலம் விமோசனம் பெற வேண்டும் என்பதற்காகவே உன்னையும் ரேணுகையின் பிள்ளையாக அவதரிக்க வைத்தார். உன் அன்னை ஒரு ஏக மாதா, அவளே சந்தியா தேவி, அனைத்து உலகின் தாயாக, காயத்திரியாக நிற்பவள். காலமற்ற காலத்தில் வாழ்பவளான அவளை வணங்குவதற்கு காலமோ நேரமோ இல்லை என்றாலும் அவளை மூன்று முக்கியமான வேளைகளிலும் வணங்குபவர்கள் எண்ணற்ற ஆனந்தத்தைப் பெறுவார்கள். எல்லா காலத்திலும் நிறைந்து இருக்கும் அவளுக்கு எந்த இடத்தில் இருந்தாலும் எப்படி இருந்தாலும் எந்த நிலையில் இருந்தாலும் சந்தி என்பதின் மூலம் வந்தனம் செய்யலாம். சந்தி என்றால் காலம். ஆனால் அதற்காக அவளை அந்த மூன்று வேளைகளில் மட்டும் வணங்க வேண்டும் என்பதல்ல இதன் சாரம். அதனால்தான் என்னைப் போன்ற யோகிகளும் கூட அவளை வணங்குகின்றோம். இதோ இங்கு தெரிகின்றதே ஒரு குளம், அதில்தான் உன் தாயாரும் நீராடுவாள். அதனால்தான் அதை ரேணுகா தீர்த்தம் என்று கூறுகிறோம். இதோ உள்ளதே நெல்லி மரம், அதன் அடியில்தான் உன் தாயார் அமர்ந்து இருப்பாள். எவர் வேண்டுமானாலும்

அங்கு சென்று ஓய்வு எடுத்தாலும் அந்த மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டாலும் அவர்களின் மனதில் அமைதி கிட்டும். உனக்கு நினைவிருக்கின்றதா?, உன் தாயார் உன்னிடம் கூறியது, யாகம் முடிந்ததும் அந்த நெல்லி மரத்தடியில் சென்று ஓய்வு எடுத்துக் கொள் என்று கூறினாளே, அது இதனால்தான்” இப்படிஎல்லாம் பலவாறாக ரேணுகா பற்றி தத்தாத்திரேயர் வர்ணித்துக் கொண்டு இருக்கையிலேயே ரேணுகா தேவி அங்கிருந்த நெல்லி மரத்தின் அடியில் தோன்றினாள். அவளைக் கண்ட தத்தாத்திரேயர் ‘ஹே தேவி, ஹே ஜகன்மாதா ஹே அம்பா தேவி‘ எனப் பலவாறு அவளைப் புகழ்ந்தவாறு அங்கேயே அவளை பூஜிக்கத் துவங்கினார். அதற்குப் பிறகுதான் முனிவர்களுக்கும் பரசுராமருக்கும் புரிந்தது ரேணுகா

யார் என.

யாகம் முடிந்தது. அனைவரும் சென்று விட்டனர். பரசுராமரும் அங்கேயே சில நாட்கள் தங்கி தத்தாத்திரேயரை வணங்கிக் கொண்டும், தன்னுடைய தாயாரைத் துதித்தபடியும் நெல்லி மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டும், ஓய்வு எடுத்துக் கொண்டும் பல நாட்கள் இருந்தார். அவர் மனதில் துக்கம் இல்லை, மனதில் கோபம் இல்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல பரசுராமர் மனம் மீண்டும் மீண்டும் அமைதி இன்றி இருந்தது. என்ன செய்வது எனப் புரியாமல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தவர் கடைசியாக தசரதனின் மைந்தனான ராமனிடம் சண்டையிட்டுத் தோற்றுப் போய் மனம் ஒடிந்து காட்டிற்குத் திரும்பி வந்தபின் ஒன்றும் செய்வதறியாது அலைந்துத் திரியலானார். அங்கு நிர்வாணமாகவே திரிந்து கொண்டு, வெகு அபூர்வமாகவே மற்றவர்கள் முன் காணப்படும் சம்வார்த்தா என்ற ஒரு மாமுனிவரை சந்தித்தார். அவரிடம் சென்று 'ஐயா, என் மனதில் அமைதி இல்லை......என்ன செய்வது எனத் தெரியாமல் தடுமாறுகிறேன். எனக்கு மனதில் அமைதி கிடைக்க ஒரு வழி கூறுவீர்களா' என்று கேட்டார். அவர் கூறிய அறிவுறை பரசுராமர் கண்களைத் திறந்தது. விளக்கைக் கையில் வைத்துக் கொண்டே வெளிச்சத்தைத் தேடுகின்றாயே என அவர் தத்தாத்திரேயரின் மகிமைகளைக் கூற தவறு செய்து விட்டு எங்கெங்கோ அலைகின்றோமே என வருத்தம் அடைந்தார். சம்வார்த்தா மாமுனிவர் கொடுத்த அறிவுறைப்படியே தத்தாத்திரேயரின் பாதங்களில் சென்று விழுந்தார். 'ஸ்வாமி எத்தனை பெரிய பைத்தியக்காரன் நான் என இப்போதுதான் புரிந்தது. என் மனதில் அமைதி இல்லை, உள்ளத்தில் நிம்மதியும் இல்லை. நீங்கள்தான் அமைதியுடன் நான் வாழ்ந்து கொண்டு இருக்க எனக்கு ஒரு வழி காட்ட வேண்டும்' என சிறு குழந்தைப் போல அவர் கால்களைப் பற்றிக் கொண்டு அழலானார். 'கவலைப்படாதே குழந்தாய்'



Site contents in Tamil by Santhipriya : nrj1945@gmail.com

என ஆறுதல் கூறியவர் அவருக்குப் பல பாடங்களைச் சொல்லித் தந்து அங்கேயே ஒரு இடத்தில் குடில் அமைத்துக் கொண்டு அதில் வசித்து வந்து தினமும் தியானம் செய்யுமாறு அறிவுரைக் கூறினார். பரசுராமரும் மகேந்திர மலை அடிவாரத்தில் தங்கியபடி தவம் செய்யலானார். அந்த சமயத்தில் அவருக்கு தத்தாத்திரேயர் செய்த உபதேசமே திரிபுரா இரகசியம் என்பது. பல கதைகளை உதாரணமாகக் கொண்டு கூறப்பட்டதே திரிபுரா ரகசியம் என்பது. திரிபுரசுந்தரியான திரிபுராவை மையமாகக் கொண்டு பரசுராமருக்கு உபதேசித்தார். சக்கர வழிபாடு, யந்திர வழிபாடு, தேவியை எப்படி வழிபட வேண்டும் என்ற அனைத்தையும் தத்தர் அவருக்கு விரிவாகக் கூறினார்.

## *ஏக்நாத்தும் தத்தாத்திரேயரும்*

தத்தத்திரரேயருடைய வரலாற்றுக்களில் மராட்டிய மாநிலத்தில் அவருக்கு பெரும் பக்கர்கள் உண்டு என்பது தெரிய வந்தது. தத்தாத்திரேயர் எதற்காக, எப்படி எல்லாம் ஒருவருக்கு உதவி செய்வார் என்பது தெரிவது இல்லை. தத்தத்திரரேயருடைய பெருமைகளை விவரிக்கும் பல கதைகளில் இதுவும் ஒன்று. மராட்டிய மாநிலத்தில் ஸ்வாமி ஞானதேவா வழியைச் சார்ந்தவரும், வராகாரி குலத்தைச் சேர்ந்தவரும், 17-18 ஆம் நூற்றாண்டில் இருந்தவருமான ஏக்நாத் என்ற ஒரு முனிவர் மற்றொரு முனிவர் தத்தோபந்த் என்பவருடன் வசித்து வந்தார். இருவருமே மராட்டிய மாநிலத்தில் பிறந்த அந்தணர்கள்தான். அந்த காலங்களில் ஒவ் ஒருவரும் ஒரு குருவை ஏற்றுக் கொண்டுதான் சன்யாசப் பாதைக்கு செல்வது உண்டு. அந்த வழியைப் பின் பற்றியே ஏக்நாதரும் ஸ்வாமி ஜனார்தனா என்பவரை பத்தாவது வயதிலேயே தன் குருவாக ஏற்றுக் கொண்டு இருந்தார். ஏக்நாதர் தீவிரமான பாண்டுரங்க வித்தலாவின் பக்தர். ஸ்வாமி ஜனார்தனா இன்று மகாராஷ்டிராவில் உள்ள சத்தாரா என்ற மானிலத்தில் தௌதாபாத் என்ற இடத்தில் உள்ள தேவகிரி எனறும் தேவகட் என்றும் கூறப்படும் ஒரு மலைப் பகுதியில் இருந்த நெல்லி மரத்தின் அடியில் ஆத்ம ஞானம் பெற்றவர். அடிக்கடி தத்தத்திரையரை

நேரிலே சந்தித்தவர் என்றும் கூறுவார்கள். தத்தாத்திரேய பக்தரான ஸ்வாமி ஜனார்தனா பிறப்பால் ஒரு அந்தணர் என்ற பொழுதிலும் ஜாதி பேதமற்றவர். அதனால்தான் அவர் தேவகட் என்ற நகரில் இருந்த ஒரு முகமதிய மன்னனின் கோட்டையை பாதுகாக்கும் பணியில் இருந்து கொண்டே தியானத்தையும் தொடர்ந்து கொண்டு இருந்தவர். அவர் தியானத்தில் இருக்கும் பொழுது அவரை எவரும் தொந்தரவு செய்யக் கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு உண்டு. அவர் தியானத்தில் இருக்கும் பொழுதெல்லாம் ஏக்நாத் அவருக்கு காவல் இருப்பார்.

இப்படிக் காலம் சுழன்று கொண்டு இருந்தது. ஒரு முறை ஒரு முகலாய மன்னன் அந்த நகரின் மீதுப் படை எடுத்து வந்து விட்டான். ஸ்வாமி ஜனார்தனா தியானத்தில் இருந்தார். எதிரிப் படைகளோ வேகமாக முன்னேறி வந்த வண்ணம் இருந்தனர். என்ன செய்வது, தியானத்தில் இருக்கும் ஸ்வாமி ஜனார்தனாவை எழுப்புவது குரு துரோகம் ஆகி விடுமே என்று கவலைப் பட்ட ஏக்நாத், குருவை மனதில் தியானித்தார். அவருடைய யுத்த உடைகளை அணிந்து கொண்டு யத்த பூமிக்குச் சென்று விட்டார். யுத்தம் நடந்து கொண்டு இருக்கையில் தன் பக்கத்தில் ஒரு குதிரை மீது அமர்ந்தபடி சிவந்த கண்களும் ஆக்கிரோஷமாகவும் இருந்த முகத்துடன் ஒரு முஸ்லிம் படை வீரன் எதிரிகளுடன் போரிட்டபடி யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததைக் கண்டார். வெற்றி பெற்ற பின் அது பற்றி தன் குருவிடம் கூறிய பொழுது யுத்தகளத்தில் அப்படி படைவீரன் உருவில் வந்து தங்களுக்கு உதவியவர் வேறு யாரும் அல்ல. தத்தாத்திரேயரே யுத்த வீரன் உருவில் வந்து காப்பாற்றினார் என்ற உண்மையைத் தன் குருவின் மூலம் உணர்ந்து கொண்டார். இன்னொரு முறை ஏக்நாத்திற்கு ஒரு சம்பவம் நிகழ்ந்தது. தத்தர் தன்னுடன் சில நாய்களையும், ஒரு வயதான பெண்மணியையும் அழைத்துக் கொண்டு பகீர் போன்ற உருவில் அவரிடம் வந்து தன்னுடன் உணவு அருந்துமாறு அழைத்தார். ஆனால் ஏக்நாத் தான்

ஒரு ஆசார பிராமணர் என்பதால் ஒரு முகமதியருடன் அமர்ந்து கொண்டு எப்படி உணவு அருந்துவது எனச் சங்கடப்பட்டுக் கொண்டு இருக்கையில் அங்கு வந்த அவருடைய குரு நாதர் வந்துள்ளது தனது குரு தேவனான தத்தாத்திரேயரே என்று அவருக்கு எடுத்துக் கூறி அவர் கொடுத்த உணவை அருந்துமாறு கூறினார். அதற்குள் வந்தவர் மாயமாக மறைந்து விட்டார். ஏன் இப்படி ஏக்நாத் என்ற ஒரு தனி மனிதருக்கு, தத்தாத்திரேயரிடம் தன்னை முழுமையாக சமர்பித்துக் கொள்ளாத ஒரு சன்யாசிக்கு தத்தர் கருணை காட்டுகின்றார் என்ற கேள்வி எழுந்தால் அது நியாயம் அல்ல. ஏன் அதற்கும் காரணம் இருந்தது என்பது அவர் பிறந்த பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு பிறந்த தத்தோத்பாவாவின் வார்க்கையின் ஒரு அத்தியாயம் மூலம் விளங்கும்.

## *தத்தோத்பவாவும் தத்தாத்திரேயரும்*

தத்தோத்பவா என்பவர் இளமைக் காலம் முதலே தத்தாத்திரேயரின் பக்தர். அவருடைய ஆசிகளைப் பெற்று சன்யாச வாழ்வை மேற் கொண்டவர். தத்தோபந்தின் வாழ்க்கையில் ஒரு சம்பவம் நடந்தது உண்டு. அவர் பன்னிரண்டு வயதான பொழுது அரசனிடம் வேலை செய்து கொண்டிருந்த அவருடைய தந்தை மன்னனிடம் கடன்பட்டு விட்டார். அதைத் திருப்பித் தர முடியாமல் போய்விட அந்த மன்னன் தத்தோத்பாவை பயணக் கைதியாக வைத்துக் கொண்டு பணத்தைப் முழுவதும் கொடுத்தப்பின் அவனை அழைத்துக் கொண்டு போகுமாறு கூறி விட்டான். அவருடைய குடும்பத்தினர் தத்தாத்திரேயரின் பக்தர்கள். அவரிடம் மனமுறுகிப் பிரார்தனை செய்யலாயினர். தங்களுடைய மகன் தத்தோத்பா மன்னனிடம் எப்படி எல்லாம் சித்திரவதைப் பட்டு வேலை செய்கின்றானோ என மனம் கதறி அழுதனர். தன் பக்தனின் மகன் சிறை பிடிக்கப்பட்டு கொடுமைகளை அனுமதிக்க விரும்புவாரா தத்தாத்திரேயர். ஆகவே ஒரு நாள் திடீர் என அந்த நாட்டு மன்னனிடம் ஒரு புதியவர் போலச் சென்று தன்னை

தத்தோத்பாவின் தந்தை அனுப்பி உள்ளார் என்றும் கடன் பட்டிருந்த பணத்தைக் திருப்பிக் கொடுத்து விட்டு சிறை வைக்கப் பட்டு உள்ள தத்தோத்பாவை திரும்ப அழைத்து வரும்படிக் கூறினார் என்று கூறிய பின்னர் பணத்தைக் குறித்த காலத்திற்கு முன்பே தந்துவிட்டு தத்தோத்பாவிற்கு விடுதலை வாங்கிக் கொண்டு அங்கிருந்து அவரை அழைத்துச் சென்றார். உண்மையில் நடந்தது எதுவுமே தத்தோத்பாவின் தந்தைக்குத் தெரியாது. விடுதலைப் பெற்று வீடு திரும்பி வந்த மகன் அனைத்து செய்திகளையும் கூறிய பின்னரே அப்படி ஒரு கருணையை செய்து உள்ளவர் தத்தாத்திரேயர் எனத் தெரிந்து கொண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

அதன் பின்னர் தத்தோத்பாவும் தத்தர் பக்தியில் இன்னமும் தீவிரம் அடைந்தார். மனம் எப்பொழுதும தத்தரையே நினைத்த வண்ணம் ஏங்கியது. இளம் வயது. நண்பர்களுடன் உல்லாசமாக இருக்க முடியவில்லை. மனம் முழுவதும் தத்தரைக் காண வேண்டும், தத்தரைக் காண வேண்டும் என்றே துடிக்கலாயிற்று. அந்த வேட்கையின் விளைவாக தத்தரை எங்காவது பார்க்க முடியுமா என மலைப் பகுதிகளில் இருந்த காடுகளின் உளளே சென்று தேடலானார். தியானம் செய்யலானார். உணவு பற்றியோ, உடைகளைப் பற்றியோ கவலைப் படவில்லை. மண் மீதும், வெற்று பூமி மீதும் படுத்து உறங்கினார். கற்கள் மீதும் பாறைகள் மீதும் படுத்து உறங்கினார். காலம் உருண்டது. சுமார் இருபதுக்கும் மேலான ஆண்டுகளை காட்டில் தொடர்ந்தார். இதனால் மிகவும் மனம் மகிர்வுற்ற தத்தாத்திரேயர் ஒரு நாள் திடுப்பென அவர் முன் வந்து நின்று தன்னுடன் சேர்த்து அவரைக் கட்டி அணைத்துக் கொண்டார். அப்படிக் கட்டிப் பிடித்த நேரத்தில் அவரை தெய்வீகப் பிறவியாக மாற்றினார். தத்தோத்பாவின் மன மகிழ்சிக்கு அளவே இல்லை. அனைத்து உலகையும் மறந்து நின்றார்.

அங்கிருந்து சென்று அம்பாகூகிரி என்ற இடத்தில் தங்கலானார். காட்டை விட்டு வெளியில் வந்த அந்த நேரத்தில்தான் ஏக்நாத்தையும் எதேச்சையாகச் சந்தித்தார். இரு முனிவர்களும் மனம் விட்டுப் பேசினர். காலம் உருண்டது. ஒரு முறை ஏக்நாத் இருந்த இடத்தில் கிருஷ்ண ஜெயந்தி நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக தத்தோத்பாவும் சென்றிருந்தார். விழா நடக்கும் இடத்திற்குச் சென்ற பொபுது வாசலில் தத்தாத்திரேயர் காவல்காரன் உருவில் நின்றிருந்ததைக் கண்டு ஆச்சரியம் அடைந்து ஓடிச் சென்று அவர் கால்களில் விழுந்து வணங்கினார். எதற்காக இப்படி காவல்காரன் உருவில் இங்கு இருக்கின்றீர்கள் எனக் அவரிடம் கேட்ட பொழுது, தான் காவல் காத்துக் கொண்டு இருந்தது ஏக்நாத் என்ற தனி மனிதனுக்கு அல்ல, காவலில் இருப்பது அவர் உருவில் உள்ள பாண்டுரங்க பகவானுக்கே எனவும், ஏக்நாதர் பாண்டுரங்கனே என்ற உண்மையையும் கூறி விட்டு அதனால்தான் அவருக்கு அத்தனை மரியாதைத் தருவதாகவும் கூறினார்.

தத்தரிடம் தன்னை முழுமையாக சமர்பித்துக் கொள்ளாத ஒரு சன்யாசிக்கு, ஏக்நாத் என்ற ஒரு தனி மனிதருக்கு ஏன் தத்தர் கருணை காட்டுகின்றார் என்ற கேள்வி எழுந்த பொழுது அதற்குக் காரணம் இருந்தது என்பதும் அவர் பிறந்து பதினெட்டு வருடங்களுக்குப் பிறந்த தத்தோத்பாவாவின் வாழ்க்கையின் ஒரு அத்தியாயம் மூலம் விளங்கும் எனவும் முன்பு கூறியது இதனால்தான் என விளங்கும். அந்த சம்பவம் நடந்த பல காலத்திற்குப் பின்னர் தத்தோத்பாவும் கோதாவரி நதிக் கரையில் தத்தரின் பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு ஞான உபதேசமும் பெற்றார். ‘அஹம் பிரம்மஸ்மி அதாவது நானே பிரும்மம் என்ற உண்மையை உணர்த்தும் மாபெரும் தத்துவம் அவர் பெற்ற ஞான உபதேசம்.

### *சத்ருஜித்தும் தத்தாத்திரேயரும்*

தத்தாத்திரேயருடைய மகிமைக்கு எடுத்துக்காட்டாக இன்னும் ஒரு கதை உண்டு. முன்னொரு காலத்தில் சத்ருஜித் என்ற மன்னன் இருந்தான். நல்ல ஒழுக்கங்களும் நேர்மையும் கொண்டு அரசாண்டு வந்தவன். அவனுக்கு ருதுத்வஜன் என்ற மகன் இருந்தான். அப்பாவிற்கு தப்பாமல் பிறந்த பிள்ளை என்று போற்றும் அளவிற்கு ருதுத்வஜன் திறமைசாலியாகவே இருந்தான். அது மட்டும் அல்ல, நல்ல குணங்களிலும், சாஸ்திர அறிவுகளிலும் குறைவின்றி இருந்தான். அத்தனை இருந்தும், தான் ஒரு இளவரசன் என்பதையும் மறந்துவிட்டு தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு அங்கும் இங்கும் அலைந்து திரிந்த வண்ணம் உல்லாசமாக இருந்து வந்தான். அவனுக்கு இருந்த பல நண்பர்களில் இருவர் மட்டும் அவனிடம் மிக நட்புடன் பழகிக் கொண்டு இருந்தனர். அவர்கள் நாகலோகத்தைச் சேர்ந்தவர்கள். நாகலோகத்தைச் சேர்ந்த அவர்கள் அந்தணர்களின் வேடத்தில் அங்கு வந்து தங்கி வார்ந்து கொண்டு ருதுத்வஜனுடைய நல்ல நண்பர்களாக இருந்ததின் காரணம் ருதுத்வஜனுடைய நல்ல பண்பும் குணமும்தான். அவர்கள் நாக லோகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மை ருதுத்வஜனுக்குத் தெரியாது.

இப்படியாக அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கையில் ஒருமுறை முனிவர் ஒருவர் சத்ருஜித்தின் அரசவையில் வந்து தனக்கு ஏற்பட்டிருந்த ஒரு சங்கடத்தைப் பற்றிக் கூறினார் ‘‘அரசே, நான் பல ஆண்டுகளாக காட்டில் தவம் செய்து கொண்டு இருப்பவன். ஆனால் கடந்த சில நாட்களாக ஒரு அரக்கன் அங்கு வந்து என் தவத்தை கலைத்தவாறு இருக்கின்றான். நான் இத்தனை நாட்களாக கஷ்டப்பட்டு முசய்த தவத்தின் பலனை உபயோகப் படுத்தி கேவலமான ஒரு அரக்கன் அவனை அழிக்க விரும்பாமல் தெய்வத்தை வேண்டிக் கொண்டு நின்றிருந்த பொழுது ஆகாயத்தில் இருந்து ஒரு அசரீ கூறியது, ‘நான் உனக்கு சூரியனின் வாகனங்களுக்கு இணையான சக்தி கொண்ட ஒரு தேவலோகக் குதிரையை

அனுப்புகிறேன். அதைக் கொண்டு போய் அரசன் சத்ருஜித்திடம் தந்து அந்த குதிரையை அவனுடைய மகனிடம் கொடுத்து அதில் ஏறிச் சென்று அரக்கர்களை அழிக்கச் சொல்' என்று ஆணையிட்டது. அதே சமயத்தில் என் எதிரில் ஒரு குதிரையும் வந்து நின்றது. அதை எனக்கு அசரி கூறிய கட்டளைப்படியே உன்னிடம் கொண்டு வந்து விட்டேன் மன்னா. நீதான் அந்த அரக்கர்களை அழித்து என்னுடைய தவத்தினைத் தொடர உதவ வேண்டும்' என்று கூறிவிட்டு தன்னுடன் அழைத்து வந்திருந்த குதிரையை அரசனிடம் தந்தார்.

அரசன் மிகுந்த பண்பு மிக்கவன், ரிஷி முனிவர்களைக் காப்பது தன் கடமை என நினைப்பவன். ஆகவே சற்றும் தயங்காமல் தன் மகன் ருதுத்வஜனை அழைத்து முனிவர் கூறிய செய்தியைக் கூறி அவருக்கு துணை சென்று அந்த அரக்கர்களை அழித்து விட்டு வருமாறு ஆணையிட்டான். மகனும் மறு வார்த்தைக் கூறாமல் முனிவருடன் கிளம்பினான். அந்த குதிரையிடம் சென்று கை கூப்பி வணங்கி நின்று தனக்கு துணை புரியுமாறு அவன் வேண்டிக் கொள்ள அந்த குதிரையோ குனிந்து உட்கார்ந்து கொண்டு அவனைத் தன் முதுகில் ஏறிக் கொள்ளுமாறு சைகைக் காட்டியது. தன்னுடன் அந்த முனிவரையும் அமர வைத்துக் கொண்ட இளவரசன் முனிவரின் பர்ணசாலையை அடைந்தான். முனிவர் தவத்தினைத் தொடர, இளவரசனோ இரவு பகலாக அந்தக் குடிலுக்கு காவலாக அங்கு இருந்து வந்தான்.

அப்போது ஒரு நாள் ஒரு அரக்கன் காட்டுப் பன்றியின் உருவில் அங்கு வந்து தவத்திற்கு இடையூறு விளைவிக்கலானான். அதைப் பார்த்த இளவரசன் ருதுத்வஜன் அதை அம்பு எய்தி தாக்கலானான். கடுமையாக அம்பு அடிபட்ட அந்த காட்டுப் பன்றி உருவில் இருந்த அரக்கன் ஓடத் துவங்க, அதை விடக் கூடாது என்று எண்ணிய இளவரசன் தேவலோக குதிரை மீது எறி அதைத் துரத்தலானான். தான் தப்பி ஓடாவிடில் தன்னை

அவன் கொன்று விடுவான் என்பதை உணர்ந்தான் அந்த அரக்கன். ஆகவே பூமியைக் குடைந்து கொண்டு பாதளத்துக்குள் ஓடலானான். ருதுத்வஜனும் அதை விடாமல் துரத்திய வண்ணம் பாதளத்துக்குள் சென்றான். அவன் அமர்ந்து இருந்தது ஒரு தேவலோக குதிரை என்பதால் அதன் சக்தியால் பாதாளத்திலும் புகுந்து பன்றியைத் துரத்த முடிந்தது. பாதாளத்தில் நுழைந்து கொண்ட அந்த காட்டுப்பன்றி எங்கோ சென்று மறைந்து கொண்டது. அந்தப் பாதாள உலகிலோ கண்களைக் கவரும் வண்ண மயமான கட்டிடங்கள் நிறைந்து இருக்க, இளவரசன் அந்த பளிங்கு மண்டபங்களின் அழகை ரசித்துக் கொண்டு எந்த வீட்டில் சென்று அந்தக் காட்டுப் பன்றி மறைந்து கொண்டது என எண்ணியவாறு அதைத் தேடலானான்.

அப்படி அவன் தேடி அலைகையில் வழியிலே ஒரு அழகிய பெண்மணியைக் கண்டான். நல்ல முகப் பொலிவு, தங்க ஆபரணங்கள் அணிந்து இருந்தாள். ஆனால் கிழிந்திருந்த ஆடைகள், முகத்தில் சோகத்தின் சாயல் என்றபடி காட்சி தந்தாள் அந்தப் பெண். ருதுத்வஜன் அவளை வியப்போடு நோக்க அவளும் அவனை வெறித்துப் பார்த்தபடி நின்றிருந்தாள். ஆகவே அந்தப் பெண்மணியின் அருகில் சென்ற இளவரசன் அவளைப் பார்த்துக் கேட்டான் ‘அம்மணீ நான் ஒரு காட்டுப் பன்றியைத் துரத்திக் கொண்டு இங்கு வந்தேன். அது இந்த கட்டிடத்தில் நுழைந்து ஓடியது. அதைக் கண்டு பிடித்து அழிக்க வேண்டும். இந்த கட்டிடத்துக்குள் யார் வசிக்கின்றார்கள்’. அவன் அப்படிக் கேட்டதும் அந்தப் பெண்மணியோ சட்டென உள்ளே ஓடி விட்டாள் . அந்த வீட்டில் எந்த வித சலனமும் தெரியவில்லை. ருதுத்வஜனுக்கு வியப்பாக இருந்தது. இதென்ன மாயமாக இருக்கின்றதே, காட்டுப் பன்றியும் ஓடி மறைந்து விட்டது. தான் கண்ட பெண்ணையும் காணவில்லை. எங்கே மறைந்து விட்டாள் அவள் என எண்ணியபடி, தைரியமாக மீண்டும் தேவலோகக் குதிரை மீது ஏறி அந்தக் கட்டிடத்தின்

மேல் மாடியை அடைந்து குதிரையை அங்கேயே கட்டிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தான். என்ன அதிசயம் அந்த வீட்டின் ஒரு பெரிய அறையில் கண்களே பூரித்துப் போகும் அளவில் ஒரு கட்டழகி மஞ்சத்தில் படுத்து இருந்தாள். அவன் வந்ததை அவள் கவனித்ததாகத் தெரியவில்லை. படுத்திருந்தவள் அழகில் சொக்கி நின்றிருந்தான் ருதுத்வஜன். அவன் அப்படி அவளைப் பார்தபடி நின்று கொண்டு இருக்கையில் எதேச்சையாக திரும்பிப் படுத்தவள் தன் எதிரில் முன் பின் பார்த்திராத ஒரு மானிடன் வந்து நின்றதைக் கண்டு முதலில் பயந்து போனாலும் அந்த மங்கையும் அவனுடைய அழகைப் பருகலானாள். இருவரும் தம்முடைய நிலையை மறந்துபோய் காதல் மயக்கத்தில் விழத் துவங்க இருந்த நேரத்தில் தன்னை உடனடியாக சுதாகரித்துக் கொண்டான் ருதுத்வஜன். தான் வந்த காரியம் தடைபடலாகாது என எண்ணியபடி அவளிடம் கேட்டான் 'அழகிய பெண்ணே, உன் முகத்தில் எதோ சோகக் களை தெரிகின்றதைக் காண்கின்றேன். நீ யார், உனக்கு என்ன கவலை என்பதையும், இங்கு என்ன செய்கிறாய் எனவும் நான் தெரிந்து கொள்ளளாமா'. அவள் பதில் கூறாமல் மௌனம் சாதிக்க இன்னும் இரு முறை அவளிடம் அந்தக் கேள்விக் கணைகளை வீசினான். மெல்ல அவள் வாய் பேசத் துவங்கியது. குண்டலி என எவளையோ நோக்கி அவள் குரல் கொடுக்க, உள்ளே இருந்து இளவரசன் முதலில் வெளியில் கண்ட பெண்மணி அங்கு வந்தாள். வந்தவள் தலை குனிந்தபடிக் கூறினாள் 'ஐயா, வெளியில் நீங்கள் என்னிடம் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூற இயலாத நிலைமை எங்களுக்கு. மன்னித்து விடுங்கள். நாங்கள் ஒரு ஆபத்தில் சிக்கி உள்ளோம். அது பற்றி இப்போது கூற இயலாது. ஆகவே முதலில் நீங்கள் யார் என்பதைக் கூறுவீர்களா?

இளவரசன் புரிந்து கொண்டான். அந்த பெண்கள் எதோ ஆபத்தில் சிக்கி உள்ளனர். அவர்களைக் காக்க வேண்டும். இப்படியாக எண்ணியவாறே அவன் கூறினான் "மங்கைகளே, நான் சத்ருஜித் என்ற பூலோக மன்னனின்

மகனான ருதுத்வஜன் என்பவன். நான் ஒரு காட்டுப் பன்றியின் உருவில் பூலோகம் வந்து முனிவரின் தவத்தைக் கலைக்க முயன்ற அரக்கனைத் தேடி இங்கு வந்தேன். என் மீது நம்பிக்கை இருந்தால் உங்களுடைய துயரம் என்ன என்று கூறினால் என்னால் முழுந்த அளவு உங்களுக்கு உதவுகிறேன்", என்று கூற அவன் மீது நம்பிக்கைக் கொண்டு அவனிடம் முதலில் அவனை வெளியில் கண்ட பெண்மணி கூறினாள். 'நன்றி இளவரசே, நன்றி. எங்களின் துயரத்தைக் கேளுங்கள். இதோ நிற்கின்றாளே என் தோழி மதாலசை என்பவள், அவள் மீது காதல் கொண்டு அவளை கட்டாயமாக மணந்து கொள்ள நிர்பந்தம் செய்தான் இந்த பாதாள உலகின் அரசனின் புதல்வன். பூவுலகில் உள்ளவர்கள் எப்படி பாதாளத்தில் உள்ளவர்களை, அதுவும் அரக்கனை மணக்க சம்மதிப்பாள்?

அதனால் அதற்கு மறுத்த இவளை பிடித்து கொண்டு வந்து இந்த பாதாள உலகில் சிறை வைத்து இருக்கின்றான். இன்னும் இரண்டு நாட்களில் இவளை கட்டாயமாக மணக்கப் போவதாக கூறி விட்டு சென்றதினால் அவள் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தாள். ஆனால் இவளை எதேற்சையாகப் பார்த்த காமதேனுப் பசு அந்த தற்கொலை முயற்சியைக் கை விடுமாறு அறிவுறுத்தியதுடன் அல்லாமல், இந்த அரக்கனை எவன் கொல்ல முயலுவானோ அவனே மதாலசையான உன்னை மணப்பான் என்று தைரியம் கூறிவிட்டுச் சென்றாள். அதற்கேற்ப இன்று பூலோகம் சென்று வந்த அந்த அரக்கன் தன் உடல் முழுதும் எவனோ அடித்த அம்புகளினால் துளைக்கப்பட்டு வந்துள்ளான் என்று நாங்கள் நினைத்துக் கொண்டு இருந்த பொழுதுதான் நீங்களும் அவனைத் துரத்திக் கொண்டு வந்து உள்ளீர்கள். இதை நல்ல சகுனம் என்றே நினைக்கின்றோம்'? என்று கூறிய பின் தங்களுக்கு உதவ முடியும் எனில் பாதாளத்தில் இருந்து அவளை மீட்டுக் கொண்டு போக முடியுமா எனக் கேட்டனர்.

இளவரசனுக்கோ அந்த மங்கையை மிகவும் பிடித்து இருந்ததினால் அவளை தான் மணந்து கொண்டு அங்கிருந்து அழைத்துச் செல்ல விரும்பினான். ஆனாலும் தன் குல வழக்கப்படி அவளை தன் குருவின் ஆசி இன்றி, வேத ஹோமம் மூட்டி வளர்க்காமல் மணம் செய்து கொள்ள விரும்பவில்லை. அந்த பெண்களும் அதை அறிந்து கொண்டு அவனுடைய வேத குருவை நினைத்து வேண்டத் துவங்கியதும் அவரும் அங்கே பிரசன்னமாகி, இருவரின் விருப்பத்தையும் அறிந்து கொண்ட பின் அங்கேயே தன் சக்தியினால் ஹோம குண்டம் வளர்த்து அக்னி சாட்சியாக அவர்களுக்கு விவாகம் செய்து வைத்தார். அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொண்டு பூலோகம் நோக்கிப் புறப்பட்டவன் மீது போர் தொடுத்தான் பாதாளகேது. ஆனால் இளவரசன் அதிக சக்தி பெற்றவனாக மட்டும் இல்லாமல் பராக்கிரமான குதிரையையும் வைத்து இருந்ததினால் அனைத்து அசுரர்களையும் கொன்ற பின் அவளை மீட்டுக் கொண்டு தன் ராஜதானியை அடைந்தான். அவன் செல்லும் முன்பே அனைத்து விவரங்களையும் அவனுக்கு விவாகம் செய்து வைத்த அரச குரு மன்னரிடம் கூறி இருந்ததினால் அவர்கள் வரவை ஆவலோடு எதிர் பார்த்துக் காத்திருந்தவர்கள், ஒரு மனைவியுடன் திரும்பிய மகனை மிக ஆடம்பரமாக வரவேற்றனர்.

திரும்பி வந்தது முதல் இளவரசன் பழக்க வழக்கங்களில் பெரிய மாற்றம் தோன்றியது. முன்புபோல் இன்றி நண்பர்களுடன் சுற்றித் திரிவதைக் குறைத்த பின் தன் மனைவியுடனும் ராஜ பரிபாலனத்திலும் அதிக நேரம் செலவு செய்யலானான். அவன் மனதில் மற்றோரு தாகம் எழுந்தது. ரிஷி முனிவர்களை அடிக்கடி சென்று பார்த்தபடியும் அவர்களின் அறிவுறைகளைக் கேட்டபடியும் பொழுதைக் கழிக்கலானான். அதே நேரத்தில் மனைவியுடனும் மிகவும் மகழ்சியாக வாழ்ந்த வண்ணம் இருந்தான். நாட்கள் கடந்து சென்றன. அரசனும், அரசியும் தங்கள் மகனின் மனப் போக்கை கண்டு வாழ்கை முறையை வெகுவாகப் புகழ்ந்து கொண்டும் மதாலசை மீதும் அன்பு

கொண்டு வாழ்ந்தனர். இப்படியாக இனிமையாக கடந்து கொண்டிருந்த வாழ்கையைக் கண்டான் போரில் இறந்து போன பாதாளகேதுவின் சகோதரன் தாளகேது. அவன் மனதில் வெறுப்பு துளிர் விட்டு வளர்ந்தபடி, சில நாட்களில் மரமாகி பிரும்மாண்டமாக வளர்ந்தது. ருதுத்வஜனை எப்படி பழி வாங்க வேண்டும் என வழி தேடி அலைந்து கொண்டிருந்த நேரத்தில் அவனுக்கு பரிசு கிடைத்தது போல நடந்தது ஒரு நிகழ்ச்சி. காடுகளுக்குள் அடிக்கடிச் சென்று ரிஷி முனிவர்களை சந்தித்து வந்த இளவரசன் ஒரு நாள் வழி தவறி படையினரை விட்டு விலகி காட்டுக்குள் வெகு துாரம் சென்று விட்டான். அப்படி காட்டில் சுற்றிக் கொண்டு அலைந்தவன் கண்களில் பட்டது ஒரு அற்புதமான இடம். பெரிய ஆசிரமம் போன்று தோற்றம் தந்தது அந்த இடம். பழம், பூக்கள், அழகான செடி, கொடிகள் என பூத்துக் குலுங்கிய அற்புதமான இடம் அது. அந்த அடர்ந்த காட்டில் இப்படி ஒரு இடமா என வியந்த வண்ணம், அதற்குள் சென்று வழி தவறி நிற்கும் தனக்கு ஊர்த் திரும்பிச் செல்ல வழி காட்டி உதவ எவரும் தென்பட்டால் வேண்டிக் கொள்ளலாம் என உள்ளே சென்றவனை வரவேற்றார் ஒரு துறவி.

அவர் வேறு யாரும் அல்ல. துறவி உருவில் இருந்து கொண்டு, செயற்கையான அந்த பசும் சோலையைப் படைத்து, இளவரசனை அங்கு வர சூழ்ச்சி செய்திருந்த பாதாளகேதுவின் சகோதரன் தாளகேதுதான். அந்த தேவலோக குதிரை அந்த இளவரசனிடம் இருக்கும் வரையிலும் மற்றும் அவனுக்கு இருந்த பல வரங்களின் பயனினாலும் இளவரசனை தாளகேதுவினால் நேரடியாகக் கொல்ல முடியாது என்பதினால் வேறு ஏற்பாடு செய்து வஞ்சகமாக அவனை அங்கே வரும் நிலைக்கு ஆளாக்கி இருந்தான். அவன் செய்த உபசாரத்தினால் மயங்கி மனம் மகிர்ந்து போன இளவரசனும் அவருக்கு தன்னிடம் இருந்து என்ன உதவி வேண்டும் என்று கேட்க சற்றும் தயக்கம் இன்றி அந்த மாற்று உருவில் இருந்த தாளகேது தான் ஒரு யாகம் செய்ய இருப்பதால் அதற்கு இளவரசன் உதவியின் சின்னமாக அவன்

கழுத்தில் அணிந்து இருந்த ஒரு இரத்தின சாரம் மட்டும் தேவை என்று கேட்டான். கழுத்தில் அணிந்து இருந்த இரத்தின மாலையை அவனுக்குத் திருமணம் நடந்த பொழுது அவன் மனைவி மதாலசை தன்னுடைய அன்புப் பரிசாகத் தந்திருந்தாள். ஆனால் யாசகம் கேட்டு விட்ட முனிவரிடம் எப்படி அதைத் தர மறுக்க முடியும் என யோசித்த பின் வேறு வழி இன்றி அதைக் கயற்றிக் கொடுத்து விட்டான். முனிவரும் அவனை அங்கேயே இரவு தங்கிவிட்டு காலையில் எழுந்து செல்லும்படிக் கூறிய பின் தனக்கு வேறு ஒரு வேலை இருப்பதாகக கூறிவிட்டு கிளம்பி விட்டார். மறுநாள் காலை அவர் கூறிய இருந்த வழியைப் பின் பற்றிக் கொண்டு தன் ராஜதானிக்குக் கிளம்பினான் இளவரசன்.

இதற்கு இடையில் ராஜதானிக்குக் இளவரசன் போய் சேரும் முன்பே தாளகேது துறவி உருவிலேயே அரண்மனைக்குப் சென்று மன்னனை சந்தித்து சோகமான ஒரு செய்தியைக் கூறினான். மன்னனிடம் சென்றவன் இளவரசனிடம் இருந்து வஞ்சித்துப் பெற்ற இரத்தின மாலையைக் கொடுத்து விட்டுக் கூறினான் “மன்னனே அடர்ந்த காட்டின் நடுவில் உன் மைந்தனை அவனுடைய விரோதிகள் கொன்று போட்டு விட்டுச் சென்று விட்டனர். அங்கு எதேற்சையாக சென்ற என்னிடம் இறக்கும் தருவாயில் இருந்த அவன் இந்த மாலையைக் கொடுத்து விட்டு மதாலஸை மதாலஸை என்று கதறியபடி இறந்து விட்டான். என்னால் அவனைக் காக்க முடியவில்லை மன்னா” எனப் பொய் அழுகை அழுது விட்டுக் கிளம்பிச் சென்று விட்டான். அந்த துக்கத்தில் அதிர்ந்து போன அனைவரும் வந்தவர் யார் என்பதைப் பற்றி கவனிக்க மறந்து விட்டனர். மாலையைக் கண்ட மதாலஸையும் உண்மையில் அவன் இறந்து விட்டான் என எண்ணியவாறு மடிந்து விழுந்தாள்.

அவளுக்கு இறுதிக் கடன்கள் செய்து முடிக்க ராஜ்யமே துயரத்தில் ஆழ்ந்து இருந்தது. அவற்றை எல்லாம் வெற்றிகரமாக செய்து விட்டு வெளி வந்த

தாளகேது கொக்கரித்த வண்ணம் ‘அவனைப் பழி வாங்கி விட்டேன்.. எனக்குக் கிடைக்க இருந்த மதாலஸை அவனுடனும் வாழ முடியாமல் இறந்து விட்டாள் , என் விரோதம் ஒழிந்தது’ என மகிழ்சியுடன் கூவியவாறு சென்றான். இதற்கு இடையில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்த பின் நகரத்திலே நுழைந்த இளவரசன் அங்கு நிலவி இருந்த காட்சியைக் கண்டு துணுக்குற்றான். என்ன இது, நகரமே சோகமயத்தில் இருக்கிறதே, என்ன ஆயிற்று என விடை தெரியாமல் அவசரம் அவசரமாக அரண்மனைக்குள் சென்றவனைக் கண்டு அதிர்ச்சி உற்றனர் அனைவரும். சற்று நேர அவகாசத்தில் நடந்து முடிந்த அத்தனை நிகர்ச்சிகளையுமே இரு தரப்பினரும் பரிமாறிக் கொள்ள எவனோ ஒருவன் இப்படிப்பட்ட ஒரு சங்கடத்தை வேண்டும் என்றே ஏற்படுத்தி இருப்பதை உணர்ந்தனர். ஆனால் என்ன செய்வது?

நடந்தது நடந்து விட்டது. மனைவி இறந்த சோகம் மனதில் இருந்து மறைய மறுத்தது. குமுறிக் குமுறி எத்தனை நாட்கள்தான் அழுது கொண்டு காலத்தைக் கழிப்பது , காலம் எதையும் தேற்றும் என்ற நம்பிக்கை உண்டு. மெல்ல மெல்ல இளவரசன் தன் பழைய நண்பர்களுடன் மீண்டும் கூடி இருந்தபடி பொழுதைக் கழிக்கலானான். அவன் நண்பர்களும் அவனைத் தேற்றி ஆறுதல் கூறி அவனை காத்து நின்றனர். இன்னமும் காலம் சுழன்றது. முன்பு கூறினேன் அல்லவா. இரண்டு நாகலோக இளைஞர்கள் இளவரசனின் நெருங்கிய நண்பர்கள் இருந்தனர் என. அவர்களும் நாகலோகம் செல்லாமல் மனித உருவிலேயே இருந்து கொண்டு ருதுத்வஜனுடன் பொழுதைக் கழித்துக் கொண்டு பூலோகத்தில் இருக்க அதைக் கண்ட அவர்களுடைய தந்தை கவலையுற்றார். ஒரு நாள் அவர்களை அரைத்து ‘குழந்தைகளே, இத்தனை நாட்களும் நீங்கள் எங்கு செல்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் எனக் கேட்காமலே இருந்து விட்டேன். எனக்குக் கவலையாக உள்ளது. நீங்கள் ஏன் மனித உருவில்

திரிகின்றீர்கள், எங்கு சென்று எவருடன் பழகுகிறீர்கள்? அவர்களும் தங்களுடைய நண்பனான இளவரசன் ருதுத்வஜனைப் பற்றிக் கூறினர். அவர்களுடைய தந்தையோ முதலில் அவர்கள் ஒரு மனிதப் பிறவியுடன் சம்மந்தம் வைத்திருப்பதை விரும்பாமல் கோபமுற்றாலும், அந்த இரண்டு புதல்வர்களும் ருதுத்வஜனின் அற்புதமான குணாதிசயங்களை தந்தைக்கு எடுத்துக் கூறினதும் அவர் மனம் நிம்மதி அடைந்தார்.

ஆயினும் அவர்கள் முகத்தில் சூழ்ந்து கொண்டிருந்த சோகத்தைக் கண்ட அவர் அவர்களின் வருத்தத்திற்கான காரணத்தைப் பற்றி வினவியதும், துக்கத்துடன் இருந்த அந்த இரு புதல்வர்களும் தம்முடைய நண்பனுக்கு ஏற்ப்பட்ட துயரக் கதையை விவரமாக எடுத்து உரைத்தனர். தங்களுக்காக உயிர் தியாகம் புரியும் அளவு குணத்தில் சிறந்தவன் என்றும் எப்படி எல்லாம் அரக்கர்களை அழித்து முனிவர்களின் தவத்தைக் காத்து வந்தவன் எனவும் , எப்படிப்பட்ட நேரத்தில் அவன் பழி வாங்கப்பட்டான் என்பதையும் விளக்கமாக எடுத்து உரைத்தனர். அந்த நாகலோக மன்னனும் சத்ருஜித்தின் ராஜ்ய பரிபாலனத்தைப் பற்றிக் ஏற்கனவே கேள்விப்பட்டு இருந்தான். அவன் காலத்தில் நல்ல ஆட்சி நடைபெறுகிறது என்பதையும், அவன் மகன் ருதுத்வஜனும் அவனுக்குத் தப்பாமல் பிறந்த பிள்ளையாகவே உள்ளான் என்பதையும் அறிந்து கொண்ட பின், மானிடப் பிறவிகளுடன் உறவு கொள்ளக் கூடாது என அவர்களைப் பற்றி தான் தவறாக எண்ணி விட்டதற்கு வருந்தினான்.

அவனுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என நினைத்தான். அது மட்டும் அல்ல இறந்து போனவளை எப்படி உயிர் பிழைக்க வைக்கலாம் எனவும் மன்னன் யோசிக்கலானான். முடிவாக அதற்கு ஒரு வழி இருந்தது அவனுக்குத் தெரிந்தது . தன்னுடைய ராஜ பரிபாலனத்தை கவனித்துக் கொள்ளும்படி தன் பிள்ளைகளிடம் கூறி விட்டு, தானே இமயமலை

அடிவாரத்தில் சென்று சரஸ்வதி தேவியை வேண்டிக் கொண்டு தவம் செய்யலானான். கடுமையான தவத்தில் இருந்த அவன் முன் தோன்றினாள் சரஸ்வதி தேவி. மன்னனோ சற்றும் யோசிக்காமல் வந்த வேலையை மட்டும் நினைத்துக் கொண்டு அவளிடம் வேண்டினான், 'தேவி பல வருடங்கள் முன்பு மாண்டு போய்விட்ட என் சகோதரனின் நினைவு என் மனதை விட்டு அகல மறுக்கின்றது. அவனை உயிர் பெறச் செய்து எங்கள் இருவருக்கும் பரிபூர்ணமான கான வித்தைகளை தந்து அருள வேண்டும்' என்றான். சரஸ்வதி தேவியும் அவன் தவத்தினால் மனம் மகிழ்ந்து போனதால் அவன் கேட்ட வரங்களைத் தந்து அருளினாள். உயிர் திரும்பப் பெற்ற சகோதரனோ தன் சகோதரனைக் கட்டித் தழுவி கண் கலங்கி நலம் விசாரித்தான். நாக மன்னனும் தான் அங்கு வந்ததிற்குக் காரணமாக இருந்த ருதுத்வஜனனின் கதை முழுவதையும் கூறிவிட்டு இருவரும் சிவபெருமானிடம் சென்று அந்த பிரச்சனைக்குத் தீர்வு பெற வரம் கேட்க வேண்டும் என்றான். அவர்கள் ஒரு முடிவு செய்தனர். இருவரும் கயிலைக்குச் சென்று சிவபெருமானைத் துதித்துப் பாடிவிட்டு அவரிடம் தன் குடும்பத்தில் ஒரு மகளாக மதாலஸை பிறக்க வழி செய்ய வேண்டும் என வேண்டிக் கொள்ளலாம் எனவும், அப்படி பிறக்கும் அவளை மீண்டும் ருதுத்வஜனனுக்கு மணம் செய்து கொடுத்து அவன் துயரைப் போக்கலாம் என முடிவு செய்தனர்.

அதற்கு ஏற்ப கயிலைக்குச் சென்ற நாகலோக சகோதரர்கள் இருவரும் அதுவரை கேட்டிருக்க முடியாத அளவிலான கான மழையை சிவன் சன்னதியில் பொழிந்தனர். அதைக் கேட்டு அப்படியே மயங்கினார் சிவனார். அவர்களுக்கு என்ன வரம் வேண்டுமோ அதைத் தருவதாக வாக்குறுதி தர, அவர்களும் மதாலஸை தங்கள் குடும்பத்தில் பிறக்க வைத்து அவள் இறந்த பொழுது இருந்த அதே உணர்வுடனும், உடலுடனும் மாற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். சிவடிபருமானும் அதை அவர்களுக்கு அருளினார்.

வரத்தைப் பெற்றுக் கொண்ட சகோதரர்களும் சந்தோஷமாக நாடு திரும்பினர். வரம் கிடைத்தது போலவே மதாலஸை அவனுக்கு மகளாகப் பிறந்து பழைய உருவை அடைந்தாள். ருதுத்வஜனனின் நண்பர்கள் அளவற்ற மகிழ்சி அடைந்தனர். அடடா, நம் நண்பனின் மனைவியே நமக்கு சகோதரியாக வந்து விட்டாளே என இன்பத்தின் உச்சிக்கே சென்றனர். அவர்களின் தந்தை மனோசாஸ்திரம் அறிந்தவர். உடனே சென்று ருதுத்வஜனை அழைத்து வந்து அவளைக் காட்டினால் அவனால் அதை ஏற்க முடியாது எனத் தெரிந்ததினால், அரண்மனையிலேயே அவளை எவர் கண்களிலும் படாமல் மறைந்து இருக்கச் செய்த பின் ருதுத்வஜனை வேறு சாக்கில் அங்கு அழைத்து வரும்படி பிள்ளைகளை ருதுத்வஜனிடம் அனுப்பினான். அவர்களும் பூலோகம் சென்று அன்று இரவு முழுவதும் ருதுத்வஜனனுடன் கழித்த பின் தங்களுடைய தந்தை அவனைக் காண விரும்புவதாகக் கூறி தம் வீட்டிற்கு வருமாறு அழைத்தனர்.

முதலில் எதை எதையோ கூறிவிட்டு அந்த அழைப்பை ஏற்க மறுத்தவன், இறுதியாக நண்பர்களின் தந்தை என்றால் தனக்கும் தந்தைக்கான சமானம் உள்ளவர் அல்லவா என நினைத்ததினால் அவர்களுடன் சென்றான். நதிக் கரைக்கு அந்த பக்கத்தில் இருந்த வீட்டிற்கு செல்வதாகக் கூறி விட்டு ஒரு படகில் ஏறி நடுக்கடலில் சென்ற பின் தங்களுடைய தந்திர வித்தையால் அவன் கண்ணளைக் கட்டி விட்ட பின் கடலின் அடியில் இருந்த நாகலோகத்திற்கு அவனை அழைத்துச் சென்றனர். பல மணி நேரமாக எங்கேயோ சென்று கொண்டிருந்த படகு நின்றது. முடிக் கொண்ட கண்கள் தாமாகத் திறந்து கொண்டன. விசித்திரமான உலகில் தான் இருப்பதை உணர்ந்தான் ருதுத்வஜன். அவனுக்கு இரு புறமும் இரண்டு நாக முகம் கொண்டவர்கள் நின்றிருந்தனர். அவர்களில் ஒருவன் கூறினான் ‘நண்பனே, எங்களை மன்னித்து விடு. நாங்கள் நாக லோகத்தைச் சேர்ந்தவர்கள். உன் அன்பையும் நட்பையும் பெற பிராமண உருவில்

பூலோகம் வந்திருந்து உன்னுடன் நட்பு கொண்டோம். எங்கள் தந்தை உன்னைப் பார்க்க விரும்பியதால்தான் உன்னை இங்கு அழைத்து வந்தோம். தவறாக நினைக்காதே'. அவர்களுடைய குரலைக் கொண்டு அவர்களை அடையாளம் கண்டு கொண்ட பின் அவர்களுடைய நேர்மையை மதித்த இளவரசனும் அவர்களை மன்னிக்கும் அளவுக்குத் தான் உயர்ந்தவன் அல்ல எனவும், அவர்கள் செய்யாத தப்பிற்கு எதற்காக மன்னிப்புக் கோருவது எனவும், நண்பனின் தந்தையும் தன் தந்தையே என நினைப்பவனே உண்மையான நண்பன் என்றும் பலவாறு கூற அந்த நாக லோக நண்பர்களுக்கு அவன் மீதான மதிப்பு இன்னமும் உயர்ந்தது.

அவனைத் தங்களுடைய தந்தையிடம் அழைத்துப் போனார்கள். நல்ல வயதான நாக மன்னன். சாந்தம் கமழும் முகம். அவரைக் கண்ட மாத்திரத்திலேயே அவர் கால்களில் விழுந்து வணங்கியவனை மார்போடு தூக்கிக் கொண்டு அணைத்து பலவாறு அவன் பெருமைகளைப் பற்றி தன்னுடைய மகன்கள் கூறியதை எல்லாம் அவனிடம் விவரமாகக் கூறிய பின், வேண்டும் என்றே ஒன்றும் தெரியாதது போல் அவன் மூலம் நல்ல மகட்பேறு உண்டாகட்டும் என ஆசி கூறினார். திகைத்து நின்ற ருதுத்வஜனிடம் மேலும் அவனுக்கு என்ன உதவி வேண்டும் எனக் அவர் கேட்க, அவனும் 'பெரியவரே னைத்துமே நிறைந்து இருக்கும் எனக்கு என்ன வேண்டும்' என்று பதில் தந்த பின் அமைதியாக நின்றான். அவன் மனதில் மதாலஸையின் நினைவுகள் மட்டுமே அலையாக ஓடின. அதை தன் தவ வலிமையால் நாக மன்னன் உணர்ந்து கொண்டாலும் வெளிக் காட்டாமல் தன் மகன்களிடம் அவனை அழைத்துப் போய் உணவு தந்து சற்று நேரம் களைப்பாறிய பின் அங்கு அழைத்து வருமாறுக் கூறினார். களைப்பாறிய பின் வந்தவனிடம் குசலம் விசாரித்தப் பின் மீண்டும் வேண்டும் என்றே அவனிடம் 'என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தன் தவ வலிமையால் முடியும்' எனக் கூற மீண்டும் அவன் மனதில்

மதாலஸையின் முகமே தோன்றியது. அவன் ஏக்கத்துடன் தன் நண்பர்களின் முகத்தை நோக்க, அதுவே தருணம் என காத்திருந்தவர்கள் கூறினார்கள், 'தந்தையே எங்கள் நண்பனுக்கு இல்லாதது எதுவும் இல்லை. ஆனால் அவன் மிகவும் நேசித்து ஆசையுடன் மணந்திருந்த மனைவியை தன்னுடைய வஞ்சத்தின் முலம் அழித்து விட்டான் ஒரு அரக்கன். அவளைக் காண முடியாமல் தவிக்கும் எங்களுடைய நண்பனுக்கு அவளை மீண்டும் உயிர் பிறப்பித்தக் கொடுக்க முடியுமானால் அதையே மிகவும் மகிழ்சியோடு அவன் ஏற்பான் எனக் கருதுகின்றோம்' என்றனர்.

அதைக் கேட்டு சிரித்த அந்த நாகலோக மன்னன் 'குழந்தாய் உன் மனதில் ஓடும் எண்ண அலைகளை நான் நன்கு உணர்ந்தேன். இறந்தவளைத் திரும்பக் கொண்டு வர இயலாது. ஆனால் என் தவ வலிமையால் அவளை ஒரு முறை உனக்குக் காட்டுகிறேன். அவளை நீ தொடக் கூடாது சம்மதமா? எனறவரிடம் ருதுத்வஜன் அதற்கு தான் மிகவும் ஆவலுடன் தயாராக இருப்பதாகத் தெரிவித்தான். சற்று நேரத்தில் அங்கு மறைத்து வைத்திருந்த மதாலஸையை அவன் முன் கொண்டு வந்து நிறுத்தினார் அவர். இருவரின் கண்களிலும் கண்ணீர் பெருகி ஓழுயது. அழுதனர். ஆனால் தொடக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்ததினால் இருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவள் சிறிது நேரத்தில் மறைந்து போய் விட்டாள் . அவள் நினைவோடு வருத்தமாக அமர்ந்து விட்டான் ருதுத்வஜன். சற்று நேரம் அப்படிப்பட்ட நிலையில் இருந்தவன் தன்னுடையத் தோள்களை எவரோ தொடுவதைப் போல் உணர்ந்து திரும்பினான். அவனுடைய நண்பர்களின் தந்தை அங்கே நின்றிருந்தவாறு அவன் தோள்பட்டையை வருடியபடிக் கூறினார் 'குழந்தாய், எதற்கும் கவலைப் படாதே, உனக்கு உன் மனைவி திரும்பக் கிடைப்பாள். அதற்கு முன் இந்தக் கதையைக் கேள் என்று கூறிவிட்டு, தன்னுடைய மகன்கள் இருவரும் அவனுடன் சினேகமான துவக்கத்தில் இருந்து, அவனுக்காக எப்படி அவர்கள் தன்னிடம் வந்து அவன் மனைவி மீண்டும்

கிடைக்க வழி கூறுமாறு வேண்டினர் என்பதையும், தான் எப்படி தன் சகோதரனை உயிர் பிழைக்க வைத்து இருவரும் சிவபெருமானிடம் சென்று அவரிடம் இருந்து வரம் பெற்று மதாலஸையை உயிர் பிழைக்க வைத்தனர் என்பதை விவரமாக எடுத்து உரைத்தார். ஆனாலும் சில சாபங்களின் காரணமாகவே அவனை சற்று நேரம் சோகத்தில் ஆழ்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்று கூறிய பின் மதாலஸாவை அவனிடம் சேர்த்து வைத்து இருவரையும் மகிர்ச்சியுடன் இருக்குமாறு ஆசி கூறி விட்டு அவர்களை மீண்டும் பூவுலகிற்கு அனுப்பி வைத்தார்.

மனைவியுடன் நாடு திரும்பிய புதல்வன் கூறிய அனைத்துச் செய்திகளையும் கேட்ட அரச குடும்பத்தினர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர். காலம் ஓடியது. சத்ருஜித் மரணம் அடைந்தான். அவன் புதல்வன் ருதுத்வஜித் அரியணை ஏறி ஆட்சி செலுத்தலானான். பொறுப்பு ஏற்ற ருதுத்வஜனும் தன் தந்தைப் போலவே நல்லாட்சி நடத்தி வரலானான். இன்னமும் பல காலம் உருண்டது. மதாலஸை கர்பமுற்று அழகிய ஆண் மகனைப் பெற்று எடுத்தாள். பெயர் வைக்கும் விழாவில் அந்தக் குழந்தைக்கு நல்ல ஒரு பெயரை அரசன் சூட்டினான். ஆனால் அந்த அந்த அரச சபையின் விழாவில் அவன் குழந்தைக்குப் பெயரிட்டதும் உடனேயே மதாலஸை ஒரு கிண்டல் பார்வைப் பார்த்தபடிச் சிரித்தாள். சபையில் மற்ற எவரும் அப்படிச் செய்தால் அது அவமானமாக கருதப்படும். ஆனால் சிரித்ததோ இராணி என்பதால் அனைவரும் அமைதியாக இருந்தனர். மன்னனும் அதை பெரியதாகக் கருதாமல் விட்டுவிட்டது அல்லாமல் அவளிடம் அது குறித்துக் கேட்கவும் இல்லை. அந்தக் குழந்தையும் நல்ல பண்போடு வளர்ந்தது மட்டும் இன்றி அதி புத்திசாலியாகவும் திகழ்ந்தது. அந்தக் குழந்தையை வளர்த்த நேரங்களில் மதாலஸை பல தத்துவப் பாடல்களைப் பாடி துாங்க வைப்பாள். அந்தப் பாடல்கள் அனைத்துமே, இந்த பாழாய் போன பூமியில் ஏன் பிறந்தாய் என்றும், உலகமே ஒரு மாயை, அதில் பற்றற்று இருக்க

வேண்டும் என்ற கருத்துக்களை உள்ளடக்கியே இருந்தன. சில நாட்கள் அதை கவனித்த மன்னன் குர்ந்தைக்குப் போய் ஏன் அவள் தத்துவப் பாடல்களைப் பாடி உறங்க வைக்கிறாள், அதற்கு அந்த வயதில் என்ன புரியும் என வியந்தது உண்டு. அவள் தனக்குத் தெரிந்ததைதானே பாடுவாள் என்று எண்ணிக் கொண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்து வந்தான். ஆனால் சிறு சலசலப்பைத் தோற்றுவிக்கும் வண்ணம் அந்தக் குழந்தை பன்னிரண்டு வயதானதும் பெற்றோர்களை விட்டு விலகி காட்டுக்குச் சென்று துறவறத்தில் தன்னை இணைத்துக் கொண்டு விட்டது. அதைக் கண்ட மன்னன் ஆடிப் போனான். மதாலஸையோ ஒன்றுமே நடக்காதது போல கவலை இன்றி இருந்தாள். அவள் எந்தப் பதற்றமும் அடையவில்லை. மன்னனால் இராணியின் போக்கைப் புரிந்து டிகாள்ள முடியவில்லை.

இன்னமும் காலம் ஓடிற்று. மதாலஸை மீண்டும் கர்பம் தரித்து இன்னொரு ஆண் மகனைப் பெற்றாள். அதற்கு பெயர் சூட்டும் தருமணத்திலும் மதாலஸையின் கேலிச் சிரிப்பு தொடர்ந்தது. அந்தக் குழந்தையை வளர்த்த நேரங்களிலும் மதாலஸை பாடிய பாடல்கள் பழையபடியே இந்த பாழாய் போன பூமியில் ஏன் பிறந்தாய் என்றும், உலகமே ஒரு மாயை, அதில் பற்றற்று இருக்க வேண்டும் என்ற கருத்துக்களையே உள்ளடக்கி இருந்தன. சில நாட்கள் அதை கவனித்த மன்னன் இந்தக் குழந்தைக்கும் ஏன் அவள் தத்துவப் பாடல்களையே பாடி உறங்க வைக்கிறாள், அதற்கும் அந்த வயதில் என்ன புரியும் என எண்ணினான். அவளிடம் அது குறித்துக் கேட்க எண்ணினான். ஆனாலும் இனம் புரியாத எதோ ஒரு காரணத்தினால் அவளிடம் அது குறித்துக் கேட்பதைத் தவிர்தான். இன்னும் சில நாட்கள் கழியட்டும் என இருந்தான். அந்தக் குழந்தையஜம் அதி புத்திசாலியாக வளர்ந்து வயதுக்கு வந்ததும் பெற்றோர்களை விட்டு விலகிக் காட்டிற்கு சென்று விட்டது.

மன்னன் உடைந்து போனான், மாறாக மதாலஸையோ அப்போதும் கவலையுற்றே இருந்தாள். அந்த நிலையிலும் ஆச்சரியப்படும் வகையில் கணவனை மகிழவிப்பதிலோ, இல்லை அவருக்கு பணிவிடை செய்வதிலோ எந்த குறையும் அவள் வைக்கவில்லை. அவனுடன் இருக்கும் நேரங்களில் மிகவும் மகிழ்சியுடன் கூத்தாடிக் கொண்டுதான் இருப்பாள். ஆனால் அந்த நேரங்களைத் தவிற பிற நேரங்களில் எவருடனும் பேசாமல் கற்சிலைப் போலவே தனியாக அமர்ந்து கொண்டு யோசனை செய்தபடி இருப்பாள். அவளை அரசனால் மட:டும் அல்ல மற்றவர்களினாலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

மூன்றாம் முறையாக மதாலஸை கர்பமுற்றாள். இப்போதாவது நிலைமை மாறும் என காத்திருந்த மன்னன் முன்பு போலவே பெயர் சூட்டும் தருமணத்தில் மீண்டும் மதாலஸை கேலியாக சிரிப்பதைக் கண்டான். அந்தக் குழந்தைக்கும் முன்பு மற்றக் குழந்தைகளுக்கு பாடியது போலவே தத்துவப் பாடல்களை பாடி வளர்த்தாள். அதுவும் அதி புத்திசாலியாக இருந்தவண்ணம் வயதுக்கு வந்ததும் பெற்றோர்களை விட்டு விலகி காட்டிற்கு சென்று விட்டது என நிகழ்சிகள் தொடர அவன் மனம் வருத்தம் அடைந்தது. எவருக்கும் புரியாதப் புதிராகவே மதாலஸை விளங்கினாள். மன்னன் தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்தான். அவன் எண்ணியபடியே நான்காம் முறையும் மதாலஸை கர்பமுற்று ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றாள்.

பெயர் வைக்கும் விழாவில் இம்முறை ஒரு மாறுதலுக்காக தன் மனைவியை நோக்கி அந்தக் குழந்தைக்கு ஒரு பெயர் வைக்குமாறு கூறினான். அவள் பெயர் வைத்தாவலாவது தன் மகன் உருப்படியாக நாட்டை ஆளுவான் என நம்பியே அப்படி செய்தான். அந்தோ பரிதாபம் முந்தைய எல்லா

நிகழ்சிகளையும் தோற்கடிக்கும் விதத்தில் அனைவரும் கேலி செய்யும் வகையில் அவள் அந்தக் குழந்தைக்கு அலர்கன் எனப் பெயர் சூட்டினாள். அலர்கன் என்றால் வெறி நாய் என்று அர்த்தம். மன்னன் அவமானத்தில் புழுங்கினான். அனைவரும் வெறுப்புடன் எழுந்து சென்று விட்டனர்.

முதன் முறையாக அன்றுதான் அரசன் தன் மனைவியிடம் சற்றுக் கோபத்துடன் பேசினான். ‘எதற்காக குழந்தையின் பெயரை வெறி நாய் என்ற பொருள் தரும்படி வைத்தாய் , ஏன் ஒவ்ஒரு முறையும் நான் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டிய பொழுது சபை நடுவே சிரித்து என்னை அவமானப் படுத்தினாய், இதனால் உனக்கு என்ன மன மகிழ்ச்சி கிடைத்தது, எனக் கோபமாகக் கேட்டான். அவள் சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு மிகவும் சாந்தமாகக் கூறினாள் ‘மன்னா ஒவ்ஒரு முறையும் நீங்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைத்த பொழுது உங்களை அவமதிக்க வேண்டும் என்று எண்ணி நான் சிரிக்கவில்லை. ஒரு முறையும் நீங்கள் குழுந்தைகளுக்குப் பெயர் வைத்த பொழுது நான் நினைத்தேன் இது என்ன பெயர், இதன் அர்த்தம் என்ன, பெயர் வைத்தது குழந்தையின் உடலுக்கா, இல்லை அதனுள் உள்ள ஆத்மாவிற்கா?

உடல் அழியக் கூடியது, ஆனால் ஆத்மாவிற்கோ அழிவில்லை. ஆத்மா உடலை விட்டு வெளியேறிய பின் அது எங்கே போகும் என எவருக்காவதுத் தெரியுமா, இல்லை அது தன்னுடன் தன் பெயரையும் கொண்டு செல்லுமா, வைத்தப் பெயருக்கும் அது வாழும் முறைக்கும் எதுவும் சம்மந்தம் இருக்கின்றதா, இந்திரன் எனப் பெயர் வைத்தால், இந்திரனைப் போல குணத்தைக் கொண்டுதான் நடக்கிறதா? ஒவ்ஒருவரும் அத்தனை சாஸ்திரோதயமாக மந்திரம் ஓதி வைக்கும் ழுபயர் ஒரு அடையாளத்துக்குத்தானே. அதற்காக இப்படி கஷ்டப்பட்டு ஒவ் ஒருவரும் தத்தம் குழந்தைகளுக்கு வைக்கும் பெயருக்கும் அவர்கள் தங்களுடைய

வாழ்க்கையில் நடந்து கொள்ளும் முறைகளுக்கும், வாழும் வாழ்க்கைக்கும் எந்த விதமான சம்மந்தமும் இன்றி இருக்கும் பொழுது, இதற்கு என்ன வைபவம், இதற்கு ஏன் முக்கியத்துவம? தங்களுக்கு வைத்தப் பெயருடன் எந்த வித பந்தமும் இன்றி வாழும் உயிர்களுக்கு மிகவும் யோசனை செய்து பொருளற்ற பெயர்களில் பெயரிட்டுக் கொண்டிருந்த சடங்குகளை குறித்து யோசித்தேன். என்ன பைத்தியக்காரத்தனமான சடங்குகள் இவை என எண்ணினேன். சிரிப்பு வந்தது, சிரித்தேன். அதனால்தான் நான்காம் குழந்தைக்குப் பெயர் வைக்குமாறு என்னிடம் கோரிய பொழுது, இத்தனை முறையும் பெயர்களுக்கும் வாழ்க்கைக்கும் சம்மந்தம் இல்லாமல் இருக்கும் விதத்தில் வளரப் போகும் குழந்தைகளுக்கு பெயர் வைத்து விட்டு, அது அழைப்பதற்காக வைக்கப்பட்ட பெயர் என்று கூறும் பொழுது, நானும் அழைப்பதற்காக மட்டுமே இருக்கட்டும் என்று பந்தமும் பொருளும் அற்ற அல்ர்கன் என்ற பெயரை வைத்ததை ஏன் உங்கள் மனம் ஏற்க மறுக்கின்றது?

அரசி கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தொடுக்க அவனால் பதில் எதுவும் கூற முடியவில்லை. மனதிலே என்ன நினைத்து இப்படிக் கூறுகிறாள் எனத் தெரியாத பொழுது என்ன செய்வது, சற்று நேரம் இப்படியாக தொடர்ந்து கொண்டிருந்தன அவர்களுடைய சம்பாஷணைகள். முடிவாக மன்னன் அவளிடம் ஒரு வேண்டுகோள் வைத்தான். ‘ஆனது ஆகட்டும். முதல் மூன்று குழந்தைகளுக்கும் தத்துவப் பொருட்களை உள்ளடிக்கிப் பாடி, தாலாட்டி அவர்களுக்கு புத்திமதி கூறும் விதத்தில் பாடிய நீயோ அந்த போதனைகளில் எவற்றிலுமே தான் பூமியில் பிறந்ததற்கான கடமைகளை செய்ய வேண்டும் என்ற கருத்தினை உள்ளடக்கிப் போதிக்கவில்லை. மாறாக பட்டற்று வாழ வேண்டிய வாழ்கையின் தத்துவங்களையே, வழி மார்கங்களை அவற்றின் மூலம் குழந்தைகளுக்கு போதித்து இருக்கின்றாய். ஆகவே இந்தக் குழந்தைக்காவது பூமியில் ஒரு அரச குடும்பத்தில் பிறந்து

விட்டதினால், மக்களுக்கு தான் ஆற்ற வேண்டிய கடமை என்ன என்ற உண்மையைக் கூறும் பாடல்களை மட்டும் பாடி வளர்க வேண்டும்.

அவற்றைக் கேட்ட மதாலஸை எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. முகத்தில் கோபமோ, வெறுப்போ, மகிழ்சியோ, எதையும் காட்டவில்லை. நான்காவதாகப் பிறந்த குழந்தையை பொறுப்புணர்ச்சி கொண்ட, கடமை உணர்வு கொண்டவனாக மாற்றுவதாகக் கூறினாள். அதற்கேற்ப அடுத்த நாள் முதல் அவனுக்கு உலகப் பற்றோடு வாழத் தேவையான மனதை வைத்திருக்கும் வகைக்கான பாடல்களைப் பாடியவண்ணம் வளர்த்தாள். நாட்கள் நகர்ந்தன. அல்ர்கன் சாத்திரம் படித்தான், அரசியல் அறிவு பெற்றான், படிப்படியாக இராஜாங்க சாத்திரம் முழுவதையும் தெரிந்து கொள்ளும் வகையில் பாடங்கள் பெற்றான். வளர்ந்து வந்தவன் வயதுக்கு வந்ததும் ருதுத்வஜன் அவனுக்கு திருமணம் செய்து வைத்தான். தன் முழு அரசு பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்து விட்டு மனைவியுடன் கானகம் சென்று விட்டான். தன் பெற்றோர்கள் தன்னை விட்டுப் போவதை அல்ர்கனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அழுதான். ஆனால் அவன் தாயார் அவன் கையில் ஒரு மோதிரத்தை அணிவித்துவிட்டுக் கூறினாள் 'அலர்க்கா, உன் கடமைகளை சரிவர செய்து கொண்டு இரு. பொது வாழ்கைக்கு வந்து விட்டவன் அனைத்து சோதனைகளையும் எதிர் கொள்ளத்தான் வேண்டும். என்றைக்கு உன்னால் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையை நீ அடைவாயோ, அன்றைக்கு இந்த மோதிரத்தை எடுத்து உற்றுப் பார்த்தால் உனக்கு ஒரு வரி கிடைக்கும். அது வரை இந்த மோதிரத்தை போட்டுக் கொண்டு இரு. உன்னால் சமாளிக்க முடியாத அளவு பிரச்சனை உள்ளவரை நான் கூறியதை நினைத்தும் பார்க்காதே.

அதைக் கூறிய பின் தன் கணவருடன் சேர்ந்து கானகம் சென்று விட்டாள். காலம் ஓடிற்று, அலர்கன் அனைத்தையும் மறந்தான். அரசு காரியங்களை

கவனித்தபடியும், தன் மனைவி மக்களின் இன்பங்களிலும் மூழ்கியபடிக் கிடந்தான். அப்பொழுது ஒருமுறை இளம் வயதிலேயே இல்லறத்தைத் துறந்துவிட்டு வனவாசம் செய்யச் சென்றிருந்த அலர்கனின் இரண்டாவது சகோதரன் அந்த நாட்டிற்குள் பிரவேசித்தான். தன்னுடைய இளையவன் அரசணையில் ஏறி உள்ளான் எனத் தெரிந்து கொண்டதும் மனித உணர்வுகள் சற்றே அவனைத் தாக்கின. என்னதான் யோகி என்றாலும் தனக்குப் பிறகுதான் மற்றவனுக்கு என்ற எண்ணம் வந்து விடுவது இயற்கை அல்லவா, தனக்கு பதில் தன் தம்பி சிம்மாசனத்தில் அமர்ந்து இருப்பதைக் கண்ட பின் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் காசியை அடைந்தான். அவனுக்குத் தெரியும் காசியின் மன்னன் தன் தம்பியின் மீது பொறாமைக் கொண்டவன். அவனிடம் சென்றவன் தான் உயிருடன் இருக்கையிலேயே தன்னுடைய இளைய சகோதரன் நாடாளுவதைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் அதனால் தனக்கு உதவி செய்து தன் தம்பியிடம் இருந்து இராஜ்யத்தைப் பறித்துத் தன்னிடம் தருமாறு வேண்டினான்.

அதி பராக்கிரமசாலி என்றாலும் தர்ம நெறிகளும், சாஸ்திரங்களும், யுத்த நெறி முறைகளையும் நன்கு கடை பிடித்து வந்தவன் காசியை ஆண்டு வந்த மன்னனீ. தன்னிடம் வந்து அலர்கன் மீது போர் தொடுத்து, அவன் இராஜ்யத்தைப் பறித்து தருமாறு உதவி கேட்டு வந்தவன் அலர்கனின் அண்ணனே என்றாலும், தான் அல்ர்கன் மீதுப் பொறாமைக் கொண்டிருந்தாலும் எந்த காரணத்தைக் கூறி அல்ர்கன் மீது படை எடுப்பது என குழம்பியபடி இருந்தான் காசி மன்னன். மன்னனின் குழப்பத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டான் அலர்கனின் இரண்டாவது சகோதரன். தினமும் மன்னனிடம் சென்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி அவனை உசுப்பி விட கடைசியில் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழி இன்றிப் போக முடிவாக அலர்கன் ஆண்டு வந்த நாட்டின் மீது படையெடுக்க முடிவெடுத்தான்.

பெரும் போர் மூண்டது. ஒவ்ஒரு இடமாக தோற்றுக் கொண்டே நாட்டின் பெரும் பகுதியை இழந்த அலர்கன் நிலை குலைந்துப் போய் அரண்மணை இருந்த கோட்டையின் கதவுகளை மூடிவிட்டு உள்ளுக்குள் இருந்தபடி போரிடலானான். கோட்டை முற்றுகைக்கு உட்பட்டது. நிலை குலைந்துப் போன அலர்கன் மனம் துயரத்தில் ஆழ்ந்தது. ஏதேச்சையாக தன் தாய் தனக்குக் கொடுத்த மோதிரம் நினைவுக்கு வர அதை எடுத்து உற்று நோக்கினான். அதில் எழுதப்பட்டு இருந்த வாசகங்கள் 'பற்றை நீக்க வேண்டும், முடியாவிடில் அதற்கு சீரியோர் உதவியை நாட வேண்டும்' அது மட்டும் இல்லாமல் அவன் தாயின் நினைவும் , அவள் அடிக்கடி கூறும் தத்தாத்திரேயர் மகிமைகளும் நினைவுக்கு வந்தன.

ஒரு நாள் எவரிடமும் கூறாமல் தன் ரகசிய சுரங்கப் பாதை மூலம் கோட்டையை விட்டு வெளியேறி தத்தாத்திரேயர் இருந்த சஞ்யாத்திரி மலையை அடைந்தான். அங்கு சென்று அவர் காலடியில் விழுந்து அழுதான். தத்தாத்திரேயர் அவனை எழுப்பி தேற்றலானார். அவருக்கு மதாலஸை யார் என்பதும், அவளுடைய மகனே அலர்கன் என்பதும் நன்கு தெரியும். அவர் கூறலானார், 'குழந்தாய் நீ என் இப்படி ஒன்றும் அற்ற விஷயத்திற்காக அழுது புலம்புகின்றாய? அலர்கன் தன்னுடைய சங்கடத்தை அவரிடம் எடுத்துக் கூறினான். தனக்கு உதவி செய்யுமாறு வேண்டினான். தத்தர் அவனுக்கு அறிவுறைக் கூறினார். "அலர்கா..நீ ஏன் ஒன்றும் அற்ற விஷயத்திற்காக அழுது புலம்புகின்றாய், ஒரு கணம் நினைத்துப் பார், நீ யார் , நீ …… நீயே அல்ல. உயிரற்ற ஜடமான உடலில் உழன்று கொண்டிருக்கும் ஆத்மாவே நீ என்ற உன் உள்ளே இருப்பது. நான் எனும் அந்த ஆத்மாவின் உருவம் என்ன , மரமா, மண்ணா, விண்ணா, காற்றா , என்ன உருவம் அதற்கு என்று நினைத்தப் பார்த்தாயா?, உன் ஜடமான உடலின் எந்த அங்கமாவது நீ என்ற அந்த ஆத்மாவை யார் என்று கூற

முடியுமா அல்லது எண்ணிப் பார்கத்தான் முடியுமா , நான் என்ற அந்த ஆத்மாவிற்கு துன்பம் இல்லை, துயரம் இல்லை, விருப்போ வெறுப்போ இல்லை. அது சுதந்திரமானது, தனித் தன்மையானது. நீ இப்போது இங்கு இருக்கின்றாயே, துன்பப் படுகிறாயே, எதற்காக, உன்னுள் உள்ள எந்த பந்த பாசங்களும், எவருக்கும் கட்டப்படாமல் உள்ள ஆத்மாவிற்காகவா, இல்லை ஜடமான உடலுக்கா? அலர்க்கா இந்த உலகம் எத்தனை விசித்திரமானதோ அது போலத்தான் நம்முள் உள்ள இதயமும் விசித்திரமாக நடக்கும். சாதாரணமாக இருந்த இதயம் உலகின் மீது பற்றுக் கொள்ளத் துவங்கியதுமே மமதையால் சூழப்பட ஆரம்பிக்கின்றது. பிறகு ஆசைத் தோன்றத் தோன்ற இல்லறம், சன்தானங்கள் எனத் தோன்ற ஆரம்பிக்க அது அப்படியே வளரத் துவங்குகின்றது. மற்றவர்கள் சேர்க்கையே ஒருவன் மனதை அலை பாய விடுகின்றது. அது துக்கத்தையும் தருகின்றது. ஆகவே அந்த மாதிரியான சேர்கைகளை விலக்க வேண்டும். அது மமதையை நீக்கும். அப்போதுதான் யோகம் சித்திக்கும். யோகம் சித்தித்தால் அலை பாயும் மனது கட்டுப் பட்டு விடும். மனம் ஸ்திரப்படும். மனதை ஸ்திரமாக வைத்துக் கொள்ளப் பழகி விட்டால் சஞ்சல பாபம் விலகி வைராக்கியம் வரும். வைராக்கியம் வந்தால் பார்க்கும் பொருட்களில் குறைகள் தோன்றத் துவங்கும். குறைகள் தோன்றத் தோன்ற அந்தப் பொருட்கள் மீதான நாட்டமும் குறையத் துவங்கும். அந்த நிலைத் தொடரும் பொழுது முக்தி கிடைக்கும். ஒருவன் ஞானியாகத் துவங்குகின்றான்”.

அலர்கன் அமைதியாக கேட்டுக் கொண்டு இருக்க தத்தாத்திரேயர் தொடர்ந்து கூறலானார். “ஞானியானவனுக்கு எங்கு இருக்கின்றோமோ அதுவே தன் வீடு, என்ன கிடைக்கின்றதோ அதுவே உணவு, எங்கிருக்கின்றோமோ அதுவே தன் உலகம் என மனம் பற்றற்ற நிலைக்குச் சென்று விடும். எந்த உலகப் பொருட்களிலும் பற்று இருக்காது. இதை எல்லாம் எளிதில்

அடைய முடியாது. முதலில் கடினமாக தோன்றும் இந்த பாதையில் செல்ல வேண்டும் எனில் இதை ஒரு குருவின் தீட்சைப் பெற்றே துவங்க வேண்டும். மனப்புலன்களை அடக்க முயல வேண்டும். குரு கொடுக்கும் ஞான மார்கத்தைக் கடை பிடிக்க வேண்டும். அவர் எதிரே அமர்ந்து கொண்டு அப்பியாசம் செய்து, மூச்சை அடக்கி, பிராணாயம் முதலியன செய்த வண்ணம் தியான மார்கத்தை அடைந்து அதில் முழுமையாக தன்னை இணைத்துக் கொண்ட பின்னரே சமாதி நிலையை அடைகின்றான். அப்போது பல சித்திகளைக் கை கொள்ளும் வாய்ப்புத் தோன்றும். அதை முறை கேடாகப் பயன் படுத்தாமல், மனதை நழுவ விட்டுவிடாமல் இருந்தால் யோகம் தானே சித்திக்கும். அதற்குத் தேவை விடா முயற்சி, தொடர்ந்து விடா முயற்சி செய்ய வேண்டும். அதற்கு உதாரணமான எறும்புக்களைப் பார், அவற்றிற்கு எத்தனை சிறிய வாய் இருக்க வேண்டும். ஆனால் அவைகள் வசிக்கும் இடத்தைப் பார்த்தாயா, அத்தனை சிறிய ஜீவன்கள் எத்தனைப் பெரிய பொந்தில் வசிக்கின்றன. மரத்தைப் பார், அதில் உள்ள இலைகளையும், பழங்களையும் பறிக்கப் பறிக்க அவைகள் மீண்டும் மீண்டும் அவற்றை வளர விட்டபடி வளர்ந்துதான் வருகின்றன. இலைகளைப் பறித்து விட்டானே என அவை சோர்ந்து அமர்ந்து விடவில்லை. மீண்டும், மீண்டும் அதை உற்பத்தி செய்ய மரம் சளைப்பது இல்லை. அப்படித்தான் விடா முயற்சியுடன் யோகப்பியாசனம் செய்பவன் யோகி ஆகிறான். அனைத்துப் புலன்களை தனக்குள் அடக்கி வைத்துக் கொள்கின்றான். இப்படியாக தன் புலன்களை அடக்கி மனதைக் கட்டுப் படுத்திக் கொள்ளும் பொழுதுதான் நான், எனது என்ற மமதையும் அகங்காரமும் நீங்கும். அது நீங்கினாலே மனம் நிம்மதி பெறும்”

இப்படியாகப் பல்வேறு உதாரணங்களைக் காட்டி தத்தாத்திரேயர் உபதேசிக்கத் துவங்கியதுமே தன் மனம் அமைதி அடையத் துவங்கியதை உணர்ந்தான் அலர்கன். எத்தனை பேதையாக இருந்திருக்கின்றேன் நான்

என எண்ணியவாறே தத்தரின் காலடியில் விழுந்து மீண்டும் வணங்கினான். "ஸ்வாமி நான் இன்றுதான் இருட்டில் இருந்து வெளியே வந்து வெளிச்சத்தை நோக்குகின்றேன். என் அஞ்ஞானம் அழிந்தது. உள்ளத்தில் யோகம் என்ற செடியை துளிர் விடச் செய்து இருக்கின்றீர்கள். என் மனம் அமைதி பெற்றது... அமைதி பெற்றது" என்று கூறிய பின்னர் தத்தர் மீது பல்வேறு தோத்திரங்கள் பாடி , அவரைத் துதிக்கும் பல பாடல்களைப் பாடிவிட்டு அவரிடம் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் சுரங்கப் பாதை வரியாக தன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். அனைவரையும் அழைத்தான். அவர்களிடம் கூறினான். "இனி இந்தப் போர் தொடரப் போவது இல்லை. முடிவுக்குக் கொண்டு வந்து விட்டேன். எது நடக்குமோ அது நடக்கும் என்பதை நினைவில் கொண்டு நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருங்கள். இனி நான் மீண்டும் கூறும் வரை ஆயுதங்களைப் பயன் படுத்தாதீர்கள்" என்று தன் படையினருக்குக் கட்டளை இட்ட பின் அரண்மனையை விட்டு தான் மட்டும் தனியாக வெளியேறினான்.

தன் மீது படையெடுத்து அரண்மனையை முற்றுகை இட்டபடி நின்றிருந்த காசி மன்னன் முன் திடுதிடுப்பெனச் சென்று கூறினான், காசி ராஜனே போ, போய் என் அரசை நீயே எடுத்துக் கொள் இல்லை எனில் என் சகோதரனுக்குக் கொடு. அது உன் விருப்பம். நான் நாட்டை விட்டு வெளியேறுகிறேன். இத்தனை நாட்கள் ஆகியும் கோட்டையில் இருந்து எந்த வித எதிர்ப்புமே காணப்படவில்லையே, ஒற்றர்களும் அரசன் கோட்டைக்கு உள்ளே இல்லை என்று கூறினார்களே, அப்படிப் பட்ட நிலையில், தர்மத்திற்கு விரோதமாக அரசன் இல்லாத பொழுது உள்ளே நுழைவது பாவம் என்று எண்ணியபடி மனக் குழப்பத்தில் இருந்த காசி ராஜன் தன் முன் வந்து நின்ற அலர்கனைப் பார்த்துக் கேட்டான் "திடீர் என உனக்கு என்ன ஆயிற்று , உயிருக்குப் பயந்து சரண் அடைந்து இப்படி

நடிக்கின்றாயா, இல்லை வேறு எந்த திட்டத்துடனும் வந்து நிற்கின்றாயா”, என வினவியதுமே கல கல என்று சிரித்தான் அலர்கன். “பயமா, எனக்கு எதற்கு இனி பயம் வர வேண்டும். என் மனது மிகத் தெளிவாகத்தான் உள்ளது ராஜனே. உள்ளது ஒரே உயிர். அதுவும் தனக்கு விதிக்கப்பட்ட கால வரம்பு முடிந்ததும் எப்பொழுது வேண்டுமானாலும் போகும். நீ வெளியே முற்றுகை இட்ட பொபுது நான் ரகசியமாக வெளியேறி தத்தாத்திரேய ஸ்வாமியை சந்தித்தேன். அவர் எனக்கு கொடுத்த ஞான உபதேசத்தினால்தான் இந்த மனமாற்றமே தவிற எனக்கு உன்னிடமோ, வேறு எவரிடமோ இனி பயம் தேவை இல்லை. என் இந்த மன மாற்றத்திற்கு காரணமே நீயும் என் சகோதரனும்தான். உங்களுக்கு அதற்காக நான் நன்றி கூற வேண்டும். என் மீது தக்க சமயத்தில் படை எடுத்து என் படை பலத்தைக் பலவீனப் படுத்தி இராவிட்டால் என்னால் தத்தஸ்வாமியை சந்தித்து இருக்க முடியாது என்பதினால் மீண்டும் மீண்டும் உங்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்” என்று பதில் தந்தான் அலர்கன்.

அதைக் கேட்டுக் கொண்டு இருந்த அலர்கனின் சகோதரன் தன் குதிரையை விட்டு கீழே குதித்த பின் தன் தம்பியை அணைத்துக் கொண்டுக் கூறினான் ‘தம்பி, என் மனம் இன்றுதான் மிகவும் மகிழ்சியாக இருக்கிறது. நல்ல குருவைக் கண்டு பிடித்து துணையாக்கிக் கொண்டாய். நல் வழியில் சென்று விட்டாய்’ இப்படிக் கூறிய பின் காசிராஜனைப் பார்த்துக் கூறினான் ‘மன்னா நான் நினைத்த காரியம் நடந்து விட்டது. நீ எனக்கு உதவியதற்கு நன்றி மன்னவா, மிக்க நன்றி. இனி எவர் வேண்டுமானாலும் இந்த அரசை ஏற்றுக் கொண்டு நாடாளுங்கள்’ என்று கூறி விட்டு செல்லத் துவங்கியவனை தடுத்து நிறுத்தினான் காசி ராஜன். ‘அன்புச் சகோதரனே, இது என்ன கூத்து, உனக்காக ராஜ்யத்தைப் பறித்துத் தர நான் இங்கு படை எடுத்து வந்தால் உன் சகோதரனும் ராஜ்யத்தை வேண்டாம் என்கிறான், நீயும் அதை ஏற்க

மறுக்கிறாய். இங்கு என்ன நடக்கிறது இப்போது, என் மூளையைப் போட்டு ஏன் குழப்புகின்றிர்களா? என்று கேட்டான். அலர்கனின் சகோதரன் கூறினான் “காசி ராஜா நல்ல கேள்வி கேட்டாய் அப்பனே, நல்ல கேள்விதான் இது. உனக்கு அதன் காரணத்தை விளக்குகிறேன் கேள்.

எங்களுடைய தாயார் உடலளவில் மட்டுமே எங்களுடைய தந்தை ருதுத்வஜனின் மனைவியே தவிற அவள் ஒரு யோக மாதா ஆவாள். விதிப்படி என் தந்தையின் மனைவியாக மாற வேண்டிய கட்டாயம் இருந்தது அவளுக்கு. அவள் மூலம் நாங்கள் நால்வர் பிறந்தோம். அவள் யோகமாதா என்பதினால் எங்களுக்கு உலக ஆசையைத் துறந்து இல்லறத்தை விட்டு விலகி பரமானந்தத்தை அனுபவிக்கும் வகையில் செல்லும் வகைக்கான அறிவு புகட்டினாள். ஆனால் துரதிஷ்டவசமாக என் கடைசி சகோதரனுக்கோ உலகப் பற்றுடன் கூடிய வாழ்வை வாழும்படியான அறிவு புகட்டும்படி கட்டாயம் ஏற்பட்டது. அவனும் இல்லற சுகமே பெரும் சுகமென வாழ்ந்து வந்தான். அந்த சமயத்தில் இங்கு வந்த நான் அதைக் கண்டு கவலையுற்றேன். ஒரு யோகேஸ்வரியின் வயிற்றில் பிறந்த என் சகோதரன் இப்படி காட்டு மிருகம் போல சல்லாபத்தில் முழ்கிக் கிடப்பது அந்த உத்தம யோகேஸ்வரிக்கு அல்லவோ மகா பாபம் என்று எண்ணியே உன் உதவியை நாடி அவனை மீண்டும் யோக வாழ்க்கைக்கு மீட்டுக் கொண்டு வர முயன்றேன். அதற்கு ஒரே வழி அவனை முதலில் துக்கப்படுத்தி, தனிமைப் படுத்தி, மனம் மற்றும் உடல் வலிமையையும் இழக்க வைக்க வேண்டும் என்பதே. அதை செய்ததும் நான் விரும்பியது நிறைவேறிவிட்டது. என் கடமையும் முடிந்து விட்டது” என்றான்.

காசிராஜனும் தான் இத்தனை நாட்களும் எப்படி இப்படி ஒரு உன்னத வாழ்க்கையை தெரிந்து கொள்ளாமல் இருந்து விட்டேன் என வருந்தி, அந்த ராஜியத்தை அலர்கனின் வம்சமே ஆளட்டும் என்று கூறிவிட்டு தன்

இராஜ்யத்திற்குத் திரும்பச் சென்று விட அலர்கனும் தன் ராஜயத்தை தன் பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டு தன் சகோதரனுடன் கானகம் சென்று விட்டான். இப்படியாக அலர்கன் என்பவனின் கதை மூலம் எப்படியான பாக்கியத்தை தன்னை நாடி வரும் பக்தர்களுக்குத் தத்தர் தந்து கொண்டு அவர்களை நல்வழியில் அழைத்துச் செல்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

### *விஷ்ணுதத்தரும் தத்தாத்திரேயரும்*

முன்னொரு காலம். விஷ்ணுதத்தன் என்ற ஒரு நல்ல அந்தணன் தன் மனைவியுடன் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டு இருந்தான். வேத ஒழுக்கங்களை கடை பிடித்த வண்ணம் மனதில் கடவுள் பக்தி நிறையவே கொண்டு வாழ்ந்து வந்தவன். அவனுடைய நல்ல நடத்தையைக் கண்டு அனைவரும் அவனிடம் பெரிதும் மரியாதை கொண்டு இருந்தனர். அவன் வீட்டுக்கு அருகில் ஒரு புளிய மரம் இருந்தது. புளிய மரங்கள் பேய், பிசாசுகள் வசிக்கும் என்று நம்புவார்கள். அது உண்மை என்பது போல அந்த மரத்திலும் ஒரு பிசாசு வசித்து வந்தது. தினமும் பூஜை புனஸ்காரங்களை முடித்த பின் விஷ்ணுதத்தன் அங்கு வந்து நைவத்தியம் செய்த அன்னத்தில் சிறிது அன்னத்தை எதாவது பிராணிகள் சாப்பிடட்டும் என்று எண்ணியபடி அந்த மரத்தின் அடியில் கொண்டு வந்து வைத்தப் பின்னர் உணவு அருந்துவது வழக்கம். தினமும் நடக்கும் ஒரு நியமம் அது. அந்த மரத்தின் கீழ் அவன் கொண்டு வந்து வைக்கும் அன்னத்தை அவன் சென்ற பின் புளிய மரத்தில் இருந்த அந்த பிசாசு வந்து சாப்பிட்டு விடும். ஆனால் விஷ்ணுதத்தனுக்கு தான் வைத்து விட்டுப் போகும் உணவை பிசாசுதான் சாப்பிடுகின்றது என்ற விவரம் தெரியாது. விஷ்ணுதத்தன் கொடுத்து வந்த உணவினால் அவனுக்கு அது எந்தக் கெடுதலையும் செய்வது இல்லை. ஆனால் மற்றவர்களுக்கு அது நிறைய தொல்லைகளைக் கொடுத்து வந்தது. நாட்கள் செல்லச் செல்ல விஷ்ணதத்தனன் கொடுத்த உணவை அருந்திய அதற்கும் அவனைப் போலவே நல்ல குணங்கள்

தோன்றலாயின. தான் பிறருக்கு கொடுக்கும் தொல்லைகள் தவறு எனத் தோன்றியது. தான் செய்து வந்த தீய காரியத்தை விட்டு விட்டது மட்டும் அல்ல தனக்கு உணவு தந்து வரும் விஷ்ணுதத்தனுக்கு எதாவது உதவி செய்ய வேண்டும் என நினைத்தது.

தானோ ஒரு பிசாசு, எப்படி செய்வது, பல நாட்கள் அது பற்றி யோசித்த பின் ஒரு நாள் மனதில் தைரியத்தை வரவழித்துக் கொண்டு உணவு கொண்டு வந்து அந்த மரத்தின் கீழ் வைத்துக் கொண்டு இருந்த விஷ்ணுதத்தனன் முன் திடீர் என்று சென்று தன் உருவத்தைக் காட்டியபடி நின்றது. அது மட்டும் அல்ல விஷ்ணுதத்தனன் சுதாகரித்துக் கொள்ளும் முன்பே அவனிடம் 'ஐயா உனக்கு என்ன உதவி வேண்டும், என்னிடம் கேள். செய்கிறேன்' என்றது. விஷ்நுதத்தனுக்கு ஒரே வியப்பு. ஒரு பிசாசு வந்து நம்மிடம் வந்து என்ன வேண்டும் கேள் என்று கூறுகின்றதே. ஆச்சரியத்தில் நின்றவனிடம் மீண்டும் கூறியது அது 'பயப்படாதே அந்தணா, நான் உன் உப்பைத் தின்று வளர்ந்தவன். உன்னை எதுவும் செய்து விட மாட்டேன். இது சத்தியம். உனக்கு என்ன வேண்டும் என்று கேள். என்னால் முடிந்தவறை அதை நிறைவேற்றித் தருகின்றேன்'

பிசாசு இத்தனைக் கூறுகின்றதே. சத்தியம் வேறு செய்கிறதே. உண்மையாக இருக்குமா, சரி உண்மையோ, பொய்யோ, அதனிடம் என்ன வரம் கேட்பது, இப்படியாக எண்ணியவாறு தன் மனைவியுடன் அது குறித்து கேட்டு ஆலோசித்தப் பின் மறுநாள் தனக்கு என்ன தேவை என்று வந்து வுறுவதாக சொல்லி விட்டுச் சென்றான். இரவு முழுவதும் அவனும் அவனுடைய மனைவியும் அது குறித்து ஆலோசித்தனர். அவர்களுக்கு நெடு நாட்களாக மனதில் ஒரு ஆசை இருந்தது. தாங்கள் வசிக்கும் பகுதியின் எங்கேயோ ஒரு இடத்தில்தான் தத்தாத்திரேயர் இருப்பதாகக் கேள்விப்பட்டு இருந்தனர். மாபெரும் யோகியான அவரை சந்தித்து ஆசி பெற பலமுறை முயன்றும்

பல்வேறு இடங்கள் சென்றும் இன்று வரை அவரை பார்க்க முடியவில்லை.

ஆகவே அந்த பிசாசின் உதவி பெற்று அவர் இருக்கும் இடத்துக்கு தங்களை அழைத்துச் செல்லும்படிக் கூறலாம் என முடிவு செய்தனர். மறுநாள் தன் எதிரில் மீண்டும் வந்து நின்ற பிசாசிடம் 'உன்னால் முடிந்தால் எனக்கு தத்தாத்திரேயரின் தரிசனம் கிடைக்க வழி சொல்ல முடியுமா. அந்த உதவி செய்தால் மட்டும் போதும். வேறு எதுவும் தேவை இல்லை' எனக் கேட்டார். தத்தர் பெயரைக் கேட்டதுமே பயந்து போய் அலறித் துடித்தது அந்தப் பிசாசு. 'அந்தணனே, என்னிடம் என்ன உதவி கேட்கிறாய், உன்னை இந்நாள் வரை புத்திசாலி என நான் நினைத்தேனே அதைத் தவறு என்று காட்டுவது போல என்னைப் போய் தத்தாத்திரேயரிடம் அரைத்துப் போவாயா என்று கேட்கின்றயே, அது நடக்கக் கூடிய காரியமா , என்னைப் போன்றவர்கள் அவர் எதிரில் போய் நிற்க முடியுமா என யோசித்தாயா, அவர் என்னை பொசுக்கி விட மாட்டாரா , போகட்டும் வேறு எதுவும் வேண்டுமானால் கேள் தருகிறேன்' என்றது. விஷ்ணுதத்தனுக்கு வேறு எதுவும் தேவை இல்லை என்றே தோன்றியது. வேதமுறைகளில் தங்களுடைய வாழகை அமைதியாக ஓழுக் கொண்டு இருக்கையில் லௌகீக வாழ்விற்கு என்ன வேண்டும் என்று எண்ணிய பின் 'பரவாயில்லை விட்டு விடு. நான் எதோ கேட்டு விட்டேன் என்பதால் அதை நிறைவேற்ற முடியவில்லையே என வருந்தாதே. நீ இப்படிக் கேட்டதே கூட எனக்கு எதோ உபகாரம் செய்து விட்டதாகவே நினைக்கின்றேன். ஆகவே மனம் வருந்தாமல் திரும்பச் செல். எங்களுக்கு வேறு எந்தத் தேவையுமே இனி இல்லை. எதோ தத்தாத்திரேயரைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அதனால்தான் கேட்டேன். விட்டு விடு' என்று வுறிவிட்டு வீட்டிற்குத் திரும்பச் செல்லத் துவங்கியவனை தடுத்து மீண்டும் அழைத்தது அந்தப் பேய். தனக்கு அத்தனை நாட்களும் உணவு தந்தவனுக்கு வாக்கு கொடுத்த பின் முடியாது

என்று திருப்பி அனுப்புவது தவறல்லவா என சங்கடப்பட்டுக் கூறியது ‘அந்தணனே, என்னால் முடியுமோ முடியாதோ பரவாய் இல்லை. நீ கேட்டு விட்டதினால் உனக்காக ஒரு காரியம் செய்கிறேன். எங்காவது தத்தாத்திரேயர் கண்களில் தென்பட்டால் அவர் இருக்கும் இடத்தைத் உடனே வந்து உனக்கு தெரிவிக்கின்றேன். ஆனால் அங்கு என்னால் வர முடியாது. துாரத்தில் இருந்து அவரை அடையாளம் காட்டுகிறேன். நீதான் அவரிடம் சென்று சரணடைய வேண்டும். ஒன்றை கவனித்தில் பதித்துக் கொள். தத்தாத்திரேயர் லேசில் காட்சி அளிக்க மாட்டார். அவரை அடையாளம் கண்டு கொள்வதும் எளிது அல்ல. அவர் ஒரு மாயாவி. எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் இருப்பார். ஆகவே புத்திசாலித்தனமாக நடந்து கொண்டு நீதான் அவரை பிடித்துக் கொள்ள வேண்டும்’ எனக் கூறிய பின் சென்று விட்டது. சரி நீண்ட நாட்களாக நம் மனதில் இருந்த ஆசை அதன் மூலமாவது நிறைவேறுகிறதா பார்க்கலாம் என்று எண்ணியவாறு விஷ்ணுதத்தனன் போய் விட்டான்.

சிறிது நாள் சென்றது. ஒரு நாள் அந்தப் பேய் விஷ்ணுதத்தனிடம் ஓடி வந்து உடனே தன்னுடன் வருமாறு கூப்பிட்டது. அதனுடன் சென்ற விஷ்ணுதத்தனிடம் சற்று துாரத்தில் இருந்த ஒரு இறைச்சிக் கடையைக் காட்டி ‘அதோ அங்கு செல், தத்தர் புலப்படுவார்’ என்று கூறிவிட்டு அங்கிருந்து ஓட்டம் எடுத்தது. விஷ்ணுதத்தனால் அந்த இறைச்சியின் நாற்றத்தை சகித்துக் கொள்ள இயலாமல் போயிற்று. அதனால் சற்று துாரத்தில் இருந்தே அங்கு நோக்கினான். சிலர் வந்து இறைச்சியை வாங்கிக் கொண்டு இருந்தனர். பின் வெகு நேரமாக ஒரு கந்தல் உடை உடுத்தியும் கண்கள் சிவப்பேறி நன்கு கள்ளைக் குடித்திருந்தவனுமான ஒருவன் மட்டும் அங்கேயே நின்று கொண்டிருந்ததைக் கண்ட விஷ்ணுதத்தன் அருவருப்புடன் இருக்கும் அவனா தத்தராக இருப்பார்.. சேச், சே .. நான் அந்த கேடு கெட்டப் பிசாசை நம்பி இப்படிப்பட்ட ஆசாரமற்ற இடங்களில்

வந்து நின்றது கூடப் பாவம் என மனதில் சந்தேகப்பட்ட வண்ணம் வெறித்துப் பார்த்துக் கொண்டு இருக்கயிலேயே, அவர் கண் எதிரிலேயே அந்த கந்தல் உடை உடுத்தி இருந்தவன் மறைந்து விட்டான். அடடா..... எங்கு போய் விட்டான் அந்த கந்தல் உடை உடுத்தி இருந்தவன் என்று நினைத்தவாறே அங்கும் இங்கும் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தவன் முன் வந்து நின்றது அந்தப் பிசாசு. 'அந்தணா நான் உனக்குக் முன்னரே கூறினேன் அல்லவா, தத்தர் ஒரு மாதிரியான ஆள், அவர் பக்தர்களைப் பரிட்சிக்க எந்த வேடத்திலும் வருவார் என. நீ இன்று உன் கண் முன் நின்றவரைக் கோட்டை விட்டு விட்டாயே. பரவாய் இல்லை. இன்னொரு சந்தர்பத்தைப் எதிர் பார்த்துக் காத்திருக்கலாம்' என்று சொல்லி விட்டு அது சென்று விட்டது. விஷ்ணுதத்தன் மனம் வருந்தி வீடு திரும்பினான்.

இன்னும் சில நாட்கள் கழிந்தன. அந்தப் பேய் திடீரென வந்து உடனே தன்னுடன் வருமாறு அவரை அழைத்தது. சாலையில் சில நாய்கள் குரைத்தபடி பின் தொடர்ந்து கொண்டிருக்க ஒரு பிச்சைக்காரன் துாரத்தில் சென்று கொண்டு இருந்தான். துாரத்தில் இருந்தவாறே அவனைக் காட்டிய பிசாசு, போ..போய் அவரைப் பிடித்துக் கொள் அவர்தான் தத்தாத்திரேயர' என்று கூறி விட்டு ஓடி விட விஷ்ணுதத்தனும் அந்தப் பிச்சைக்கரானிடம் முன் சென்று அவரை விழுந்து வணங்கினான். தன்னை வந்து வணங்கியவனை தன் கையில் இருந்த ஒரு கம்பியினால் அடித்தார். 'ஓடிப் போடா பரதேசிப் பயலே.... என்னை வந்து ஏன் தொந்தரவு செய்கின்றாய் என்றவாறு கத்திக் கொண்டே பயங்கரமாக அடிக்கலானார் அந்தப் பிச்சைக்காரர் உருவில் இருந்த தத்தர். ஐயோ என அலறிக் கொண்டு விபுந்த விஷ்ணுதத்தன் வலி பொறுக்க முடியாமல் போதுமடா சாமி அந்தப் பிசாசை நம்பிக் கொண்டு இங்கு வந்தால் முன் பின் தெரியாத இவன் என்ன ஏது என்று கேட்காமலேயே நம்மை இப்படி அடிக்கிறானே.. இனி வேண்டாம் இந்தப் பைத்தியக்காரத்தனம் என்று வலி தாள முழுயாமல்

கத்தியபடி வீட்டிற்கு ஓடி வந்து தன் மனைவியிடம் விவரம் கூறிய பின் ‘நமக்கு உள்ள மகிழ்சி போதும் அம்மா, இனி நாமும் முன் போலவே நம் பாடு உண்டு, நாம் உண்டு என்று இருந்து விடலாம். என்னால் இப்படி முன் பின் தெரியாத மூடர்களிடம் சென்று அடிவாங்க முடியாது’ என்று கூறி விட்டு வலி தாங்க முடியாமல் படுத்து உறங்கினர்.

இரவு நல்ல உறக்கம். அப்பொழுது விஷ்ணுதத்தக்கு மனதில் ஒரு துயரம் எழுந்தது. என்ன பைத்தியக்காரத்தனம் இது......ஒரு வேளை நான்தான் தவறு செய்து விட்டேனோ, இது என்ன பாழாய்ப் போன உடம்பு, அவன் அடித்ததும் ஏன் அடித்தாய் என்று கூடக் கேட்காமல் பேடிப் போல எழுந்து ஓடி வந்து விட்டேனே. ஒருவேளை அந்த நாடகமும் தத்தர் வேண்டும் என்றே போட்டாரோ , இன்னும் அடி பரவாய் இல்லை என்று கூறி விட்டு அவரைப் பின் தொடர்ந்து சென்று இருந்தால் ஒருவேளை தத்தரை சந்தித்து இருப்பேனோ?, என பலவாறு மனம் எண்ணியது. மறுநாள் காலை உணவு படைக்கும் நேரத்தில் மீண்டும் அந்த பிசாசு வந்தது. ‘அந்தணா என்ன காரியம் செய்து விட்டாய் நீ, தத்தரின் அத்தனை சமீபத்தில் சென்று கூட உன் புத்தியை உபயோகிக்காமல் அவர் அடித்ததும் பேடி போல ஓடி வந்து விட்டாயே. நான் எத்தனை முறைக் கூறினேன். தத்தர் தன்னிடம் வருபவர்களை நன்கு சோதித்த பின்தான் அவர்களுக்கு காட்சி தருவார் என்று. போகட்டும் நான் வாக்கு தந்தபடி கடைசியாக இன்னும் ஒரே ஒரு முறை அவரை அடையாளம் காட்டுகின்றேன். அதிலும் நீ அவரைப் பிடித்துக் கொள்ளாவிடில் உனக்கு தத்தரின் பாக்கியம் இல்லை என்றுதான் கருத வேண்டும’ எனக் கூறி விட்டுச் சென்று விட்டது.

இன்னும் சில நாட்கள் சென்றது. தினமும் அந்தப் பிசாசு வரும் என எதிர் பார்த்துக் காத்திருந்தார் விஷ்ணுதத்தன். ஒரு நாள் வழக்கம் போல வந்தது அந்தப் பிசாசு. சீக்கிரம் வா, உனக்கு அவரைக் காட்டுகின்றேன் எனக்

கூறிய பின் தன்னுடன் விஷ்ணுதத்தனை அழைத்துச் சென்றது. தூரத்தில் ஒரு பரதேசி போலத் தோற்றம் தந்து கொண்டிருந்தவன் இறந்து கிடந்த கழுதை ஒன்றின் இறைச்சிகளை எடுத்து பறவைகளுக்குப் போட்டபடியும் அந்த மிருகத்தின் தோலை உறித்துப் பக்குவப் படுத்திக் கொண்டும் இருந்ததைக் கண்டான் விஷ்ணுதத்தன். அதுவே தத்தர் என்று கூறி விட்டு ஓடி விட்டது அந்தப் பிசாசு. மனதில் திடம். என்ன வேண்டுமானாலும் வரட்டும் இன்று அவரை விடக் கூடாது என்ற தீர்மானத்துடன் அவன் எதிரே சென்று 'ஸ்வாமி சரணம்' என இரு முறைக் கூறினான். கூறிவிட்டு அவர் பாதங்களில் விழுந்து அவர் பாதங்களை கெட்டியாகப் பற்றிக் கொண்டான். தன் கால்களைப் பற்றிக் கொண்டு இருந்த அவனை எட்டி உதைத்தார். திரும்பத் திரும்ப வந்து தன் கால்களைப் பற்றிக் கொண்டு 'தத்தா சரணம், தத்தா சரணம் என கூறிக் கொண்டு இருந்தவனை எத்தனை வேகமாக அடித்தும், 'தத்தா தத்தா' எனக் கதறியவாறு அவர் கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருந்தபடி வலியைத் தாங்கிக் கொண்டு இருந்தான் விஷ்ணுதத்தன். 'எழுந்திரு மகனே உனக்கு என்ன வேண்டும்' என்ற இதமான வார்த்தைகள் மேல் இருந்து வர, வலிகள் மறைந்து போக அண்ணார்ந்து பார்த்த விஷ்ணுதத்தனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. அற்புதமான தோற்றத்தில் காட்சி தந்தபடி நின்று கொண்டு இருந்தார் தத்தாத்திரேயர்.

அவரைச் சுற்றி எந்த மிருகமும், நாய்களும் இல்லை. பன்னீர் பூக்களின் மணம் மூக்கைத் துளைத்தது. எழுந்தான் தேவா சரணம் , தேவா சரணம் எனக் கூறியவாறே மனம் திருப்தி தரும் அளவில் அவரை வலம் வந்த பின் அவர் எதிரில் வந்து நின்றான் விஷ்ணுதத்தன். பித்துப் பிடித்தவன் போல் அவரிடம் எதை எதையோ கூறிக் கொண்டு இருந்தவனை சாந்தப் படுத்தினார் தத்தர். உனக்கு என்ன வேண்டும் என மீண்டும் கேட்டார் தத்தர். சற்று நேரம் யோசித்தவன் வீட்டிற்கு சென்று மனைவியை கேட்டு விட்டு

சொல்கிறேன் எனக் கூறுவது மடத்தனம் என நினைத்தான். வந்தது வரட்டும் என முடிவாக அவரிடம் ஒரு வேண்டுகோளை வைத்து விட்டான். ஸ்வாமி நாளைக்கு என் தந்தைக்கு திவசம். நீங்கள் அங்கு வந்து உணவு அருந்த வேண்டும். ஸ்வாமி எந்த விதமான உணர்சிகளையும் காட்டாமல் சரி வருகிறேன் என்று கூறி விட்டார்.

பரம சந்தோஷம் விஷ்ணுதத்தனுக்கு. நம் வீட்டில் உணவு அருந்த தத்தர் வருகிறார் என்ற மகிழ்சி மேலிட வீட்டிற்கு ஓடிச் சென்று மனைவியிடம் அதைச் சொல்ல அவளும் பைத்தியம் பிடித்தவள் போல் ஆகி, அவருக்கு என்ன சமைக்கலாம், எப்படிப் பறிமாறலாம் என்றெல்லாம் எண்ணியவாறு மனக் கோட்டைகள் கட்டியபடி இரவு முழுவதும் துாங்காமல் கணவருடன் அது குறித்துப் பேசிக் கொண்டு இருந்தப் பின் உறங்கினர். மறுநாள் காலை, திவசம் முடிந்தது. சாப்பிட வருகின்றேன் என்பவர் வந்திருப்பாரா என பார்க்க வெளியே வந்தவன் முன் நின்றார் தத்தர் வந்து விட்டார் தத்த பகவான் என்ற மகிழ்சி மேலிட இலைப் போட்டுப் பறிமாற ஆயத்தம் ஆனவளிடம் தத்தாத்திரேயர் கேட்டார் ‘ஆமாம் திவசத்திற்கு சாப்பிட இரண்டு பிராமணணர்கள் வேண்டுமே , இன்னொரு பிராமணண் எங்கே? விஷ்ணுதத்தன் அதிர்ந்து போனான். இன்னொரு பிராமணரை இப்போது போய் எங்கு தேடுவது , எப்படி அழைப்பது, ‘இதோ மனைவியிடம் அவள் யாரைக் கூப்பிட்டு இருக்கின்றாள் எனக் கேட்டுச் சொல்கின்றேன’ எனறு உள்ளே சென்று மனைவியிடம் விவரம் கூற அவளும் ஒரு கணம் திகைப்புற்றாலும் வருவது வரட்டும் என எண்ணியவாறு கண்களை மூடியபடி சூரிய பகவானிடம் பிரார்தனை செய்தாள். அவரிடம் நீங்கள்தான் பிராம்ணணாக வந்து எங்கள் சங்கடத்தைத் தீர்க்க வேண்டும் என்று வேண்டினாள். கற்புக்கரசி அைைத்தால் செல்லாமல் இருக்க முடியாது என்பதால் அவள் முன் மற்றோரு பிராமணணாக வந்து நின்றார். அடடா, தத்தருடன் அமர்ந்து சாப்பிட நான் அல்லவா கொடுத்து வைத்து இருக்க வேண்டும் என மிகவும் மகிழ்ச்சியோடு

கூறியவர் உடனே சென்று இரண்டாவது பிராமணராக தத்தர் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

முதல் பரிட்சையில் தேறிவிட்டான் விஷ்ணுதத்தன், அடுத்த சோதனையைத் துவக்க வேண்டும் என எண்ணிய தத்தர் மீண்டும் கூறினார், 'கேட்க மறந்து விட்டேனே, விஷ்ணு இலையில் சாப்பிட யார் வருகிறார்கள்? மீண்டும் ஒரு குழப்பம். இம்முறையும் அவன் மனைவி சற்றும் தயங்காமல் அக்னி தேவனையே வேண்டிக் கொண்டாள். அவள் சமைத்த அடுப்பில் இருந்தே வெளி வந்த அக்னி பகவானிடம் தங்கள் சங்கடத்தைக் கூறவும் அவர் 'கரும்பு சாப்பிட கூலியா, தத்தாத்திரேயருடன் அமர்ந்து சாப்பிட வேண்டும் எனில் அதற்கு நான் அல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும், ஓன்றும் யோசிக்காதே நான் வந்து சாப்பிடுகின்றேன் என பிராமணண் உருவில் வந்து இலையில் அமர்ந்தார். தத்தர் முகத்தில் புன் சிரிப்பு. இப்படிப்பட்ட திவசமே நடந்தது இல்லை என்று கூறும்படி அமைந்தது அது. சாப்பிட்ட பின் மனம் மகிர்ந்த தத்தர் அவனுக்கு 'நீ நினைத்த காரியம் நிச்சயமாக நடைபெற உனக்கு ஒரு மந்திரோபதேசம் செய்கின்றேன்' எனக் கூறி விட்டு அவருக்கு ஒரு மந்திரம் சொல்லித் தந்த பின் அனைவரும் சென்று விட்டனர். அவர்கள் சென்ற பின்னரே தங்களுடைய சுயநிலைக்குத் திரும்பிய அந்த தம்பதியினர் அடைந்த மகிழசிக்கு எல்லையே இல்லை. இப்படியாக வேறு எந்த விதமான காரியமும் செய்யாமல் நற்பண்புகளுடன் மட்டுமே வார்ந்து கொண்டு தன் கர்மங்களை முறைப்படி செய்து கொண்டிருந்து, நல் புத்தியுடனும் தெய்வ நினைவுகளுடன் மட்டும் வாழ்ந்து கொண்டிருந்த அந்தத் தம்பதியினருக்கு தத்தரின் அருள் கிடைத்ததில் வியப்பு ஏது.

காலம் சென்று கொண்டு இருந்தது. தத்தரிடம் அத்தனை வரங்கள் பெற்று இருந்தும் விஷ்ணுதத்தனுக்கு இறுமாப்பில்லை, அந்தத் தம்பதியரின் நடத்தையிலும் எந்த மாற்றமும் இல்லை. அவரிடம் இருந்து கிடைத்த

வரத்தினையும் துஷ்பிரயோகம் செய்யவில்லை. எப்பொழுதும் போலவே வாழ்க்கைத் தொடர்ந்து கொண்டு இருந்தது. அப்பொழுது அவர்கள் இருந்த கிராமத்திற்கு சற்று தள்ளி இருந்த ஓரு கிராமத்தில் மிகவும் துக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தனர் ஒரு அந்தணத் தம்பதிகள். நன்றாக இருந்த அவர்கள் வார்க்கையில் சூறாவளி வீசுவது போல அந்த அந்தணன் சொல்ல முடியாத வியாதிகளினால் பீடிக்கப்பட்டு விட்டான். அவன் மனைவியோ இன்னமும் வயதுக்குக் கூட வரவில்லை. அந்த காலத்தில் செய்யப்பட்டு வந்த குழந்தைகள் திருமணத்தில் அவனுக்கு குழந்தைப் பருவத்திலேயே மனைவியாகி, தன் பெற்றோர் வீட்டில் வசித்து வந்தவள். வயதுக்கு வந்ததும் கணவனுடன் சேர்ந்து இருக்க அனுமதிப்பார்கள்.

ஒரு நாள் திடீர் என அவனுடைய பெற்றோர்கள் இறந்து விட்டமையால் அவனைக் கவனித்துக் கொள்ள ஆள் இல்லை. வயதுக்கு வந்ததும்தான் அங்கு போக வேண்டும் என்ற நியதியை உடைத்து எறிந்தாள். வியாதியினால் பீடிக்கப் பட்டு படுத்திருக்கும் கணவனுக்கு பணிவிடை செய்யவில்லை எனில் எதற்கு மனைவி என்ற பட்டம் வேண்டும். உடல் சுகத்துக்கு மட்டும்தானா கணவன், இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று அந்த இளம் வயதிலும் நிதானமாக சிந்தித்தாள். தன் பெற்றோர்களிடம் நியாயத்தை எடுத்துக் கூறிவிட்டு தானே அவன் வீட்டிற்கு சென்று அந்த இளம் பெண் அவனுக்கு சேவை செய்யத் துவங்கினாள். அப்படிப் பட்ட சமயத்தில் எவர் எவரோ அவளுக்கு விஷ்ணுதத்தனின் பெருமைப் பற்றித் கூறியதால் தன் கணவனை அவரிடம் அழைத்துச் செல்ல முடிவு செய்தாள். ஆனால் அவனால் செல்ல முடியாத அளவு உடல் நிலை கெட்டு இருந்தது அவனுக்கு. ஆகவே அவனுக்குத் துணையாக தன் தந்தையை வீட்டில் வைத்து விட்டு தனியாகவே விஷ்ணுதத்தனிடம் சென்று தங்களுடைய நிலைமையைக் குறித்துக் கூறி அழுதாள்.

வந்தவள் நிலையைக் கண்ட விஷ்ணுதத்தன் தன் ஞான திருஷ்டியால் அவனுக்கு வந்திருந்த வியாதி பற்றி அறிந்து கொண்டார். வந்திருந்த வியாதிக்கான காரணம் அவன் செய்து இருந்த அளவற்ற பாபங்களே காரணம் என்பதினால் தத்தர் கொடுத்த மந்திரத்தை பயன் படுத்தி உடனே அவனைக் குணப் படுத்தினாலும் மீண்டும் அவன் அந்த பாபங்களினால் வியாதியை திரும்பப் பெறுவான் என்று தெரிந்து கொண்டு வந்தவளிடம் அவற்றை விவரமாக எடுத்துக் கூறினார். அந்தப் பாபங்கள் தொலைக்கப்பட்டால்தான் அவனுடன் இனிய வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியும் என்று விவரமாக அவர் எடுத்துரைத்ததும் அந்தப் பதிவிரதை தன்னுடைய கணவன் குணம் அடைய தான் என்ன வேண்டுமானாலும் செய்வதற்கு தயாராக இருப்பதாகக் கூறியதால் முப்பத்தி மூன்று வருடங்கள் சில விரதங்கள் இருக்க வேண்டும் என்றார். முன்னரே கூறியபடி தன் கணவன் குணம் அடைய தான் என்ன வேண்டுமானாலும் செய்வதாகக் அவள் கூறியதால் அவளுக்கு அந்த விரதங்களை எடுத்து வைத்து தீட்சைத் தந்தார். கணவன் வீடு திரும்பிய அவளும் அவற்றை முறைப்படி கடை பிடிக்கத் துவங்க விரதத்தின் ஒவ் ஒரு பகுதியும் அவள் செய்து முழுக்க, முழுக்க அவன் வியாதிகளும் அவற்றுடன் விலகத் துவங்கி முற்றிலும் குணம் அடைந்து அந்த மங்கையுடன் சேர்ந்து இனிய வாழகை துவக்கலானான்.

தந்த மந்திரோபாசனையை தத்தர் கூறியபடியே பயன் படுத்தி தன்னால் முடிந்த அளவில் மக்களுக்கு சேவை செய்து வந்தார். அதைக் கண்காணித்துக் கொண்டே இருந்த தத்தாத்திரேயர் மிவும் மகிழ்சி அடைந்து அந்த விஷ்ணுதத்தனின் சக்தியை அவருக்கு அறியாமலேயே பெருக்கிக் கொண்டு இருந்தார். அதுவே தத்தரின் பெருமைக்குச் சான்று. ஆக தத்தரிடம் சரணாகதி அடைந்தவர்கள் வாழ்வில் வளம் மட்டும் அல்ல நிம்மதியையும் பெறுவார்கள் என்பதில் ஐயம் இருக்க முடியுமா? தத்தரின்

புகழை இப்படிக் கூறுவர். ஓ, தத்தத்திரேயா, பேரானந்தத்தைத் தரும் சிவனும், கிருஷ்ணருமானவனே, நீ நிர்வாண கோலத்தில் இருந்தாலும் நீயே குழந்தையானவர், அமைதிக்கு வழி காட்டுபவர், கடல் போன்ற விவேகத்தைத் தருபவர். எங்களுக்கு நீயே தேவன், கருணாமயி, எங்களைக் காத்து அருள்பவன், உன் நினைவோடு என்றென்றும் நாங்கள் வாழ்வதற்கு நீதான் அருள் புரிய வேண்டும்’.

## அவதூத கீதை

உண்மையிலேயே அவதூத கீதை என்ற நூலை எழுதியது என்பது யார் என்பது எவருக்கும் தெரியாது. அதன் மூலப் பிரதி இருப்பதாகத் தெரியவும் இல்லை. தத்தாத்திரேயர் மகா பெரும் யோகி என்பதால் அவர் வாய் மூலம் பதஞ்சலி என்ற முனிவருக்கு போதித்ததை மெல்ல மெல்ல வாய் மொழிச் சொல்லாக புழக்கத்தில் வந்து இருக்கலாம் என்றும் அதற்குப் பின்னரே எவரோ அதை ஒரு சமஸ்கிருத நூலாக எழுதி இருக்க வேண்டும் என்றே நினைக்கின்றனர். அவதூத கீதை நம்க்கு பொருந்தாது. அது முற்றிலும் அனைத்து உலக வாழ்வையையும் துறந்துவிட்ட சாதுக்கள், சன்யாசிகளுக்காக கூறப்பட்டது. தத்தாத்திரேயரைப் பொறுத்த மட்டில் நிர்வாணத்தை ஏற்றவர்கள், அதாவது எவன் ஒருவன் முற்றிலும் தம்மை சரீரத்தின் வசியத்தில் இருந்து விலக்கிக் கொண்டு தான் ஒரு ஆத்மா என்பதை உணர்ந்து நடக்கின்றானோ அவனே பிரும்மனை நெருங்க முடியும் என்பதை போதித்தவர்.பற்றற்ற வாழ்வை மேற் கொள்ள வேண்டியதின் அவசியத்தை மீண்டும் மீண்டும் பலர் மூலம் விளக்கியவர். ஒரு விதத்தில் பார்த்தால் அவதூத கீதையின் கருத்துக்கள் முழுவதும் உபனிஷத்துக்கள் மற்றும் பகவத் கீதையை ஒத்தே உள்ளது. அது 9 அல்லது 10 ஆம் நூற்றாண்டில்தான் இயற்றப் பட்டு இருக்க வேண்டும் என்பது போல் அந்த பாடல்களின் வார்தை உபயோகிப்புக்கள் காட்டுகின்றன. ஆஹம் பிரும்மஸ்மி அல்லது சிவோஹோம் என்ற ‘நானே பிரும்மன்’ என்ற தத்துவத்தை

உள்ளடக்கியதே அவதுாத கீதை. ஆந்த அவதுாத கீதையின் மொத்த சாரம் இதுதான்.

‘இந்த உலகில் உள்ள அனைத்துமே உருவமற்ற ஒன்றான அவன் மட்டுமே. நான் என்ற உண்மையே அது. உருவமற்றவன் அவன் , கானல் நீரைப் போன்று காட்சி அளிக்கும் அவன் இருக்கிறான் என்றால் நான் எப்படி வழிபடுவது என்கின்றாயா, உருவமற்ற உலகமே நானாகவே எனக்குள்ளேயே அடங்கி இருக்கும் பொழுது நீ ஏன் கவலைப் பட வேண்டும் , உன் எண்ண அலைகளுக்கு அப்பால் அல்லவா நான் இருக்கின்றேன். மனதில்தான் எத்தனை எண்ண அலைகள், எத்தனை வண்ண நினைவுகள், நிற்காத கடல் அலைகளைப் போல, எல்லையற்றுப் படர்ந்து உள்ள வானத்தைப் போல தொடர்ந்து கொண்டே இருக்கின்றதோ அவை, ஆனால் உனக்குத் தெரியுமா உன்னுள் தோன்றும் உருவமற்ற இலட்சக் கணக்கான அந்த சிந்தனைகள் கூட என்னால்தான் என்று. ஆனால் அவற்றுக்கு எல்லாம் அப்பாற்பட்டவன் நான்.

எனக்கு எந்தக் கர்ம வினைகளோ, நல்லவை, கெட்டவை என்றோ எதுவும் இல்லை. உன் உள்ளுக்குள்ளும் வெளியிலும் இருப்பது யார் தெரியுமா, அது நீயும் அல்ல, நானும் அல்ல. அது அந்த பரமாத்மனே. அவனே சிவன். உனக்கும் எனக்கும் உறவும் இல்லை, பிரிவும் இல்லை. உன்னைப் பார்க்கவோ, தொடவோ, உணரவோ, ஏன் முகர்ந்து பார்க்கவோ கூட முடியாது. நான் என்ற உன்னுள் இருக்கும் உனக்கோ எவரும் இல்லை. நீ என்ற உன் உள்ளத்தில் உள்ள ஆத்மா ஒரு சுதந்திரப் பறவை. உனக்கு பிறப்பால், இறப்பால், துக்கமும் இல்லை, மகிர்ச்சியும் இல்லை. எதற்குமே தொடர்ப்பு இல்லாத நீ ஏன் இப்படி இடிந்து போய் அமர்கிறாய் , அனைத்து உலக நிகழ்சிகளையுமே பற்று இன்றி ஒரே மாதிரியாக நோக்கும் பொபுது மட்டுமே நீ சுதந்திரமானவன் என்பது புரியும். உண்மையின் உருவமே

நீதான். உனக்கோ பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. அப்படி இருக்கும் பொபுது நான் யார் எனவும், நான் யார் என்பது தெரியும் என்றும் நீ என் எண்ண வேண்டும்.

நான் நானாகவே இருக்கின்றேன். நானே சிவன் என்பதினால் நான் எப்படி அவரைப் பார்த்து இருக்க முடியும், பார்த்திருக்க முடியாத அவரை நான் எப்படி வணங்க முடியும், எப்படி ஒரு பாத்திரம் உடைந்தால் அதன் உள்ளுக்குள் உள்ள கண்களுக்குப் புலப்படாத காற்று வெளியில் உள்ள காற்றுடன் கலந்து கண்களுக்குப் புலப்படாமல் கலைந்து விடுகின்றதோ அப்படித்தான் மனமும் இறைவனுடன் கலந்து விட வேண்டும். என்னைப் பொறுத்தவரை அதில் இரண்டு உருவங்களுக்கு இடமே இல்லை. உலகம் முழுவதும் வியாபித்து உள்ளது ஒன்றே ஒன்றுதான். அதில் நான் என்றோ, நீ என்றோ எதுவும் கிடையாது. நான் என்பது நானாகவே உள்ள அவனுக்கு மட்டுமே தெரியும். மாயா, மாயா என்கின்றோமே, அதற்கு என்ன உருவம், அப்படி மாயா என்ற ஒன்று இல்லை. ஏன் என்றால் அதுவும் கூட நான்தான். ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை என்ற எனக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. பிரும்மனே அனைத்து உலகமும். அந்த பிரும்மனும் நானேதான். நான் என்பது ஆணா இல்லைப் பெண்ணா எனப் யோசிக்கின்றாயா, அதற்குதான் உருவம் இல்லை என்றேனே. நான் சுதந்திரமானவன், எந்த கட்டுப்பாட்டென்ற வீட்டுக்குள்ளும் அடைபட்டுக் கிடக்காதவன். அந்த பிரும்மனே நான்.

ஒரு இடத்துத் தண்ணீரும் இன்னொரு இடத்துத் தண்ணீரும் ஒன்றாகக் கலந்தால் இரண்டும் தண்ணீர் ஆகத்தான் இருக்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. ஆகாயம் உலகம் முழுவதும் வியாபித்து இருப்பது போலத்தான் நானும் உலகம் முழுவதும் பரவி உள்ளேன். எனக்கு ஆசிரியர் என்று எவரும் இல்லை, சிஷ்யர்களும் இல்லை. எந்தத் தொழிலும் இல்லை.

உள்ளுக்குள் உள்ள மனமே நீ ஏன் அழுகின்றாய், எவருக்காக அழுகின்றாய், நான் நானேதான் என்று நினைத்துக் கொள். மனதையும் உன் ஆத்மா என நினைக்கின்றாயே இரண்டையும் ஒன்றாக்கிக் கொள். அமுதம் போன்ற உணர்வு கிடைக்கும். எப்போது பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை, தொழிலும் இல்லை, கடமையும் இல்லை, அனைத்தும் அவரே என்று ஆகிவிட்டதோ பின் அவரை ஏன் பிரித்துப் பார்க்கின்றாய், உலகம் முழுதும் ஒன்று போலவே உள்ளது. மாயா என்பதே ஒரு மாயைதான். இந்த வையத்தில் பிரிவு இல்லை. அனைத்துமே அந்த பிரும்மான சிவம்தான். மனமே, நான் என்பதற்கு அன்னையும் இல்லை, தந்தையும் இல்லை, மகனும் இல்லை, மகளும் இல்லை, சொந்த பந்தம் என்று கூற எதுவும் இல்லை. இரவும் பகலும் இல்லை. துயரமும் இல்லை. மகிர்சியும் இல்லை என்னும் பொழுது என் துயரத்தில் முழுக நீ ஏன் நினைக்கின்றாய்,

ஒரு யோகி எப்படி இருக்க வேண்டும் தெரியுமா, நேற்றல்ல, இன்றல்ல, நாளை கூட எனக்கு ஒன்றும் இல்லை என எவற்றிலும் பற்றின்றி, எதனுடனும் ஐக்கியம் ஆகாமல் இருக்க வேண்டும். தனியாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். மனம் அமைதியாக ஆனந்தமாக, நிறைவுடன் இருக்க வேண்டும். நானே சிவம். பெயர்களுக்கெல்லாம் அப்பால், பேச்சுக்களுக்கெல்லாம் அப்பால், ஐம்புலன்களுக்கும், எண்ணங்களுக்கும் எல்லாம் தாண்டி நான் இருக்கிறேன். நகைகளுக்கு ஆசிரியர் என்ற ஒன்று உண்டா, அது செய்வதைப் பொறுத்துத்தானே பளபளக்கிறது. நாம் நம்மை அதாவது நம் மனதை ஒரு ஆகாயம் போல நிர்மலமாக, ஒரு தண்ணீரைப் போல சுத்தமாக, நெருப்பைப் போல ஜொலித்துக் கொண்டு நெருங்க முடியாதபடி வைத்திருக்க வேண்டும். எந்த நிலையில், எங்கிருந்தாலும் அதனால் பாதிக்கப் படாமல் இருந்து வர வேண்டும். யோகாவை எதன் மீதும் பற்று கொள்ளாமல் மெல்ல மெல்ல தொடர்ந்து கொண்டிருக்கும் பொபுதுதான் யோகி ஒருவனுக்கு குணா என்ற பற்றில் இருந்து விடுதலை கிடைக்கின்றது.

உன்னை நீயே அறிந்து கொள்ள வேண்டும் எனில் விஷம் போன்ற உலக ஆசைகளைத் தொலைத்து விட வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் சென்று விட்டால் உன் உள்ளத்தின் உள்ளுக்குள்ளேயே அவை அனைத்தையும் உன்னால் உணர முடியும். வெளியில் இருந்து பார்க்கும் பொழுது தேங்காய்க்குள் உள்ளே அதன் சுவையோ, உருவமோ எப்படி இருக்கும் என்று கூற முடியுமா, அப்படித்தான் நீயும் காட்சி தர வேண்டும். உன்னை வைத்திருக்க வேண்டும். ஒரு யோகி ஆத்மாவையும், மற்றும் அனைத்தையும் துறக்கும் பொபுதே அனைத்தையும் பெறுகிறான். எப்பழு ஒரு பாத்திரம் உடைந்தால் அதன் உள்ளுக்குள் உள்ள கண்களுக்குப் புலப்படாத காற்று வெளியில் உள்ள காற்றுடன் கண்களுக்குப் புலப்படாமல் கலந்து விடுகின்றதோ அப்படித்தான் ஒரு யோகியின் மனமும் இறைவனுடன் கலந்து விட வேண்டும். எந்த ஒருவனின் வாழ்கையும் அவன் செய்யும் காரியங்களைப் பொறுத்தே அமைகின்றது. யோகியின் வாழ்வோ அவற்றை எல்லாம் கடந்து இருக்க வேண்டும். தான் செய்ததை எல்லாம் சொல்லிக் கொண்டவண்ணமே தான் யார் என்பதை ஒருவன் காட்டிக் கொள்கின்றான். ஆனால் யோகியோ எதையும் சொல்வதும் இல்லை, செய்வதும் இல்லை. அந்த நினைவுகளுக்கு
எல்லாம் அப்பாற் பட்டவர் அவர். இறைவனுடன் தன்னை இரண்டரக் கலந்தவர். அவருக்குத் தனி வழி இல்லை. அவர் பேசத் தேவை இல்லை. அனைத்தையும் துறந்து விட்டு இறைவனுடன் தன் ஆத்மாவைக் கலந்து நிற்பவர்.

ஒரு குடிசையிலோ, நதிக் கரையிலோ, இல்லை மலைப் பகுதியிலோ எங்கிருந்தாலும் ஒரு யோகி பிரும்மனுடன் கலந்தே இருக்க வேண்டும். அவர் இறுதிப் பயணம் வேதங்கள் மீதோ, தோற்றங்கள் மீதோ, எண்ணற்ற செல்வங்கள் மீதோ இல்லாமலும், உலகின் ஒரு குறிப்பிட்ட இலக்கை

நோக்கியோ அமைவதில்லை. அவர் இறுதிப் பயணம் பிரும்மனை நோக்கியே அமைய வேண்டும். அதனுடன் இரண்டரக் கலப்பதையே தன் வழிப் பயணமாக இருக்க வேண்டும். யோகி ஒருவர் எந்த கடவுளையும் பார்ப்பதில்லை. சிவனோ, சக்தியோ, குண்டலினியோ, மூச்சைப் பிழுத்து பிராணாயம் செய்யவோ எதுவுமே அவருக்குத் தேவை இல்லை. நான் என்பதை உணர்ந்து கொண்டு, அதுவும் பிரும்மனும் வேறல்ல என்பதைப் புரிந்து கொண்டு இருப்பவரே உண்மையான யோகி. சிவனுக்கு உருவம் இல்லை என்பதினால் அவருக்கு எந்த வண்ணமும் கிடையாது. நானே சிவன். எனக்கோ எந்த சொந்தமும் பந்தமும் இல்லை. நான் அஸ்தமனமாகாமல் என்றும் ஒளி தரும் சூரியன். அமிர்தத்தைப் போன்றவன் நான். எனக்கு வெளிச்சமும் இல்லை, நான் இருட்டிலும் இல்லை, நான் பல உருவங்களில் இருந்தாலும் எனக்கென்று தனி உருவம் இல்லை. பல உருவங்களில் இருப்பதால் நான் வேறுவேறானவன் என்பது அர்த்தம் அல்ல. நான் என்ற உன்னுள் உள்ள நான் என்ற என்னுடைய இரகசியத்தை மட்டுமே உனக்குக் கூறுகிறேன். எனக்கு ஒன்றுமே தேவை இல்லை. துன்பமோ, இன்பமோ, உலக நியதிகளோ என் விவேகத்திற்கு இடையூறு செய்வதில்லை. என்னைக் கடவுள் என்றோ, கடவுள் இல்லை என்றோ கூற முடியாது. அவதூதருக்கு எந்தவித வெட்கமும் இல்லை. இந்த உலகமே சூன்யம். நிர்வாணத் தோற்றம் உடலளவில்தான், மனதில் இல்லை. சாலை ஓரத்தில் கிடக்கும் சிறு கந்தல் துணி மட்டும் போதும் அவர் நிர்வாணத்தை மாற்றிக் காட்ட. அவர் மனநிலை அனைத்துக்கும் அப்பாற்பட்டது. எந்த பந்தமும் அவருக்கு இல்லை. அவருக்கு நெருக்கமும் இல்லை. இந்த உலகமே மாயை. அதுவும் ஒரு கானல் நீரைப் போன்றதே.

**ஓம்...தத்தத்திரேய நம:**

## தத்தாத்திரேயர் சரித்திரம் நிறைவு பெற்றது

[பின்னுரை : இந்த புத்தகம் வெளியான கதை ........]

என் வாழ்கையில் பல வினோதமான சம்பவங்கள் நடந்து உள்ளன. ஏன் அவை அப்படி நடந்தன என்றோ எப்படி நடந்தன என்றோ தெரியவில்லை. ஆனால் நடந்த ஒவ்ஒன்றுக்கும் ஒரு விசித்திரமான பின்னணி இருந்தன. அந்த பின்னணியில் எழுந்ததுதான் இந்தப் புத்தகமும். என் வாழ்வில் ஒரு நீருபூத்த நெருப்பாக கடந்த சில வருடங்களாக இருந்த தத்தாத்திரேயர் மீதான மன பக்தி இப்படி அவரைப் பற்றி ஒரு புத்தகம் எழுதும் அளவில் என்னை கொண்டு சென்றது மட்டும் இல்லை அதை தன் அவதாரமான கணபதி சச்சிதானந்த ்வாமிகளின் அருளைப் பெற்றுக் கொண்டு எழுதும்படி அனுக்கிரகம் புரிந்து உள்ளார் என்பதை எண்ணும் பொழுது ஏற்பட்ட மன மகிழ்சிக்கு எப்படி உருவம் தர முடியும்? என் வாழ்க்கையில் நடந்த அனைத்தும் ஒரு விபத்து போலவே உருவானவை என நான் எண்ணுவதில் வியப்பேது ? உண்மையில் நான் ஒரு  எழுத்தாளன் ஆவேன் என நினைத்தும் பார்த்தது இல்லை.

சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நான் இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் இருந்த தேவாஸ் என்ற மாவட்டத்தில் மத்திய அரசு வேலையில் இருந்த பொழுது கடைசி பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் எனக்கு மிக நெருக்கமாக ஆயினர் சில மராட்டிய நண்பர்கள். அவர்கள் விடுமுறை நாட்களில் தத்த மந்திர் ( தத்தாத்திரேயர் ஆலயம் ) போகிறேன் என்று கூறி விட்டுப் போவார்கள். நானும் அவர்களுடன் கறிகாய் கடைகள் வரை சென்று விட்டு கறிகாய்கள் வாங்கிய பின் திரும்பி வந்து விடுவேன். ஒரு நாளும் தத்த மந்திர் எப்படி இருக்கும் என அவர்களிடம் கேட்டது இல்லை. அவர்களும் என்னை அழைத்ததும் இல்லை. ஆனால் மெல்ல மெல்ல என் மனதில் இனம் புரியாத ஒரு பிடிப்பு தத்தாத்திரேயரிடம் ஏற்படத் துவங்கியது. அதாவது தத்தாத்திரேயர் என்ற பெயரைக் கேட்டால் மனது மகிழ்சி அடைந்தது.

ஆண்டு நினைவு இல்லை. கலாவல்லி என்ற ஒரு பத்திரிகை எனக்கு வந்து கொண்டு இருந்தது. அதில் நாகராஜ சர்மா என்பவர் தத்த தரிசனம் என்று எழுதி வந்தார். அதை விடாமல் படித்தேன். ரேணுகா தேவி, தத்தத்திரேயர், பரசுராமர்  மற்றும் நெல்லி மரம் என்ற வார்த்தைகளைக் படித்த பொழுது மனதில் இனம் புரியாத

இன்பம் ஏற்பட, படிக்கப் படிக்க இன்னமும் படிக்க வேண்டும் எனத் தோன்றியது. கலாவல்லியை அதற்காகவே விரும்பிப் படித்தேன். நடுவில் அது வருவது நின்று விட்டது. நாட்கள் நகர்ந்தன. கடைசி சில வருடங்களாக அலுவலக விஷயமாக அடிக்கடி வெளி இடங்கள் செல்ல நேர்ந்தது. அப்பொழுது ஒரு முறை பெங்களூரில் ஒரு கடையில் கணபதி சச்சிதானந்த ஸ்வாமிகள் எழுதிய தத்தாத்திரேயர் சரித்திரம் புத்தகம் கிடைக்க அதை வாங்கிப் படித்தேன். மனதுக்கு மிகவும் பிடித்து இருந்தது.

அப்போதுதான் கணபதி சச்சிதானந்த ஸ்வாமிகளை காண வேண்டும் என மனம் நினைத்தது. மனதோடு நின்றது. நடக்கவில்லை பல காரணங்களினால். இத்தனைக்கும் மைசூருக்கு பலமுறை அலுவலக சம்மந்தமாகப் போய் இருந்தேன். இப்படியே தத்தாத்திரேயருடன் மனதில் நெருங்கத் துவங்கியயும் ஆலயம் சென்றதில்லை. ஒரு முறை உஜ்ஜயினி சென்று விட்டுத் திரும்பிக் கொண்டு இருந்த பொழுது வழியில் பாமன்கேடா என்ற ஒரு கிராமத்தில் இருந்த ஆலயம் துாரத்தில் தெரிந்தது. டிரைவரிடம் அந்த கோவிலுக்குப் போய்விட்டு திரும்பலாம் என்று கூறிவிட்டு அங்கு சென்றேன். என் மனைவியும் உடன் இருந்தாள். அது தத்தாத்திரேயர் ஆலயம்தான். தத்தரின் சிலைக்கு எதிரில் கீழே உலோகத்திலான பிரும்மாண்டமான ஆமை இருந்தது. எங்கள் இருவருக்குமே அந்த ஆமை மற்றும் தத்தர் ஆலயம் இரண்டுமே மிகவும் பிடித்திருந்தன. அந்த ஆலய பண்டிதர் மராட்டியர். அரை குறை தமிழில் தத்தரின் பெருமைகளைப் பற்றிக் கூறுவார். அது முதல் பல முறை அங்கு சென்றோம். பிறகு உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்றதும் பெங்களூர் வந்து வசிக்கலானேன். தத்தரைப் பற்றிய பல புத்தகங்களைப் வாங்கிப் படித்தேன். இணையதளங்களில் தேடினேன். மைசூர் சென்று கணபதி சச்சிதானந்த ஸ்வாமிகளை தரிசித்தேன். அவர் தான் எழுதி இருந்த புத்தகத்தையும் தந்து அதில் இருந்த விஷயங்களைப் பற்றியும் எடுத்துக் கொண்டு எழுதுமாறு ஆசி கூறினார். என் மனதில் அன்று நான் அடைந்த மகிழ்சிக்கு எல்லையே இல்லை. அவர் கொடுத்த புத்தகங்களில் இருந்தும் சில விஷயங்களைப் பெற்றுக் கொண்டு எழுத ஆரம்பித்தேன். புத்தகம் முடிந்தது. எழுதி வைத்து மூன்று ஆண்டுகள் ஆகி விட்டன. திடீரென இனம் புரியா காரணத்தினால்

துர்காதேவி அம்மன் இணையதளத்தின் (***www.durkadevi.com***) மூலம் ஏன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு உள்ளார் தத்தாத்திரேயர் என்பதை நினைக்கும் பொழுது பிரமிப்பாக உள்ளது. எத்தனை வருட என் கனவு பலித்துள்ளது! தான் நினைக்கும் பொழுது மட்டுமே தத்தர் வெளியே வருவார் என்பது தீர்கமாகப் புரிகின்றது.

தத்தத்திரேயர் துணை

சாந்திப்பிரியா

பெங்களூர், இந்தியா

---

*இது குறித்து உங்களுடைய மேலான கருத்துக்களையும் விமர்சனங்களையும் எதிர் பார்த்து நிற்கிறேன்.*

**nrj1945@gmail.com and nrj_1945@yahoo.com**